விலை ரூபா 20 பக்கங்கள் 32

உதயன்

சுடர் 31 கதிர் 047 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 27, செவ்வாய்க்கிழமை 12.01.2016

28° - 24°
மேக மூட்டம்

கஞ்சா வைத்திருந்த இளைஞருக்கு 4 மாதக் கடூழியம்

யாழ்ப்பாணம், ஜன.12 கஞ்சா வைத்திருந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் நேற்று நான்கு பக். 26

கூட்டமைப்பின் முதலமைச்சர் வேறெங்கும் இயங்கக்கூடாது

விக்கியிடம் அழுத்திக் கூறினார்கள் மாகாண சபையின் உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜனவரி. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராகவே நீங்கள் செயற்பட வேண்டும். இந்தப் பெயரைப் பயன்படுத்திக்கொண்டு வேறு தளங்களில் நீங்கள் இயங்குவதை நாம் விரும்பவில்லை. எங்களுடைய முதலமைச்சராகவே இருக்கவேண்டும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அழுத்தம் திருத்தமாக முதலமைச்சருக்கு நேற்று எடுத்துரைத்துள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கும், ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல், முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. அமைச்சர்கள், அவைத் தலைவர் தவிர்த்து ஏனைய ஆளும் கட்சி உறுப்பினர்களால் நேற்று இரண்டாவது தடவையாகவும் இந்தக் கூட்டம் பக். 26

> உங்களை யாரோ சிலர் தவறாக வழி நடத்த முயற்சிக்கின்றனர். இதிலிருந்து விடுபட்டு நீங்கள் மீண்டும் எங்களின் முதலமைச்சராக எங்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும்.

தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு புதிய அரசமைப்பில் வேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசால்கொண்டு வரப்படவுள்ள புதிய அரசமைப்பில், தமிழ் மக்களின் வேணவாக்கள் உள்ளடக்கப்படவேண்டும். அதே வேளை, தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வுகளுடனான நிரந்தர அரசியல் தீர்வும் இந்தப் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட பக். 26

படைகளுக்குத் தண்டனை புலிகளுக்கோ விடுதலை

இதுவே நல்லாட்சி அரசின் தேவை என்கிறார் மகிந்த

கொழும்பு, ஜன. 12

புலிகளை விடுதலை செய்வதும், இராணுவத்தைத் தண்டிப்பதுமே இந்த நல்லாட்சி அரசின் தேவை. அதற்கு ஜனாதிபதியும் சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்ய முயன்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் சிவராஜா பக். 26

முச்சந்தி முரளி

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யலாமோ....?

மாணவன் தாக்கி பிரதி அதிபர் படுகாயம்

கொழும்பு, ஜன. 12

மாணவன் ஒருவனின் தாக்குதலில் படுகாயமடைந்த பாடசாலையொன்றின் பிரதி அதிபர், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காலிப் பிரதேசப் பாடசாலையொன்றில் இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று முற்பகல் வேளையில் இடம் பெற்றுள்ளது. பக். 26

தமிழீழக் கோரிக்கை முன்வைத்தால் அது குறித்தும் அறிக்கையிடப்படும்

அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்தறியும் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

புதிய அரசமைப்பு வரைவு தொடர்பில் மக்களிடம் கருத்தறியும்போது, தமக்கு தமிழீழம் தான் வேண்டும் என்ற கோரிக்கையை வடக்கு மக்கள் முன்வைக்கும் பட்சத்தில், அந்தக் கருத்தும் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

இவ்வாறு புதிய அரசமைப்பு வரைவு குறித்து மக்களிடம் கருத் தறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவரான சட்டத் தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

மக்களால் ஏன் இவ்வாறான தொரு கோரிக்கை முன் பக். 26

யாழ்., வன்னி தளபதிகள் திடீரென்று இடமாற்றம்

கொழும்பு, ஜன. 12

யாழ்.மாவட்டம் மற்றும் வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதிகள் திடீர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டிசில்வாவின் பணிப்புக்கு அமைய நாடளாவிய ரீதியில் 81 இராணுவ அதிகாரிகளுக் குக் கடந்த 9 ஆம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே, யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிராந்தியத் தளபதிகளுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

15 மேஜர் ஜெனரல் பக். 29

போர் இல்லை என்பதற்காக இராணுவத்தைக் கலைப்பதா?

விமானங்களை மட்டுமல்ல கப்பல்களையும் வாங்கவுள்ளோம் என்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜன. 12

நாட்டில் போர் இல்லை என்பதற்காக இராணுவக் கட்டமைப்பை கலைத்துவிட முடியுமா என்று கேள்வி எழுப்பியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, போர் விமானங்கள் மாத்திரமல்ல ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களையும் பக். 29

பெப்ரவரி முற்பகுதியில் இலங்கைக்கு ஹுசேன்

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தகவல்

கொழும்பு, ஜன.12

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்தத் தகவலை நேற்று பக். 26

மாணவி வித்தியா கொலை வழக்கு; அறிக்கைகள் வரவேயில்லை

யாழ்ப்பாணம், ஜன. 12

கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப் பட்ட புங்குடு பக். 26

ஒருங்கிணைப்புக் கூட்டத்தை ஒத்திவைக்குமாறு கோரிக்கை

வடக்கு முதலமைச்சர் விடுத்தார்

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தை ஜனவரி 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மாவட்ட அரச அதிபரைக் கோரி பக். 29

வடக்கு-கிழக்கு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு விசேட நிதியம்

விரைவில் அமைக்கப்படும் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜன. 12

போரினால்பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு விசேட நிதியமொன்றை விரைவில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய இளைஞர்சம்மேளனப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

நாட்டின் பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு தேவை

இந்தியத்துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு, ஜன.12
இந்திய-இலங்கை மீனவர் களுடைய பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். எதிர்காலத்தில் இது மாதிரியான பிரச்சினைகள் இருக்கக் கூடாது இவ்வாறு தெரிவித்தார் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன்.
புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரியில் நேற்றுமுன்தினம் மலரட்டும் புது வசந்தம் - 2016 என்னும் பண் பாட்டு நிகழ்வு நடைபெற்றது. அதில் இந்திய துணைத் தூதுவர் கலந்து கொண்டார். அங்கு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது-
வடமாகாணத்தில் கிராமங்கள் தோறும் கலை கலாசாரத்தை வளர்க்கவேண்டும்அவர்களுக்கு உற்சாகத்தைக்கொடுக்கவேண் டும் என்ற எண்ணத்திலேயே இந்திய துணைத்தூதரகம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தது.
இந்திய அரசைப் பொறுத்தமட் டில் முடிந்த வரைக்கும் குறிப் பாகப் போருக்குப் பின்னர் நிறையவேலைத்திட்டங்களைச் செய்து வருகின்றோம். குறிப் பாக இந்திய வீட்டுத்திட்டம். இந்திய வீட்டுத்திட்டத்தைப் பொறுத்த மட்டில் உலகத்தி லேயே ஒரு நாடு இன்னொரு நாட்டுக்காக இத்தனை வீடு களை இலவசமாகக் கட்டிக் கொடுப்பதென்றால் அதை நான் ஒரு பெரிய விடயமென்றே கூறு வேன்.
வடமாகாணத்துக்கு மட்டும் 42 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகின் றன. கிட்டத்தட்ட அதனுடைய வேலைத் திட்டங்களை முடித் துள்ளோம்.
இந்திய- இலங்கை மீனவர்க ளுக்கு இடையேசில பிரச்சினை கள் இருப்பதாக அறிய முடிகி றது. இதற்கெல்லாம் நாம் ஒரு தீர்வுகாணவேண்டும். இதனைத் தீர்ப்பதற்கு இருபக்கஒத்துழைப் பும் தேவை என்றார்.
(ற-ஜ-ரி7.21)

கடற்படையின் தயவுடன் மயிலிட்டி துறைமுகம் ஊடாக வர்த்தகம்

மீன்பிடிக்கு அனுமதி மறுப்பு எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.12
மீனவர்கள் தொழில் செய்ய அனு மதிக்கப்படாத மயிலிட்டித் துறை முகம் ஊடாக, வர்த் தகர்கள் மட் டும் கடற்படையி னரின் உதவி யுடன் கப்பல் மூலம் பொருள்கள் இறக்குவது அம்பலமாகியுள் ளது.
வலி.வடக்கின் உயர் பாதுகாப்பு பகுதியாக முப்படையினராலும் அபகரித்து வைத்திருக்கும் பிர தேசங்களில் வாழ்ந்த மக்கள், முகாம்களில் தவித்து வரும் பொருள்களை இறக்கு வதற்கு எவ்வாறு அனுமதிக்கப்படுகின்ற னர் என நீண்ட நாள்களாக கேள்வி எழுப்பப்பட்டு வந்தது.
இந்த நிலையில் நேற்றைய தினம் கடற்றொழில் அமைச் சரை அழைத்துச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறித்த துறைமுகம் கப்பல் மூலம் எடுத்துவரப்படும்பொருள் கள் இறக்கப்படுவதை அமைச் சருக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சூழலில் மயிலிட்டி பிர தேசத்தை சேர்ந்த மீனவர்கள் தமது துறை முகம் ஊடாக தொழில் செய்ய கடற்படையினர் அனுமதி வழங் கவில்லை.
இவ்வாறு மீனவர்களைத் தொழி லுக்கு அனுமதிக்க முடியாது எனத் தெரிவிக்கும் கடற்படையி னர், யாழ். குடா நாட்டின் வர்த் தகர்கள் கப்பல் மூலம் இந்தியா வில் இருந்து எடுத்துவரப் படும் குறித்த துறைமுகத்தை அண் மித்துத் தரித்திருந்து நின்ற கப் பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கான பணியாளர் களும் தரையில் காத்திருந்த னர். குறித்த கப்பலில் இந்தியா விலிருந்து சீமெந்து ஏற்றி வரப் படுவது வழமை என பொருள் களை இறக்கும் பணி யில் ஈடுப டும் ஊழியர்கள் தெரிவித்த னர்.
(வ-10)

நவாலியூர் சபாரத்தினசிவம் காலமானார்

இசைஞானதிலகம் நவாலியூர் சிவஶ்ரீ இ.சபாரத்தினசிவம் நேற் றுக் காலமானார்.
அருள்ஞான பனுவல், பஜனை மணிபோன்றபட்டங்களையும்விரு துகளையும் பெற்ற சிவஶ்ரீ இ.சபா ரத்தினசிவம் கடந்த 30 ஆண்டு களுக்கு மேலாக ஆன்மிகப்பணி, இசைப்பணி மேற்கொண்டு வந் தார். நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலய பிரதம குருவா கவும் ஏனைய ஆலயங்களின் குரு வாகவும் சிறப்பாக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-50)

டெங்கு ஒழிப்பு செயற்பாடு கோப்பாயில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன.12
கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட் பட்ட பகுதியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளமை இனங் காணப்பட்டதை அடுத்து அதைத் தடுக்கும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.
கடந்த சனிக்கிழமை இந்தப் பிரதேசத்தில் ஒலி பெருக்கி மூலம் டெங்கு நோயைக் கட்டுப் படுத்துவதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அறிவிக்கப் பட்ட பிரதேசத்தில் உள்ள மக் கள் தமது குடியிருப்பு சுற்றாடல் களை துப்புரவாக வைத்திருக் குமாறும் மற்றும் நுளம்பு பெரு காதவாறு சுற்றுச் சூழல்களி லுள்ள பற்றைகள் மற்றும் இதர இடங்களைத் துப்புரவாக்குமா றும் ஒலிபெருக்கி மூலம் அறி விக்கப்பட்டது.
தற்போது சுகாதரப் பகுதியின ரின் சோதனையின்போது சுற் றுச்சூழல்துப்புரவு இன்றிகாணப் படும் குடியிருப்பாளர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
இந்தப் பிரதேசத்தில் தற்போது டெங்குத் தொற்று அதிகரித்து இருப்பதால் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.
இந்த வாரத்தில் இந்தப் பிர தேசத்தில் டெங்கு சம்பந்தமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.
(ற-ஜ-17)

மஞ்சள் காமாலையால் சிறுமி சாவு

மஞ்சள் காமாலை ஏற்பட்டு 9 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந் துள்ளார். கொடிகாமம் கெற் பேலி யில் இந்தச் சம்பவம் நடந்துள் ளது.மஞ்சள் காமாலை ஏற்பட்ட சிறுமிக்கு நாட்டு வைத்தியம் மேற் கொள்ளப்பட்டது எனத் தெரி விக் கப்பட்டுள்ளது. சிறுமியின் திடீர் இறப்புத் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ற-ஜ-9)

தாதியர் பயிலுனர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கல்

சுகாதார போசணை மற்றும் சுதேசவைத்தியத்துறை அமைச் சால் நடத்தப்படும் தாதியர் பயிற் சிக் கல்லூரியில் பயிற் சிக்கு இணைத்துக் கொள்பவர் களுக் கான நியமனக் கடிதங்கள் எதிர் வரும் 18 ஆம் திகதி திங் கட்கி ழமை பிற்பகல் 2 மணிக்கு மகர கம தேசிய இளைஞர் சேவை மன் றத்தில் வழங்கப்படவுள்ளது.
சுகாதார போசணை மற்றும் சுதேசவைத்தியத்துறை அமைச் சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தேசிய தாதியர் டிப்ளோமா பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நிய மனக்கடிதங்கள் வழங்கப்பட வுள்ளன. பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அமைச்சு அழைப்புக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.
தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் மூன்றுவருடபயிற்சியைப்பெற்று தேசிய தாதியர் டிப்ளோமா சான் றிதழைப் பெறும் இவர்கள் பயிற் சியின் பின்னர் அரச வைத்தி யசாலைகளில் தாதியர்களாக நியமனம் பெறுவர். என்பது குறிப்பிடத்தக்கது. (ற-ஜ-1)

திறப்பு விழா

இலங்கைப்போக்குவரத்துச்சபை யின்பருத்தித்துறைச்சாலையின் கருமபீடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதான பிராந்திய முகா மையாளர் தலைமையில் நடை பெறும்என பருத்தித்துறைசாலை யின் முகாமையாளர் க.கந்த சாமி தெரிவித்துள்ளார்.இதனூ டாக தூர சேவைக்கான ஆசனப் பதிவும் பருவகாலச்சீட்டுவிற்பனை என்பன நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-ஜ)

மயிலிட்டித் துறைமுகத்தை பார்வையிட்டார் அமரவீர

யாழ்ப்பாணம், ஜன.12
இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயி லிட்டித் துறைமுகத்தை மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வை யிட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர் வாழ்வுச் சங்கத்தினரையும் அவர்கள் சந்தித்துள்ளனர்.
இதன் போது மயிலிட்டித் துறை முகம் விடுவிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் மீன்பிடி அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.
கொழும்பு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று யாழ். மாவட்டத்துக்கு வந்திருந்தார். அதன் போது மயிலிட்டி மற்றும் பருத்தித்துறைத் துறைமுகங் களை அவர் நேரில் சென்று பார் வையிட்டார்.
அவர் மயிலிட்டித் துறைமுகத்து க்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ.சரவண பவன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் அமைச்சரு டன் குறித்த பகுதிக்குச் சென்றி ருந்தனர்.
இதன் போது கடற்படை யினர் மயிலிட்டித்துறை முகப் பகுதியில் சுண்ணக் கல்வளர்ந்துள்ளது என்றும் ஒரு மீற்றர் வரை யிலேயே தண்ணீர்காணப்படுகின்றது என்றும் தெரி வித்த துடன், அங்கு பெரும் படகுக ளையோ, பலநாள் கலங் களையோ நிறுத்த முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
இதன்போது வலி.வடக்கு மீள் குடியேற்ற மற்றும் புனர் வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், நீண்ட காலமாக துறைமுகத்தைப் பயன் படுத்தாமல் விட்டமையினால் சுண்ணக்கல் வளர்ந்துள்ளது. இதனைத் தூர்வாருவதன் மூலம் துப்புரவு செய்ய முடியும். இடப் பெயர்வுக்கு முன்னர் ஒரே நேரத் தில் 80 படகுகள் இங்கு கட்டப்பட் டிருந்தன. பெரும் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.
மயிலிட்டிப் பிரதேசத்து மக்களை மீளக்குடியமரச் செய்வதன் மூலம் அதிகளவிலான நலன்புரி நிலையங்களை மூட முடியும். என்பதையும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். அந்தப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்தி, துறை முகத்தை மீள இயங்கச் செய்வ தற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொடர் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர உறு தியளித்துள்ளார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி 2016
கல்வியாண்டுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICBT CAMPUS
JAFFNA

Diploma in IT

- **Full time (2 ½ Months)**
- **Part time (4 Months)**

Those who are waiting for University entrance after A/L can join and fallow the course

Spoken English

Those who needs to improve their English speaking skills can fallow this course.

IELTS
Preparation Classes

Diploma in English

- **Full time (2 ½ Months)**
- **Part time (4 Months)**

Those who are expecting University entrance after A/L and those who wants to enhance their English knowledge for their professional development can fallow this course.

Register
on / before
25th of January 2016

CAN OBTAIN CAMBRIDGE CERTIFICATE

- Conditions Apply -

For more inquiries:
076 928 9810
076 928 978 4



580 Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 4 777 888

யாழ். மண்ணில் இல:580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

*ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
*ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்,
*ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
*ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் 6 மாத கற்கைநெறி

(Trainer Training (teacher Training programme) (யாழில் முதல் முறையாக)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

New batches Start On : 9.am (16.01.2016) சனி (weekend batch)
9.am (18.01.2016) திங்கள் (Week day batch)

பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

Yarl Beauty Academy
அழகுக்கலை பயிற்சிகள்
தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில்
முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்
அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு
Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)

தென்னிந்திய திருத்தல யாத்திரை
தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி,
கேரளா ஊடான யாத்திரை

நாள்கள் 16, ஆரம்பம். 27.01.2016. யாத்திரிகர்கள். 10.

தரிசிக்கும் ஆலயங்கள் சுருக்கமாக திருச்சி, உச்சிப்பிள்ளையார், பிள்ளையார்பட்டி, 9 நவக்கிரக ஆலயங்கள், ஆறுபடைவீடுகள், குருவாயூர், கன்னியாக்குமரி, திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 5 பொற் கோயில், இராமேஸ்வரம், பிரம்மாகோயில், திருப்பதி, மேல்மருவத்தூர், பஞ்சவடி, ஆஞ்சினேயர், மைசூர், சாமுண்டீஸ்வரி, மணக்குள விநாயகர், பத்மநாதசுவாமி, திரு விடைமருதூர், திருவையாறு உட்பட 60இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன், மைசூர், பிருந்தாவனம், பாலஸ், மரீனாபீச், பாண்டிச்சேரி பீச்சும் காணலாம். (ஆலயங்கள் அனைத்திலும் பூசை நேரத்தில் தவறாது தரிசிக்கலாம்)

பெற்றுக்கொள்ளும் சுபாவுக்கு எமது சேவை

இருவழி விமானரிக்கட், மூன்றுவேளை சுத்தமான உயர்தர சைவ உணவு, 2 லீற்றர் குடிநீர், கொழும்பில் இருந்து விமானநிலையம் செல்லவும் திரும்பவும் வாகனவசதி. யாத்திரை முழுவதும் ஏசி. வாகன வசதி. இரண்டுபேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள். ஆலய தரிசன கட்டணங்கள் அடங்கலாக.

விருப்பமுடையவர்கள் விவரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும். ஆலயங்களில் குறுப்பாக எடுக்கும் 50 புகைப்படங்கள் நாடு திரும்பியபின் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.(அன்பளிப்பாக)

விவரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
59, 8/6 செட்டியார்தெரு, கொழும்பு 11
077 768 0102, 077 736 2154

After O\L or A\L

Dip.in Information Technology	DiTEC
Diploma in Office Automation	DOA
Dip. in Pre-Press Desktop Publicating	DTP
Diploma in Pc Applications	DPCA
Adv. Dip. in Hardware & Networking	ADHN
Dip. in Video Production & Multimedia	DVPM
Dip.jn Web Designing & Development	DWD
Dip. in Computerized Accounting	DCA

DMI COMPUTER EDUCATION

வீசேட கட்டணச்சலுகையில்
கணினிக்கற்கை நெறிகள்

AutoCAD , Tally Accounting
Programming - Java , C ,
C++ , V.B.NET

யாழில் முதன்முறை நிலை வகுப்பு
Spoken English

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, (சபாபதி நோல் அருகாமை)	M.M.V. வீதி, (வல்லை வெளியூர்களுக்கு)	No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில்	No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில்	No.19, A9 வீதி, குரும்பசிட்டி (புதிய பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்	நெல்லியடி	சாவகச்சேரி	சுன்னாகம்	கிளிநொச்சி
Tel.: 021-222 4403	Tel.: 021-226 2470	Tel.: 021-227 0775	Tel.: 021-224 1970	Tel.: 021-228 5655

MAJOR II
GLUCOMETER WITH LIFETIME Warranty
Low in Price - High in efficacy

ரூபா 2500 இற்கு வாழ்நாள்
உத்தரவாதத்துடனான
குளுக்கோ மீற்றர் குறைந்த
விலை நிறைந்த வினைத்திறன்
இது மட்டுமல்ல ஒவ்வொரு
மீற்றருடனும் ரூபா 975.00
பெறுமதியான
25 Strips மற்றும்
25 Lancets
இனாம்

நாங்கள் என்றும் உங்களுடன்
VANIKAA SURGICALS
203, Hospital Road, Jaffna.
Phone: 222 0077 | Fax: 222 2445 | Office Mob: 077 442 2367

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

External Degree
GAQ, BA Part I, BA Part II

aat (Srilanka)
Foundation, Intermediate, Final AA1, AA2, AA3
Qualification : G.C.E O/L 6 PASSES
உடன் பதிவுகளைமேற்கொள்ளவும்
MEDIUM – TAMIL & ENGLISH

Chartered
Medium: English & Tamil
Executive Level, Business Level
Qualification: A/L 3 Pass

Further Details
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept
464, Hospital Road,Jaffna.
021 222 3382 / 021 222 9149

March 19 th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்
பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்

IELTS

THIS IS NOT CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

IELTS பாடங்களை படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.

இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Course Schedule

Mon, Tues, Wed, Thur
10 Week
8.30 - 10.30, 5.00 - 7.00

Saturday & Sunday
Duration 10 Week
Time 8.30 - 11.00

IELTS
LIFE SKILLS A1

"IELTS Registration Center for British Council"

British College of English
No.192, Navalar Road Jaffna.(பெரூமான் கோயிலுக்கு சமீபமாக)
Tel: 021 222 0384, 0778803887

வேலைவாய்ப்புக்கள்

உங்கள் மனம் விரும்பும் வேலை கிடைக்கவில்லையா?
பல நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றும் பலன் இல்லையா?
கவலையை விடுங்கள்!
உங்கள் கனவுத் தொழிலை நனவுத் தொழிலாக்க
உடன் தொடர்பு கொள்ளுங்கள்

WIN STAR JOB BANK
(முதற்தர வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)

- Accountant
- Office works
- Cashier
- Receptionist
- Executives
- Part time Jobs

வேலைதேடும் புத்திசாலிகளின் தெரிவு WINSTAR JOB BANK மட்டுமே

WIN STAR JOB BANK
106, Palaly Road, Thirunelveli. 021 320 2789

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPECIAL ADMISSIONS 2016

Celebrating 15 Years

Computing — 4 YEARS

BSc Special (Hons) Degree in Information Technology

Specializations

- Information Technology
- Computer Systems & Networking
- Information Systems
- Software Engineering
- Interactive Media
- Cyber Security

UGC APPROVED



தகைமைகள்:

ஒரே தடவையில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் (இலங்கை / இலண்டன்) மூன்று பாடங்களில் (ஏதேனும் பிரிவில்) சித்தி மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு சோதனையில் சித்தி.

Admissions To Computer Systems and Networking Degree

மேலே குறிப்பிடப்பட்டவாறான தகமைகளுடன் ஆனால் விண்ணப்பதாரிகள் கணிதம் அல்லது பௌதீகவியலில் சித்தியடைநடதிருத்தல் வேண்டும்.

Business — 4 YEARS

BBA Special (Hons) Degree

Specializations

- Human Capital Management
- Accounting & Finance
- Marketing Management
- Quality Management
- Management Information Systems

UGC APPROVED



தகைமைகள்:

ஒரே தடவையில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் (இலங்கை இலண்டன்) மூன்று பாடங்களில் (ஏதேனும் பிரிவில்) சித்தி மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு சோதனையில் சித்தி.

விண்ணப்ப முடிவுத்திகதி:
2016 ஜனவரி 18

Engineering — 4 YEARS

BSc Engineering (Hons) Degree

Specializations

- Civil Engineering
- Electrical and Electronic Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

UGC APPROVED



Entry Requirements

G.C.E. (Advanced Level) Sri Lanka / London - 3 Passes in Math's stream in one and the same sitting and a pass at the aptitude test conducted by SLIIT

Over 20,000 IT Professionals to the Nation

Option 1	Apply online www.sliit.lk/apply	Register Online
Option 2	Download the Application from www.sliit.lk	Send the duly filled Application form to Manager Academic Affairs SLIIT, BoC Merchant Tower, St. Michael's Road, Colombo 03
Option 3	Obtain the Application from any of our Campuses or Centres	

உங்களின் உயர்தர பெறுபேறுகள் வந்துவிட்டதா?
உங்களின் பட்டப்படிப்பினை இப்போதே ஆரம்பியுங்கள்.

நுண்ணறிவு சோதனை:

நுண்ணறிவு சோதனை : 2016 ஜனவரி 24 (மு.ப. 10.00 - மு.ப. 11.00)
அமைவிடம் : அனைத்து இதொநி வளாகங்கள் மற்றும் நிலையங்கள் (கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம்)
மொழி மூலம் : ஆங்கிலம், சிங்களம், தமிழ்

SLIIT
COMPUTING | BUSINESS | ENGINEERING
Member, Association of Commonwealth Universities

BoC Merchant Tower,
#28, St. Michael's Road, Colombo 03
Tel: (011) 230 1904 URL: www.sliit.lk E-mail: info@sliit.lk

(011) 754 4801
(011) 230 1904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

LION.கந்தசாமி சிவபாலன் MJF,J.P(WI)

(தேசபந்து, தேசமாண்ய, லங்காபுத்திர, விஸ்வகீர்த்தி)
(ஓய்வுநிலை இலங்கை வங்கி சிரேஸ்ட முகாமையாளர்)

தோற்றம்
05
.
10
.
1948

மறைவு
11
.
01
.
2016

கரவெட்டி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும், இல.14, கரப்பன்காடு, வவுனியா என்னும் முகவரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாலன் 11.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை- சிவயோகம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நவநிதியின் (ஓய்வுநிலை தொழில் உத்தியோகத்தர்) பாசமிகு கணவரும், சிற்பரன் (பொறியியலாளர் - லண்டன்), நிமலன் (Merchant Nevy Officer) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி, தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜன், அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், திரு.திருமதி தணிகாசலம் (கவிதா ஸ்ரோர்ஸ் பஸ்நிலையம் - வவுனியா), திரு.திருமதி சண்முகராஜா ஆகியோரின் சம்பந்தியும், காலஞ்சென்ற சிவானந்தம் (முன்னாள் பிரதி அதிபர் ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை), சிவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், ஜெயலக்ஸ்மி, சியாமினி ஆகியோரின் மைத்துனரும், கவிதன், ஜீவிதன் (லண்டன்), நிலானி (மருத்துவபீடம் - கொழும்பு), சுஜீவன், சஞ்ஜீவன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, கரப்பன்காடு,
வவுனியா.

(66673)(11,16,18)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு:- 024 222 2515, 077 378 4033 (மகன் - நிமலன்)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
21
.
11
.
1942

மறைவு
14
.
12
.
2015

கடந்த 14.12.2015 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் அன்னபூரணி கனகசபாபதி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (11.01.2016) திங்கட் கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (13.01.2016) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிராத்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம். (இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

64, மணியகாரன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்.

சுப்பையா சுந்தரம்



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சுந்தரம் நேற்று (11.01.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- பொன்னு தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான கந்தசாமி - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வச் சந்திரன் (டென்மார்க்), ரஞ்சினிதேவி (சுவிஸ்), மனோரஞ்சினி (கோண்டா வில்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரஞ்சிதமலர் (சுவிஸ்), ஞானச்சந்திரன் (மலேசியா), பிறேமச்சந்திரன், தனபாலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லத்தம்பி, முத்துத்தம்பி, மார்க்கண்டு, செல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,ரினாஷன்சன், செல்வரத்தினம் (சுவிஸ்), சிவகுமாரன், துஸ்யந்தி(சுவிஸ்), தவராசா(சுவிஸ்), மாலினி (இந்தியா), சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்ரோரியா, இஸபெலா, சபேனா, சோபிகா, லக்சியன், ரகுவரன், ரேகா, ரம்மியா, ஆதுசன், ஆரியன்,பிறேமி, நியோமி, தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலங்காவில் பிள்ளையார் கோயில் வீதி,
திருநெல்வேலி.

(67577)(11,16,18)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் பவானந்தன் (ஆனந்தி)

பிறப்பு
26
.
12
.
1943

இறப்பு
10
.
01
.
2016

கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பவானந்தன் (10.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கைலாசா தம்பதி யினரின் மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - பாக்கியம் தம்பதி யினரின் அன்பு மருமகனும் குணமணியின் அன்புக் கணவரும் அருந்ததி (Canada), அன்பழகன்(Canada), மதியழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியேந்திரன்(Canada - Sathy car care) கௌரி(Canada), ஆகியோரின் அன்பு மாமனாரும் அஞ்சலி(Canada), சாலினி (Canada), அஸ்வினி (Canada), ராம்(Canada), நரேன்(Canada), நர்மிதா (Canada) ஆகியோரின் அன்பு பேரனும் இரட்ணசிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமரசா, இந்திரா ஆகியோரின் மைத்துனரும் மரீனா, ரூபிகா, விதுசன் ஆகியோ ரின் பெரியதகப்பனும் உமாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.01.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.108, கண்டிவீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 232 5126

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதிபர் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி பெற்றோர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ். செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை அதிபர் இடமாற்றத்தை நிறுத்துமாறு வலிறுத்திப் பெற்றோரும், சமூக ஆர்வலர்களும் முதலமைச்சர் செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும் செல்வி சாந்தினி மாணிக்கவாசகத்துக்குக் கல்வி அமைச்சால் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தமது பாடசாலை மாணவரின் நன்னடத்தை மற்றும் கல்வி முன்னேற்றத்துக்கும் அரும்பாடுபட்ட இவரை, ஒய்வு பெறும் வரையில் தமது பாடசாலையில் பணிபுரிவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் எனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை முன்பாக நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து பதாகைகளுடன் ஊர்வலமாகச் சென்ற இவர்கள், வடமாகாண முதலமைச்சர் அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். தமது கோரிக்கை அடங்கிய மனுவையும் முதலமைச்சர் அலுவலகத்தில் கையளித்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட பெற்றோர்கள் தெரிவித்ததாவது- 2006ஆம் ஆண்டு இவர் பதவியைப் பெறுப்பேற்றபோது பாடசாலையில் 23 பிள்ளைகளே இருந்தனர். இன்று இவரின் விடா முயற்சியால் 136 பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். பாடசாலை மட்டுமன்றி இலவசமாக வீட்டுக் கல்வியையும் போதித்தவர்.

சமயம்என்பதுசிறுவயதிலேயேமாணவர் மத்தியில் விதைக்கப்படுவதுடன், நல்லொழுக்கம் பேணப் படவேண்டும் என்பதால் சமயம் சார்ந்தும் சாயி சிந்தனையைப் போதித்தார். இவரால்தான் எமது பாடசாலையில் முதலாவது புலமைப் பரிசில் பரீட்சைச் சித்தியும் கிடைத்தது.

இன்று கல்விநிலை உயர்ந்துள்ளது. இவருடைய வழிகாட்டல் எம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டும் என்பதற்காக பலர் தமது பிள்ளைகளை தேடி வந்து சேர்த்துள்ளனர்.

இந்த இடமாற்றம், பெற்றோரின் நம்பிக்கை மற்றும் பாடசாலையின்வளர்ச்சியைப் பாதிப்பதாகஅமையும்.எனவே சமூகச் செயற்பாடுகள், முதியோர் கொளரவிப்புக்கள், கிராமத்தின் அமைதி என்பவற்றை நலப்பணி அமைப்புகளுடன் இணைந்து ஏற்படுத்துவதில் செயலாற்றிய அதிபரின் இடமாற்றம் நிறுத்தப்பட வேண்டும்.

இவர் ஓய்வுபெறுவதற்கு மூன்றாண்டுகளே உள்ளன. அது வரையில் எம்முடைய பாடசாலையில் பணிபுரிவதற்கு அனுமதியை வழங்க வேண்டும்.- என்றனர்.

இது தொடர்பான மனு வடமாகாண முதலமைச்சரின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.

(ற-ஜ-ரி5)

யாழ்.நகரில் கோமாதா உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.நகரில் கோமாதா உற்சவம்எதிர்வரும்16ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.நகர் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள சத்திரம் ஞான வைரவர் ஆலயத்தில் பண்டிதர் வ.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது என்று பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இந்தக் கோபவனி ஊர்வலம் கே.எஸ்.எஸ் வீதியில் ஆரம்பித்து மின்சார நிலைய வீதி, பெரிய கடை, யாழ். பஸ்நிலைய மேற்கு வீதி, வைத்தியசாலை வீதியூடாக ஆலயத்தை வந்தடையும்.

இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினர்களாகநாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், வடமாகாண அவைத் தலைவர் சி.வி. கே. சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும்கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன எனவும்அந்த இணையம் தெரிவித்துள்ளது. (ற-ஜ)

மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.12

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு மயிலணி கந்த சுவாமி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

திருமதி றி.தனஞ்சயன் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ)

உதயனின் சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளி பத்திரிகையின் ஸ்தாபக - பிரதம ஆசிரியர் கே.கே.இரத்தினசிங்கத்தின் இறுதிக் கிரியைகள் கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ற-ஜ)

ஓட்டோக்களுடன் மோதுண்டு இருவர் காயம்

சாவகச்சேரி, ஜன.12

ஓட்டோக்களுடன் மோதுண்டு பெண்உட்பட இருவர் காயமடைந்த வெவ் வேறு சம்பவங்கள் நேற்று தென்மராட்சி பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளன. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீசாலை மேற்கில் ஓட்டோவும்மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 61 வயது நபரும், சாவகச்சேரி பகுதியில் வேகமாகச் சென்ற ஓட்டோ சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த 59 வயது பெண்ணும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.12

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம்-1 மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப.9 மணிக்கு பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.கமலராஜனும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் சாயிசுமித்திகிளைத்தலைவர் திருமதி சி.சிறீதரனும், ஊர்காவற்றுறை பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.தயாபரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ)

ஏலம் மூலம் விற்கப்படும் கட்டாக்காலி மாடுகள் இறைச்சியாக்கப்படுகின்றன

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

கட்டாக்காலி கால்நடைகளாகத் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு, அவை ஏலம் மூலம் விற்கப்பட்டு இறைச்சிக் கடைக்காரர்களால் இறைச்சியாக்கப்படுகின்றன என்று பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் குற்றஞ் சாட்டியுள்ளது.

கட்டாக்காலிகளாகத்திரியும்மாடுகளால் பொதுமக்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. பயிரழிவுகள், விபத்துக்கள் போன்ற பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதனால் உள்ளூராட்சி மன்றங்கள் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்து ஏல விற்பனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில்பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளது. அதிலேயே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் பாலுணவுத் தேவைக்காகத் தூய பசும்பால் இன்மையால் பெருமளவு பால்மா இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் பசுமாடு வளர்க்கத் தயாராக உள்ளனர். இவர்களுக்குக் குறைந்த விலையிலோ, நியாய விலையிலோ, இலவசமாகவோ பசு மாடுகள் வழங்கப்படுமாயின் வளர்க்கத் தயாராகவுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இவற்றுகான தீர்வு நடவடிக்கைகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது என்றும் குறித்த இணையம் தெரிவித்தது. (ற-ஜ)

அளவெட்டியில் இளைஞர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன.12

இளைஞர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளனர். அளவெட்டிவடக்கு சனசமூக நிலையத்துக்கு அண்மையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த இளைஞர் மோட்டார் வாகனத்தில் வீடு சென்று கொண்டிருந்தபோது, சன சமூக நிலைய ஒழுங்கையில் இவரை வழிமறித்த இனம் தொரியாத நால்வர் கொண்ட குழு, இரும்புக் கம்பியால் தலையில் பலமாகத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூக்குரலைக் கேட்டுச் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் படுகாயமடைந்த நிலையிலிருந்த இளைஞரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இதே போன்று சிலநாள்களுக்கு முன்னர் அளவெட்டி மத்தி ஜெயா பிரஸ் சந்திக்கு அண்மையில் இனந்தெரியாத நபர்களால் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரியும்நிகழ்ச்சித்தொகுப்பாளரின் வீடும், வாகனங்களும் கடுமையாகத் தாக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தொடர்த் தாக்குதல் சம்பவங்களால் கிராமப்பகுதியில் பரபரப்பு நிலவுவதுடன், மக்களும் அச்சமடைந்துள்ளனர். எனவே இதுபோன்ற குற்றங்களை நிறுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-ரி5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3 ஆயிரத்து 451 மீனவருக்கு உள்ளவை 946 படகுகளே

முல்லை. நீரியல் வளத் திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 451 மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக 946 இயந்திரப் படகுகள் மட்டுமே உள்ளன என்று மாவட்ட நீரியல் வளத் திணைக்களப் புள்ளி விவரங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

குறித்த மாவட்டத்தில் செயற்படு மீனவர்களாக 4 ஆயிரத்து 815 பேர் உள்ளனர். இந்த மாவட்டத்தில் 72 கிலோ மீற்றர் நீளமுடைய கடற் பரப்பும், 125 கிலோ மீற்றர் களப்பு கரையோரமும் உண்டு.

> “களப்பு கரையோரங்களாக கொக்கிளாய், நாயாறு, சாலை, நந்திக்கடல் போன்ற பிரதேசங்கள் உள்ளன. களப்பு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் 233 குல்லாப் படகுகள் உள்ளன.”

களப்பு கரையோரங்களாகக் கொக்கிளாய், நாயாறு, சாலை, நந்திக் கடல் போன்ற பிரதேசங்கள் உள்ளன. களப்பு மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் 233 குல்லாப் படகுகள் உள்ளன.

இந்த மாவட்டத்தின் 28 மீனவ கிராமங்களிலும், 87 கரை வலைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கடற்றொழில் மேற்கொள்ளும் மீனவர்களின் படகுத் தரிப்பிடங்களாக 28 நிலையங்கள் உள்ளன.

அத்துடன் 2015ஆம் ஆண்டில் மொத்த கடல் உற்பத்தியாக 92 லட்சத்து 51 ஆயிரத்து 146 கிலோ கிராம் மொத்த உற்பத்தி பெறப் பட்டுள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-101)

முல்லை சிறாட்டிகுளம் பாடசாலையில் வகுப்புக்களை அதிகரிக்க வேண்டும்

கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஜன.12

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிறாட்டிகுளம் பாடசாலையில் தரம் 9 வரையில் வகுப்புக்களை அதிகரிக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சிறாட்டிகுளம் பாடசாலையில் தற்போது தரம் 5 வரை மட்டுமே வகுப்புக்கள் உள்ளன. அங்கு சுமார் 45 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

குறித்த மாணவர்கள் தரம் 5க்கு மேல் கல்வி கற்க வேண்டுமாயின் 13 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நட்டாங்கண்டல் கிராமத்துக்குச் சொந்த வாகனங்களில் அல்லது கால்நடையாகவே பயணம் செய்ய வேண்டிய அவலநிலையே தற்போது காணப்படுகின்றது.

தரம் 6 முதல் கல்வி கற்கும் சிறார்கள் கல்விக்காக தினமும் 26 கிலோ மீற்றர் தூரம் சொந்த வாகனத்தில் பயணிக்க வேண்டியுள்ளது. இதற்கு வாகன வசதியுடன் தினமும் இரு நேரப் பயணத்துக்கும், பெற்றோர் பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

பெற்றோர் தமது வாழ்வாதாரத்தைத் தேடும் முயற்சியால் இந்தக் கிராமத்தின் பல சிறுவர்கள் தரம் 5 கல்வியுடன் பாடசாலைக் கல்வியை கைவிடுகின்றனர்.

எனவே இந்தக் கிராமத்தின் சிறுவர் கல்வியைக் கருத்திற் கொண்டு குறித்த கிராமத்தில் உள்ள பாடசாலையை தரம் 9 வரை இயக்க துணுக்காய் கல்வி வலயம் ஆவன செய்ய வேண்டும் எனக் கிராம மக்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிக்கான பாதையும் சீர் அற்ற நிலையில் காணப்படும் குறித்த கிராமத்தில், போர் காலத்தில் 129 குடும்பங்கள் வாழ்ந்த போதிலும், தற்போது போர் நிறைவடைந்து 6 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதிகள் முழுமை பெறாத காரணத்தால் அங்கு தற்போது 65 குடும்பங்களே வாழ்கின்றனர்.

இவ்வாறு உள்ள குடும்பங்களில் ஒன்று மற்றும் இரண்டு அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளபோதிலும், இன்று வரைக்கும் மின்சாரம் வழங்குவதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு பல அடிப்படை வசதி இன்றி வாழும் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-101)

டெங்குத் தொற்றை கட்டுப்படுத்த மன்னாரில் வீடுகள் சோதனை

மன்னார், ஜன.12

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் நகர்ப் பகுதிகளில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளமை இனங்காணப்பட்டதை அடுத்து, டெங்கு நுளம்பின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் வகையில் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நேற்று திங்கட்கிழமை முதல் மன்னார் நகரில் உள்ள வீடுகளில் டெங்கு கட்டுப்பாட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மன்னார் பிராந்திய பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரூபன் லெம்பேட் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் நகரில் டெங்குத் தொற்று அதிகமாகக் காணப்படுகின்ற 14 கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக முப்படையினருடன் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து அடையாளம் காணப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள வீடுகளில் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 3 ஆயிரம் வீடுகளில் இவ்வாறு சோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

கடந்த 3 தினங்களுக்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய அறிவித்தலின் அடிப்படையில் நேற்று திங்கட்கிழமை முதல் வீடுகள் தரிசிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்பு பெருகக்கூடிய வகையிலான பொருள்கள் வீடுகளில் காணப்படும் வகையில் அவற்றை அகற்றி எங்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். சேகரிக்கப்படுகின்ற பொருள்கள் நகர சபையால் அனுப்பப்படும் அழிவுகளைச் சேகரிக்கும் உழவு இயந்திரம் மூலம் அகற்றிச் செல்லப்படும்.

இதன் அடிப்படையில் மன்னார் நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள பல வீடுகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.- என்றார். (ற-ஐ-56)

கல்லூரியின் தேவைகள் குறித்து கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் தேவைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெற உள்ளது என்று பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் பிற்பகல் 3 மணியளவில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதில் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும், பழைய மாணவர் சங்கச் செயலாளரும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கலந்துரையாடலில் கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு குறித்த முன்னேற்ற மீளாய்வு, கல்லூரிக்குத் தேவையான பௌதீக வளங்கள், கல்லூரியின் துறைசார் ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களின் ஆளணி பதவி வெற்றிடங்கள், கல்லூரியைத் தேசிய பாடசாலைக்குரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்று நிருபங்களுக்கு அமைய வழி நடத்துவதில் உள்ள இடையூறுகள் குறித்த ஆய்வு போன்ற பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-102)

வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

வவுனியா, ஜன.12

தேசிய டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு வவுனியா நகரத்துக்குட்பட்ட பல பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுக் காலை முதல் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் வவுனியா பிரதான நகரங்களில் வவுனியா பொது மேற்பார்வைப் பரிசோதகர் தலைமையில் இடம்பெற்றன.

இராணுவத்தினர், பொலிஸார், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், நகர சபைச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலரும் இணைந்து குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

மாவட்டத்தில் டெங்கு நுளம்புகள் பெருகும் பொதுமண்டப வீதி, கற்குழி, சுற்றுவட்ட வீதி, புகையிரத நிலைய வீதி, குடியிருப்பு, வைரவப்புளியங்குளம், இறம்பைக்குளம் ஆகிய இடங்களை இனங்கண்டு அவற்றை அழித்ததுடன் டெங்கு தொடர்பாகப் பொது மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (ற-ஐ-21)

பட்டதாரி பயிலுநர்கள் கடமைகளை ஏற்றனர்

சாவகச்சேரி, ஜன.12

வடமாகாண சபையால் கடந்த 7 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்கள், பட்டதாரி பயிலுநர்கள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்தந்த அலுவலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அலுவலகங்களில் கடமையாற்றிய கனிஷ்ட அலுவலர்களிடையே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களும், முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

அத்துடன் பட்டதாரி பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களும் நேற்று அலுவலகங்களில் பொறுப்பேற்றுள்ளனர். இவர்கள் ஒரு வருட காலத்துக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகுதிகாண் காலம் முடிவுற்றதும் மாகாண அபிவிருத்தி அலுவலர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் வழங்கப்படும் எனவும், தகுதிகாண் காலத்தில் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்புத் தரப் பரீட்சையில் சித்திபெற்ற அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்களும், மாகாணப் பிரதம செயலாளர் அலுவலகத்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கையாற்றுப் பகுதியில் கழிவுகளால் பெரும் சீர்கேடு

நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

அராலி கிழக்கு வழுக்கை யாற்றுப் பிரதேசத்துக்கு அருகில் கழிவுகள் கொட் டப்படுவதால் பெருமள விலான ஈக்களும், நுளம் புகளும் பெருமளவில் உருவாவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளும் உருவா கின்றன. அதனால் அதற் குரிய மாற்று நடவடிக்கை களைமுன்னெடுக்கவேண் டும் என்று அராலி கிழக்கு ஐயனார் கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கம் சங்கானை பிரதேச செய லாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அராலி - கிழக்கு பரந்த சமவெளி பிரதேசத்தில் டெங்குக் கழிவுகள், விலங் குக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள் எனப் பல்வேறு இடங் களில் இருந் து கொண்டு வந்து கழிவுகள் கொட்டப் படுகின்றன.

அத்துடன் பாதுகாப்பற்ற கழிவுகளை பறவைகள், விலங்குகள் கிராமத்துக்கு இழுத்து வருகின்றன. அதனால் நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டு வரு கின்றன.

எனவே, அராலி கிழக்கு வழுக்கையாற்றுப் பிரதே சத்தில் ஆபத்தான கழிவு களை கொட்டுவதை தடை செய்ய வேண்டும் - என்று கோரிக்கை விடப்பட்டுள் ளது. (ற-ஐ-50)

இலங்கை தேசிய இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது. தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட 450 இளைஞர், யுவதிகள் உட்பட யாழ். மாவட்ட தேசிய இளை ஞர் சம்மேளனத்தின் இளைஞர், யுவதிகளுமாக சுமார் ஆயிரம் பேர் வரையில் இந்த தைப்பொங்கல் விழாவில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கலாசார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன, இளைஞர், யுவதிகளின் இத்தகைய கலாசார நிகழ்வுகளை ஒற்றமையுடன் கொண்டாடுவதையிட்டு பாராட்டியதுடன், எதிர்காலத்திலும் வடக்கு, தெற்கு என்ற வேறுபாடுகள் எவை யும் இன்றி ஒரு நாட்டவர்கள் என்ற மனத்துடன் அனைவரும் ஒற்றுமை சமாதா னத்துடன் வாழ வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ற-ஐ-86)

உழவர் விழா

யாழ்ப்பாணம், ஜன.12

தேசிய கலை இலக்கியப் பேரவையால் வருடாந்தம் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் உழவர் விழா எதிர்வரும் சனிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 62, கொக்குவிலில் அமைந் துள்ள தேசியு கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன்கே போர் கூடத்தில் மு. இராச நாயகத்தின் தலைமை யில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வில் மக்கள் பாடல்கள் இசைக்கப்பட வுள்ளதுடன், வடலிய டைப்பு கலைவாணி கலை மன்றத்தினரின் கிராமியப் பாடல் நிகழ் வும், "இன்றைய நாகரிக வளர்ச்சி பலமானதா? பலவீனமானதா?" என்ற தலைப்பில் ச. முகுந் தனின் தலைமையில் விவாத அரங்கும், "நிற்க அதற்குத் தக" என்ற தலைப்பில் சட்டத்தரணி சோ. தேவராஜாவின் தலைமையில் கவியரங் கமும் இடம்பெறவுள் ளன. (ற-ஐ)

தீ மிதிப்பு வைபவம்

சங்கானை, ஜன.12

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னி அம்பாள் ஆலய வருடாந்த தீ மிதிப்பு வைப வமும் தைப் பொங்கல் பெருவிழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆல யத்தில் நடைபெறவுள் ளன.

தைப்பொங்கலன்று ஆல யத் தொண்டர்களின் பஜனைப் பாடல்களும் நடை பெறவுள்ளது.

(ற-ஐ-29)

திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.12

உடுவில் ஆலடி சிவன் ஆலயத்தில் இன்று செவ் வாய்க்கிழமை காலை 6 மணிக்கு திருவாசக முற் றோதல் நடைபெறும் என பரிபால சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ)

பாரவூர்திகளின் மேற்பகுதியில் பொருள் ஏற்றுவதை நிறுத்துக

பாரவூர்தி உரிமையாளர் கூ. சங்கம் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

பாரவூர்திகளின் மேற்பகுதியில் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படு வதைக் கட்டுப்படுத்தி ஏனைய பார வூர்தி உரிமையாளர்களும் தொழில் வாய்ப்பைப் பெறக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையா ளர் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குச் செல் லும் பாரவூர்திகள் ஊர்தியின் உட் புறம் அன்றி மேற்புறத்திலும் 2 ஆயி ரத்து 500 கிலோ முதல் 3 ஆயிரத்து 500 கிலோ வரையான பொருள் களையும் ஏற்றி வருகின்றனர்.

அதனால் அதிக பாராவூர்திகள் விபத்துகளில் அகப்படுவதுடன்,

> "இத்தகைய அள வுக்கு அதிக மாக பொருள்கள் ஏற்று வதைத் தடை செய்வதன் மூலம் ஏனைய பாரவூர்தி களும் தொழில் வாய்ப்பைப் பெற முடியும்"

உயிர் சேதங்களும் ஏற்படுகின்றன. இந்த வகையில் கடந்த ஆண்டு மட் டும் ஐந்து பெரும் விபத்துக்கள் இடம் பெற்று சாரதிகள் உட்பட மூவர் சாவடைந்துள்ளனர்.

இத்தகைய நிலைமை மேலும் தொடராத வண்ணம் சட்டத்துக்கு உட்பட்டு இத்தகைய அளவுக்கு அதி கமாக பொருள்கள் ஏற்றுவதைத் தடை செய்வதன் மூலம் ஏனைய பாரவூர்திகளும் தொழில் வாய்ப் பைப் பெறமுடியும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கோரிக்கை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகனுடன தொடர்பு கொண்டு கேட்டபோது, இது குறித்த கோரிக்கை கடிதம் கிடைத் துள்ளது. இருப்பினும் இது தொடர்பில் உடனடி முடிவு எட்டப்படவில்லை என்று தெரி வித்தார்.

இது தொடர்பில் போக்கு வரத்து விதி முறை போக்குவரத்துத் திணைக் களம் மற்றும் பொலிஸ் திணைக் களம் என்பவற்றுடன் கூடி ஆராய்ந்த பின்னரே இறுதி முடிவு எட்ட முடியும் என்றும் தெரிவித்தார். (ற-ஐ-101)

பக்தி இசை நிகழ்வு

வலி. வடக்கு, ஜன.12

திருவாசக இசையமுதம் எனும் பக்தி இசை நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நீர்வேலி இராசவீதியில் உள்ள பொன்செல்வமகால் மண் டபத்தில் நடைபெற வுள்ளது.

நீர்வைதியாக. மயூரகிரிக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவு ரையாளர் தவநாதன் றொபேட், மாணிக்க வாசகரின் திருவாசகப் பாடல்களை இசைக்க வுள்ளார்.

(ற-ஐ-86)

நகரை சுத்தமாக்கும் திட்டத்துக்கு வர்த்தகர் ஒத்துழைக்க வேண்டும்

யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ். நகரைச் சுத்தமாக்கும் பணியில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய நடைமுறை களைக் கடைப்பிடிப்பதற்கு அனைத்து வர்த்தகர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ். வணிகர் கழகத்தினர் கோரி யுள்ளனர்.

நகரை போதியளவு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேணப்படவில்லை என்ற குறைபாட்டை நிவர்த்தியாக்கும் வகையில், யாழ்.நகரப் பொலிஸ் அதிபர், யாழ். உயர் பொலிஸ் அதிகாரிகள், யாழ். மாநகரசபை ஆணையாளர், யாழ்.வணி கர் சங்கத்தலைவர் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் நகரில் குப்பைகளை அகற்றும் பணிகள் வட்டார ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனால் வர்த்தகர்கள் 20 மைக்குரோன் அளவு குறைந்த பொலித்தீன் பாவ னையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்

> "வர்த்தக நிலையம் முன்பாக குப்பை களை வைப் பதையும், வடிகால்களில் குப்பை, மண் என் பவற்றைக் கொட்டுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்."

டுள்ளதாவது:-

அரசு இந்தப் பொலித்தீன் பாவனையைத் தடைசெய்துள்ளது. அத்துடன் உங்கள் வர்த்தக நிலையம் முன்பாக குப்பைகளை வைப்பதையும், வடிகால்களில் குப்பை, மண் என்பவற்றைக் கொட்டுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். உணவகங் களில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத் தல்களைப் பின்பற்றுங்கள் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-115)

மாணவர்கள் பெற்றோரை வணங்க ஆசிரியர் பழக்கப்படுத்த வேண்டும்

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

பாடசாலைக்கு வரும்போது, ஒவ்வொரு மாணவர்களும் தமது பெற்றோரை வணங்கிவிட்டு வருவதற்கு மாணவர் களை ஆசிரியர்கள் பழக்கப்படுத்த வேண் டும். பாடசாலையில் இவ்வாறான செயற் பாடுகளை நடத்துவது இலகுவானது - என யாழ். கல்வி வலயப்பணிப்பாளர் நா.தெய்வேந்திரராஜா தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலய மாணவி குணபாலசிங்கம் - நிதர்சனா கலை பிரிவில் 3 ஏ திறமைச் சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற் றார்.

இதனைக் கௌரவிக்கும் முகமாக இம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித் ததாவது:-

சாதாரண ஆரம்ப வகுப்பில் இருந்து உயர்தர வகுப்பு மாணவர் வரை பாடசாலைக்கு வரும் போது பெற்றோரை வணங்கி விட்டு வருவதற்கு பழக்கப்பட வேண்டும்.

பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு சிறப்பாக இருக்குமா னால் அவர்கள் எவரையும் மதிப்பார்கள். எங்கும் அவர்களுக்கும் மதிப்பிருக்கும்.

இந்தப் பண்பாடுகளைக் கைவிடாது தொடர்ச்சியாக பேணுவதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்வியை எவரிடமும் கடன்பட வேண் டியதில்லை. நான் படித்து பெரியவனாக வரவேண்டும் என்ற எண்ணமும் உழைப் பும் இருந்தால் நீங்கள் முன்னுக்கு வருவீர்கள் - என்றார்.

(ற-ஐ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினைவாதத்துக்குப் பலம் வழங்கியுள்ளது நல்லாட்சி அரசு

விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான நல்லாட்சி அரசு, பிரிவினைவாதத்துக்குப் பலத்தை வழங்கியுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடிகாலைச் சுத்தம் செய்யுமாறு இராணுவத்தினருக்குக் கூறும் அளவுக்குவடமாகாணமுதலமைச்சருக்கு நல்லாட்சி அரசு பலத்தை வழங்கியுள்ளது.

நல்லாட்சியினர் பிரிவினைவாதத்துக்குப் பலத்தை வழங்கியுள்ளனர். முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி இலங்கைக்கு வருகைதந்து புதிய அரசமைப்பை உருவாக்குவதில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பதை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

புலிகளின் சின்னம் உள்ளிட்ட சேட்டை அணிந்து வடக்கில் இருக்கக் கூடியவாறு சூழல் மாறுபட்டுள்ளது.

நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தினரை வடக்கில் வடிகாலைச் சுத்தப்படுத்துமாறு கூறுகின்ற அளவுக்குமுதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குப் பலம் கிடைத்துள்ளது. பிரிவினைவாத, இனவாதக் கடும்போக்குவாதக் குழுக்கள் இந்த வருடத்தில் பலம் பெற்றுள்ளன – என்று கூறினார். (த-5)

4 நாள்களில் பேராதனைக்கு 80 லட்சம் ரூபா வருமானம்

கொழும்பு, ஜன. 12

கடந்து வருடம் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அதிகளவில் வருகைதந்திருந்ததன் காரணமாக பேராதனையில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவில் நான்கு நாள்கள் வருமானமாக 80 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை-பூங்காவின் முன்புறமாக, வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் போதுமானதாக இல்லாதிருந்தமையால் பூங்காவைப் பார்வையிடுவதற்கு அங்கு வந்திருந்த பெருந்தொகையானோர் பூங்காவுக்குள் பிரவேசிக்காது திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தகவலை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான கலாநிதி டீ.எச்.பீ. பெரமுணகம தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் போயா, நத்தார் மற்றும் விடுமுறை தினங்கள் தொடர்ச்சியாகஇருந்தமையால்நாளொன்றுக்கு 20 லட்சம் ரூபாவரை வருமானம் கிடைக்கப் பெற்றது.

இதைவிட, ஹக்கல, கம்பஹா, அவிசாவளை மற்றும் அம்பாந்தோட்டைப் பூங்காக்களின் வருமானங்களும் அதிகரித்துள்ளதாகவும், கடந்த ஆண்டில் இந்த அனைத்துப் பூங்காக்களில் இருந்தும் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்துக்கு 561 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்திருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

கதிர்காமம் ஆலய வளாகத்தில் பொலித்தீன் வீசுவதற்குத் தடை

கொழும்பு, ஜன. 12

கதிர்காமம் ஆலயத்தைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்கு இந்தப் புதிய ஆண்டில் புதிய சட்டமாகப் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கழிவுகளை ஆலய வளாகத்துக்குள் வீசுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமேயான டீ.பீ.குமாரகே தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் ஆலய வளாகத்துள் இதுவரையிலும்வைக்கப்பட்டிருந்த 87 பிளாஸ்ரிக் குப்பைக்கூடைகள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதோடு, சுற்றாடலை அசுத்தப்படுத்திவிடும்எந்தவொரு பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் மற்றும் பழவகைகள் அவற்றின்கழிவுகளைவளாகத்துள் வீசுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றில் பழவகைகளின் கழிவுகள் உள்ளிட்ட ஏனைய கழிவுப்பொருள்கள் 12 உழவு இயந்திரப் பெட்டிகளில் நிரப்பப்பட்டு வெளியேற்ற வேண்டியுள்ளது. கழிவுகளைப் போடுவதற்காக தொகையான பிளாஸ்ரிக் கொள்கலன்கள் ஆலய வளாகத்தினுள் வைக்கப்பட்டிருந்தாலும் கூட சில பக்தர்கள் பழவகைகளின் கழிவுகளை அவற்றில் போடாது கண்டபடி நிலத்தில் வீசுகின்றனர்.

இதனால் ஆலயத்துக்குக் கிடைக்கும் நிதியில் பெருந்தொகைப் பணம் கழிவுப் பொருள்களை அங்கிருந்து அகற்றி விடுவதற்குச் செலவாகுவதாகவும், வரலாற்றுப் புகழ் மிக்க புனிதத் தலத்துக்கு குரங்குக் கூட்டங்களால் சேதங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்தப் பழவகைகளை உண்பதற்காகவே தினமும் குரங்குகள் இங்கு வருவதன் காரணமாக, ஆலய வளாகத்தினுள் பழவகைகளின் கழிவுகளைப் போடும் பிளாஸ்ரிக்கொள்கலன்களைவைக்காதிருப்பதன் மூலம்ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள முடிவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After A/Level's
UK DEGREE

January Intake



Investment **Rs.200,000**

MBA
Awarded By:
LONDON METROPOLITAN UNIVERSITY
Master in Business Administration

PEARSON BTEC
HND
Computing & System Development
BEng (Hons) in Software Engineering
BEng (Hons) in Computer Networking
BSc (Hons) in Computing

PEARSON BTEC
HND
Business Management
BA (Hons) in Business Administration
BA (Hons) in Human Resource Management

PGD
Diploma
Strategy Management & Leadership
PGD Dip.in Strategy Management & Leadership

Higher Education for a Lowest Investment

ESOFT is proud to be recognized as a **GOLD PARTNER**
PEARSON edexcel

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Hotline :077 309 9 308 Tel : 021 - 222 4142

www.esoft.lk
The Sri Lanka's Largest Higher Education Network

After A/Level's
எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும்
கற்கைநெறிகள்

International DIPLOMAS

PEARSON edexcel

Commencement 20.01.2016

ESOFT is proud to be recognized as a **GOLD PARTNER**
PEARSON edexcel advancing learning, changing lives

- **Diploma in Information Technology** — Duration : 4 Months — DiTEC INTERNATIONAL
- **Diploma in Computerized Accounting** — Duration : 5 Months — DiCA
- **Diploma in Business Management** — Duration : 4 Months — DiBM
- **Diploma in Web Engineering** — Duration : 6 Months — DiWE
- **Diploma in Software Engineering** — Duration : 6 Months — DiSE
- **Diploma in Hardware and Networking** — Duration : 4 Months — DiHN
- **Diploma in English** — Duration : 4 Months — DiE

துரித அழைப்பு
077309 9 308

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

B.B.C யின் புதிய கிளைகள் ஆரம்பம்

British BUSINESS COLLEGE
Where Students Come First

K.K.S. வீதியில், சுன்னாகத்திலும்,
பருத்தித்துறை வீதியில்,
நீர்வேலியிலும்...

தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC 14 வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்				கற்பித்தல் மொழி
பிரிவு	Play Group	Montessori	Pre School	ஆங்கில மொழி மூலம் தமிழ் கட்டாய பாடம்
வயது	2+ முதல் 3+ வரை	3+ முதல் 4+ வரை	4+ முதல் 5+ வரை	
காலம்	1 வருடம்	1 வருடம்	1 வருடம்	

சிறார்களின் அரிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet
* முத்தமிழ் விழா
* Carols
* English Day Concert
* Art & Craft Exhibition
* Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்
NEW SYLLABUS
*Dr. Maria Montessori Method
*Canadian ECE Method
*German LKG, KG, UKG System
எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது கூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்
*கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC மின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்

யாழ்ப்பாணம் 1	யாழ்ப்பாணம் 2	கோப்பாய்
64, கோயில் வீதி யாழ்ப்பாணம்	625, K.K.S வீதி யாழ்ப்பாணம்	பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி

மானிப்பாய் 1	மானிப்பாய் 2	சுன்னாகம் 1	சுன்னாகம் 2	நீர்வேலி
252, யாழ் வீதி, ஆவரங்கால், மானிப்பாய்.	சங்கரமிஷன வீதி (மானிப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வீதி)	Dr. சாரத்தினம் வீதி, சுன்னாகம்.	இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக)	பருத்தித்துறை வீதி நீர்வேலி.

வடமராட்சி	சாவகச்சேரி	சங்கானை	புத்தூர்
பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி.	சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை	பிரதேச செயலகம் அருகாமை நிலா வரைவு கோபுரம்	பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தி (புத்தூர் சந்தியை நோக்கியதாக வலதுபுறம் முன்னால்)

British BUSINESS COLLEGE
Where Students Come First

BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060

Prepared under
Hygienic method Specially for physicians and domestic purposes

750 ml

IMPROVED FORMULA PURITY GUARANTEED

V.S.P

SPECIAL LUNCH OIL

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4135/9165

சுகாதார முறையில் உணவிற்கும், வைத்தியத்திற்கும், விஷேடமாகத் தயாரிக்கப்பட்டது.

உரிமையாளர் : திரு.பொ.பாஸ்கரன் R.No 11505

சுத்தமான வி.எஸ்.பி நல்லெண்ணெய்

O/L, A/L பரீட்சைக்குத் தோற்றிய
மாணவர்களுக்கான
அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப்
பெறுவதற்கு UGC அங்கீகாரம்
பெற்ற கற்கை நெறிகள்

Courses	Entry Qualification	Duration
B.Sc. in Computer Science	O/L or A/L	2-3 Years
Top Up in B.Sc. in Computer Science	2 Years Diploma or HND	1 Year
P.G.D. in Computer Science	Any Degree	1 Year
M.Sc. in Computer Science	B.Sc. in Comp. Sc. or P.G.D in Comp. Sc.	1 Year
Hotel Management	O/L or A/L	1 Year

North Lanka IIT

Peoples Bank Building, Top Floor,
Stanly Road, Jaffna.
Contact :
0777 592 666, 076 944 0075

MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

20 வருட உயர்கல்வி சேவையின் முன்னோடிகள்

General / Marketing / Finance / HR / IT

Duration : 1 year

January intake
23.01.2016

Admission Requirements

- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

UGC approved Programme

மேலதிக விபரங்களுக்கு :
071 777 5 666
021 4 900 900

பல தூர தாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக்கொள்ளுங்கள்

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் கணக்கியல் டிப்ளோமாதாரிகளுக்கும் பட்டதாரிகள் நியமனம் வழங்கவேண்டும்

தீர்மானம் நிறைவேற்றியது தொழிற்சங்கம்

அம்பாறை, ஜன.12

அரசு 5,200 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு எடுத்துள்ள தீர்மானத்துக்கு அமைய, இலங்கை உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகளையும் இந்த நியமனத்துக்குள் உள்வாங்க வேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை, தொழில் ரீதியான தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் நிறைவேற்றியுள்ளது.

தொழில் ரீதியான தகுதி வாய்ந்த உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்க வருடாந்த ஒன்று கூடல் சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் ஏ.எம். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், மேற்படி கோரிக்கைத் தீர்மானம் உட்பட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பெருந் தொகையான ஆண், பெண் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் இந்த ஒன்று கூடலில் கலந்து கொண்டனர்.

ஒன்று கூடல் நிகழ்வின் இறுதியில் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஹுஸைன் முபாறக், வருடாந்த ஒன்று கூடல் தீர்மானங்களை வாசித்து விளக்கமளித்ததுடன் பின்வரும் தீர்மானங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு:

01. அரசு 5,200 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கத் தீர்மானித்திருப்பதாக பிரதமர் தெரிவித்தார். அந்த நியமனத்துக்குள் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் உள்வாங்கப்பட வேண்டும்.

02.பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும்போது கட்டாயமாக அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டையும், வயதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

03. 2005, 2012 ஆம் ஆண்டுகளைப் போன்று நியமனங்கள் வழங்க வேண்டும். பட்டதாரிகளை நியமனத்துக்குள் உள்வாங்க விண்ணப்பங்கள் கோரப்படும் பொழுது, 2012 ஆம் ஆண்டு தகைமையாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் என்று கோரப்பட்டதைப் போன்று விண்ணப்பங்கள் கோரப்படவேண்டும் .

04.மேலே குறிப்பு (03)இல் குறிப்பிட்டதைப்போன்று சகல மாகாண சபைகளும் விண்ணப்பங்களைக் கோர உள்நாட்டுப் பொது நிர்வாக அமைச்சால் பணிப்புரை செய்யப்படவேண்டும். அதாவது அது உத்தியோகபூர்வ அறிவுறுத்தலாக அமைய வேண்டும்.

05. 2005, 2015 ஆம் ஆண்டு நியமனம் வழங்கும்போது கடைப் பிடிக்கப் பட்ட கட்டமைப்பு முறைப்படி அதாவது நேர்முகப் பரீட்சை யினூடாக நியமனங்களை வழங்க வேண்டும்.

06. 2013ஆம் ஆண்டு உயர் தேசியக் கணக் கியல் டிப்ளோமா பட்ட தாரிகளுக்கு எதிராக திட்ட மிட்டு மேற் கொள்ளப் பட்ட புறக்கணிப்பின் காரணமாக விடுபட்ட 2013ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் பட்டம் பெற்று இன்றுவரை நியமனம் கிடைக்கப்பெறாமல் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்ற உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில், விசேட திட்டத்தின் ஊடாக அவர்களை உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

07. அது மாத்திரமின்றி, தனது பயிலுநர் நியமனக்காலப்பகுதியில் இருந்து உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட புறந்தள்ளலினூடாகப் பாதிக்கப்பட்டு இடைநடுவில் இடைவிலகிச் சென்ற மனகியல் டிப்ளோமா பட்டதாரிகளை துரிதமாக அரச நியமனத்துக்குள் இணைத்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

08. பட்டம் பெற்றும் கீழ் உழைப்புப் பட்டதாரிகளாக அரச திணைக்களம், நிறுவனம் என்பவற்றில் பணிபுரியும் சகல பட்டதாரிகளையும் அவர்களின் சேவையை அடிப்படையாகக் கொண்டு அல்லது கருத்தில் எடுத்துப் பட்டதாரி நியமனத்துக்குள் உள்வாங்கப்படவேண்டும்.

09. பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் சான்றிதழ் வழங்கும் போது 46/90 III பல்கலைக்கழகப் பட்டம் B. Com க்குச் சமனானது என்று உயர் கல்வி அமைச்சும், பொது நிர்வாக அமைச் சும், பிரதம மந்திரியும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

> "உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா மாணவர்களுக்கு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது."

10.உயர் தேசியக் கணக் கியல் டிப்ளோமாப்பட்டதாரிகளுக்கு எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படா வண்ணம் அரசானது நிரந்தர தீர்வொன்றை முன்வைப்பதோடு, உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தங்களுடைய மேற்படிப்பைத் தொடர்வதற்காகப் பல்கலைக்கழ கங்களினூடாக வாய்ப்புக்கள் ஏற் படுத்தப்பட வேண்டும்.

11.2016 ஆண்டு உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பாடநெறிக்கான விண்ணப்பம் கோரப் படும் பொழுது 46/90III வணிகமாணி சமனானது என்ற வாசகம் நீக்கப்பட்டு, உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா மாண வர்களுக்கு பெரிய அநீதி இழைக் கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங் களில் மாணவர்களை உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளும் போது 46/90III வணிகமாணிக்குச் சமனானது என்று குறிப்பிடுவதே வழமையானதாகும். ஆனால் இந்த முறை உயர் தேசியக் கணக் கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் பாதிக்கப் படும் வகையில் அக்குறிப்பு நீக்கப்பட்டிருக் கிறது. இந்நிலைமையை சீர்செய்து அரசும் பட்டதாரிகளுக்குநியாயம்கிடைக்கும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. சில மாகாண சபைகளில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன. அது மாத்திரமின்றி, கடந்த காலத்தில் நியமனம் பெற்று ஆசிரியர்களாக, அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பணிபுரிகின்றவர்களை மன உளைச்சலுக்குள்ளாக்கும் வகையில் அவர்களைப் பதவி உயர்வு, மேலதிகக் கொடுப்பனவுகள், வருடாந்தக் கொடுப்பனவுகள் போன்றவற்றை இலக்கு வைத்து உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப் பட்டதாரிகள் என்று மேலே குறிப்பிடப் பட்டவைகளிலிருந்து புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

இந்தநிலைமை மாற்றியமைக்கப்பட்டு உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமாப்பட்டதாரிகளுக்கு அரசின் சகல சலுகைகளும் கிடைப்பதற்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

13. அரசானது பட்டதாரிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது எங்களுடைய தொழிற்சங்கத்தையும் கலந்தாலோசனைக்காக அழைக்க வேண்டும். ஏனென்றால் பிரதம மந்திரி தொழிற்சங்கங்களினூடாக பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியிருக்கிறார். அது நடைமுறைச் சாத்தியப்படுத்தப்படல் வேண்டும்.

14. இன்று வரை அரசினால் வழங்கப்பட்ட மோட்டார்சைக்கிள்கள் சில மாவட்டங்களில் அரச அதிபர்களின் கவனயீனம் காரணமாக வழங்கப்படாமல் இருக்கின்றமையினால், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிக்கள உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்) அவர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

15.மேற்கூறப்பட்ட தீர்மானங்கள் புறக்கணிக்கப்படுமாக இருந்தால் அல்லது நடைமுறை சாத்தியப்படுத்தப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் எங்களுடைய தொழிற்சங்கத்தின் அகிம்சைப் போராட்டம் நடைபெறும். (த-30)

தனது படங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்த மைத்திரி

கொழும்பு, ஜன. 12

ஒளிப்படக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த தனது ஒளிப்படத்தினைப்பார்த்துப் பிரமித்துவிட்டதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவியேற்பின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு, ஜனாதிபதியின் ஒளிப்படப்பிடிப்பாளரினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி, பண்டாரநாயக்கா சர்வதேச மா நாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தார்.

அதன் பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து ஒளிப் படங்களையும் பார்வையிட்டார்.

அங்குகாட்சிக்குவைக்கப்பட்டிருந்த ஒளிப்படங்களைப் பார்த்து விட்டு, தான் பிரமிப்பு அடைந்ததாகவும், தன்னுடைய படங்களும் சேகரிக்கப்பட்டு, அவையும் பாதுகாப்படும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும், தனது படங்கள் தனக்கே ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தன என்றும் ஜனாதிபதி தனக்கருகில் இருந்த அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளார்.

(த-5)

முன்னாள் அரசியல்வாதிக்கு பெரும் தொகைச் சொத்துக்கள்

கொழும்பில் உள்ளதாகத் தகவல்

கொழும்பு,ஜன.12

முன்னைய அரசின் அரசியல்வாதியொருவர் தெகிவளை கல்கிசை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 3 ஆயிரம் லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை விலைக்கு வாங்கியிருப்பதாக மாநகர சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டிலிருந்தே இவரால்விலைக்கு வாங்கப்பட்டுள்ள சொத்துக்களில், காலி வீதியில் அமைந்துள்ளமிகப்பெரும் வர்த்தக நிலையமொன்றும், மாளிகை போன்ற ஐந்து வீடுகளும்சொந்தமாக இருப் பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

பத்தரமுல்லை, பாணந்துறை, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் இவருக்குச் சொந்தமான விசாலமான காணிகள் பலவும் இருப்பதோடு, இவற்றுள் சில சொத்துக்கள்உறவினர்கள் மற்றும் அவருக்கு மிக நெருக்கமானவர்களின் பெயர்களில் வாங்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இவருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்குச் சில முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த-ஜ-22)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

பாதுகாப்புச் செலவில் அரசுகள் மோதகமும் கொழுக்கட்டையுமே!

இந்தியாவின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக, பாகிஸ்தானிடமிருந்து போர் விமானங்களை வாங்கும் தீர்மானத்தை இலங்கை கைவிட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. அதே சமயம், பாகிஸ்தானிடமிருந்து ஜே.எவ்.-17ரக போர் விமானங்களை வாங்குவது தொடர்பாக ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேனா ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் இலங்கை வந்த வேளையில், இரு நாடுகளுக்கும் இடையில் எட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஒப்பந்தங்கள் கைச்சாத்தான பின்னர் பாகிஸ்தானிடமிருந்து எட்டு ஜே.எவ்.17 போர் விமானங்களை இலங்கை வாங்குவதற்கு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக இந்திய ஊடகங்களில் பரபரப்பாகச் செதிகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்தி வெளியாகிய அதே வேகத்தில், இலங்கையிடமிருந்து அது குறித்த மறுப்பும் வெளிப்படுத்தப்பட்டது.

பாகிஸ்தானிடமிருந்து போர் விமானங்களை வாங்க இலங்கை முடிவு செய்திருக்கிறது. இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக இறுதிநேரத்தில் இந்த முடிவு இலங்கையால் கைவிடப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பத்து ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன. இவ்வாறாக முதலில் தெரிவிக்கப்பட்டபோதிலும், எட்டு ஒப்பந்தங்கள் மட்டும் இறுதிநேரத்தில் கைச்சாத்திடப்பட்டதால் கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள் போர் விமானக் கொள்வனவு தொடர்பானவையாக இருக்கலாம் என்று ஊகிக்க இயலும்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் பாகிஸ்தானுடனும் இந்தியாவுடனும் (இரண்டும் எதிரி நாடுகள்) இலங்கை நெருக்கமான உறவை, இரண்டு நாடுகளையும் சமாளித்துக்கொண்டு போகும் உறவைப் பேணிவந்தது. இந்தியாவின் எதிரி நாடான சீனாவுடனும் நெருக்கமான உறவைப் பேணியது. இறுதியில் இலங்கையில் சீனா ஆழமாகக் காலூன்றிய பின்னரே இந்தியா விழித்துக்கொண்டது.

இந்தக் கசப்பான அனுபவங்களை கருத்தில் கொண்டே, இலங்கை தொடர்பாக மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டை இந்தியா தற்போது எடுத்திருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த விவகாரம் தற்பொழுது அம்பலத்துக்கு வந்த பின்னர், இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்த பின்பும், கோடிக்கணக்கான பணம் செலவில் இவ்வளவு பெருந்தொகையான போர் விமானங்கள் தேவையா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தியாவின் கடுமையான எதிர்ப்புக் காரணமாக பாகிஸ்தானிடமிருந்து இலங்கை போர் விமானங்களை வாங்குவதில்லை என்ற முடிவில் இனி மாற்றம் ஏற்பட இடமில்லை.

ஆனால், ஏதோ ஒரு நாட்டிலிருந்து இலங்கை இந்த விமானங்களை வாங்கத்தான் போகிறது. பாதுகாப்புச் செயலாளரும் இதனைத் தெரிவித்துள்ளார். போர் இல்லை என்பதற்காக நாட்டின் பாதுகாப்புச் சாதனங்களை அழித்துவிட முடியுமா? யுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டின் பாதுகாப்புக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். நாட்டுக்கு இவை தேவைதான்.

ஆனால், உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், அண்டை நாடுகளுடன் இலங்கை சுமுகமான உறவுகளைப் பேணிவரும் நிலையில், இவ்வளவு பெருந்தொகையான பணத்தை போர் விமானங்களுக்குச் செலவிட வேண்டுமா என்ற வினா எழுவது இயல்பே அதுவும் இந்த நாடு இன்றுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியில், பாதுகாப்புத் துறைக்குச் செலவிடப்படும் பெருந்தொகையான பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கம் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு செலவிடலாமே.

மொத்தத்தில் இலங்கை நாட்டின் அரச கட்டிலில் மாறி மாறி ஏறும் ஆட்சியாளர்கள், மோதகமும் கொழுக்கட்டையும் என்ற நிலையே தொடர்ந்து வெளிப்படுகிறது...!

பந்து இப்போது மக்கள் கைகளில்...!

வந்தியத்தேவர்

தனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கடந்த கால சம்பவங்களால் உலக நாடுகளின் மத்தியில் இலங்கை அரசுகளுக்கிருந்த இழுக்குகளைக் களைவதற்கு தற்போதைய அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதி பூண்டுள்ளார் என்பதுபோல அவரது ஒவ்வொரு அறிவிப்புக்களும் வெளியாகின்றன. ஏற்கனவே வன்முறைகளே அரசு என்ற நிலையில் இருந்து வந்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டி நல்லாட்சியை வழங்குவேன் என்ற உறுதி மொழியுடன் மக்களின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஒருவருட பதவிக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை என்றபோதும் கடந்த காலங்களில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் வெகுவாகக் குறைந்திருந்தது என்ற விடயம் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

கடுமையான சவால்கள்

தமிழ்மக்களினதும், சிறுபான்மை இனங்களதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் தனது குறிக்கோளை நிறைவேற்ற அவர் கடுமையான சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளார் என்பதும் மறக்கமுடியாது. கடந்த காலங்களில் தென்பகுதி அரசியல்வாதிகளால் கட்டி வளர்க்கப்பட்ட இனக்குரோதம், முன்னைய ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்புநடவடிக்கைகள், மீண்டும் தீமூட்டத் தயாராகிக் கொண்டிருக்கும் பௌத்த அதர்ம குருமார், இவர்களோடு புதிதாக முளைத்திருக்கும் ஸ்ரிக்கர் சிங்ஹலே போன்றவற்றை எல்லாம் சமரளித்தவர்கள் அவர்கள், அராஜக நடவடிக்கைகளை முறியடித்துத் தனது நல்லாட்சி சிந்தனையை செயற்படுத்த வேண்டிய நிலை அவருக்கு உண்டு. நேரடி எதிர்ப்பில் உள்ளவர்களை மட்டுமன்றி, கூட இருந்தே குத்தும் முள்ளையும் மெல்ல மெல்லக் கழற்றி வீசவேண்டிய நிலைப்பாடும் அவருக்கு உண்டு. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவான் சொல்லிய வண்ணம் செயல் என்கிறது திருக்குறள். அதாவது சொல்வதுபோல் செயல்படுவது அரிது. இது ஒன்றும் மைத்திரிபால சிறிசேன புரிந்து கொள்ளாத தல்ல. தற்சமயம் நாட்டில் மெல்லத் தலைகாட்ட ஆரம்பித்துள்ள சமாதானம் ஒற்றுமை போன்ற வற்றை நிரந்தரமாக்கும் வகையிலும் இனங்களுக்கிடையில் காணப்படும் கசப்புணர்வுகளையும் துடைத்தெறிந்து நாட்டில் ஒரு புதிய ஒளியை ஏற்படுத்த வேண்டும்என்ற அவரதுகோபாடுவெற்றியடைய வேண்டும். அதற்கான மாற்றங்களை ஏற் படுத்துவதற்காக தனது உயிரைக் கூட பணயம் வைக்கத்தயார் என்ற வகையில் அவரது தேசப்பற்று உயர்ந்துள்ளதாகவே காணப்படுகின்றது.

போரின் பின்னர் இடம்பெற்ற தவறுகள்

போரின் பின்னர் இடம்பெற்ற தவறுகளும் சீர்செய்யப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இலங்கையில் சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் எனத் துணிந்து அறிவித்தவர் முன்னாள் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவல. அந்த அறிவிப்பைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு கொத்தலாவல பதவியிழக்கக் காரணமானவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க. அவரைத் தொட்டுவந்த எந்த ஓர் அரசுமே தமிழர்களையோ சிறுபான்மை இனங்களையோ அவர்களும் இந்த நாட்டின் பிரசைகள் என்ற உண்மைகளையோ ஏற்றுக் கொண்டதாக இல்லை. இறுதியில் ஆட்சியில் இருந்த முன்னைய ஜனாதிபதிநிலைமைகளை மிகவும் மோசமாக்கிவிட்டார். அந்த நிகழ்வுகளே தொடருமானால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முன்வந்த நல்லாட்சிக்கான அணியினர் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வரும்போது அதனைக் குழப்பியடித்து நாட்டைப் படுகுழிக்குள் வீழ்த்த முனையும்செயல்களுக்கு எதிராக உண்மையில் கிளர்ந்தெழ வேண்டியது சிங்கள மக்களே. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க இலங்கைக்கு பொருத்தமானது சமஷ்டி அரசியலமைப்பு முறையே என்று கூறியிருந்தார். அன்று அது நடை முறைப்படுத்தப் பட்டிருந்தால் இன்று நாட்டின் நிலைமை அபிவிருத்தியும் வளங்களும் நிறைந்ததாக இருந்திருக்கும். இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய்விட வில்லை.

மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்

நாடு பற்றிச் சிந்திக்கும் ஒரு தலைமையைத் தேர்ந்தெடுத்த மக்கள், அவர் அளித்த வாக்கு றுதிகளை நிறைவேற்றக் கூடிய தாக தமது முழு ஒத்துழைப் பையும் அரசுக்கு வழங்க வேண் டும்.

நல்லாட்சிக்காக வாக்களித்த மக்கள் அது உருவாக இறுதிவரை கைகொடுக்க வேண்டி யதும் கடமை.

மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் இப்பொழுது கிளர்ந்தெழுகிறார்கள் என்றால் அது அரசுக்கு எதிரான ஒன்றல்ல.

உண்மையில் அது மக்களுக்கு எதிரான ஒரு சதியே. அவர்கள் தமது முயற்சியில் தளராதிருக்க உதவிதேடி எந்த நாட்டுக்கும் கூடச் செல்லலாம், நாட்டின் நலனுக்கான உறுதியில் இருந்து சறுக்கிக் கொள்ளாதவர்களாக மக்கள் இருந்தால் மட்டுமே எதிர்பார்க்கும் நல்லாட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்க முடியும்.

எல்லா மக்களும் சுயீட்சமாகவாழக் கூடியதான ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். பந்து இப்போது மக்களிடமே உள்ளது. கை நழுவிக் கொண்டால் இலங்கை மீண்டும் அதலபாதாளத்தில்தான்.

வாசகர் திருமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

மீண்டும் முஸ்லிம்களை குறி வைக்கும் பேரினவாதம்

அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்த - மக்கள் செல்வாக்கை இழந்த அரசியல்வாதிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்குக் கையில் எடுக்கும் ஆயுதம்தான் இனவாதம். பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளைக் குறிவைத்துச் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இந்த இனவாதம் திருப்பி விடப்படுகின்றது. இதனால் எழுகின்ற கிளர்ச்சிகள் - பேரழிவுகளின் ஊடாக அந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்றனர்.

மோசமான இனவாத அரசியல்

இந்த மோசமான இனவாத அரசியல் இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இந்த நாட்டில் இடம்பெற்று வந்த போரை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத்தைத் தூண்டி அரசியல்வாதிகள் ஒருபுறம் அரசியல் செய்தனர். மறுபுறம், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் பல இனக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. சுமார் 100 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனக்கலவரம், 2001 இல் இடம்பெற்ற மாவனெல்லை கலவரம் மற்றும் 2014 இல் இடம்பெற்ற அளுத்கம கலவரம் போன்றவை முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகளால் நிகழ்ந்தப்பட்ட இனக் கலவரங்களுள் சிலவாகும்.

அதேபோல், தமிழ் மக்களுக்கு எதிராகவும் பல இனக் கலவரங்கள் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஜூலைக் கலவரம் அவற்றுள் முக்கியமானதாகும். போர் முடிந்ததும் இனவாத அரசியலும் முடிவுக்கு வந்துவிடும் என மக்கள் நினைத்தனர். அவர்களின் எதிர்பார்ப்பு பிழைத்துவிட்டது.தானும் இன வாதத்தைக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துபவன் தான் என்ற உண்மையை மகிந்த ராஜபக்ச காட்டத் தொடங்கினார்.

மகிந்தவின் போர் வெற்றியால் கட்டியெழுப்பப்பட்ட மகிந்தவின் ஆட்சி ஓரிரு வருடங்களில் ஆட்டங்காணத் தொடங்கியது. போர் வெற்றியை விடவும் ஊழல், மோசடி மற்றும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு இந்த நாட்டு மக்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது. இதனால் மகிந்தவின் மக்கள் செல்வாக்கு மெல்ல மெல்லச் சரியத் தொடங்கியது. அதைச் சரி செய்வதற்கு அவர் இனவாதம் என்ற ஆயுதத்தைக் கையில் எடுக்கத் தொடங்கினார்.

ஆனால் ஒன்றிணைந்த தமிழர்களும் முஸ்லிம்களும் மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர். ஆனால், மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு மகிந்த இப்போது போராடி வருகின்றார். அதற்காக அவர் அதே இனவாதத்தை மீண்டும் கையில் எடுத்துள்ளார். அவரது தரப்பினர் குறிப்பாக, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்றவர்கள் தொடர்ச்சியாக இனவாதக் கருத்துக்களைக் கக்கி வருகின்றனர்.

புதிய அரசை சிறுபான்மை இனங்களுக்கு மாத்திரம் சொந்தமான அரசாகவும் சிங்கள மக்களுக்கு எதிரான அரசாகவும் காண்பித்துச் சிங்கள மக்களிடையே சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இனவாதத்தை விதைத்து வருகின்றனர். அவர்களுடன் பொதுபலசேனாவும் கைகோர்த்துள்ளது. இந்த இனவாதப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக 'சிங்கவர்களின் இரத்தம்' என்ற பெயரில் நாடு பூராகவும் ஸ்டிக்கர் பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதிகமான முஸ்லிம்களின் வீட்டுக் கதவுகளிலும், சிங்களவர்களின் ஒட்டோக்களிலும் இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த ஸ்டிக்கர்கள் பொறிக்கப்பட்ட டிசேர்ட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் முஸ்லிம்கள் மீண்டும் அச்சத்தை எதிர்நோக்கியுள்ளனர். மீண்டும் ஓர் இனக் கலவரம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றனர். இந்த நல்லாட்சியிலும் இதே நிலைதானா? இதற்காகவா இந்த ஆட்சியை உருவாக்கினோம் என்று கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

சிங்களவரின் இரத்தம்

இந்த இனவாதப் பரப்புரையின் பின்னணியில் இருப்பவர்கள் மகிந்த தரப்பினர் என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. அவரது கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. மகிந்த தரப்பினருக்குத்தான் இந்த இனவாதம் தேவையாக இருக்கின்றது. இவர்கள் அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்திருப்பவர்கள். கடந்த ஆட்சியிலும் இவர்கள் இந்த இனவாதத்தைத் தூண்டினர். இவர்களைத் தவிர வேறு எவருக்கும் இப்போது இன வாதம் தேவை இல்லை.

இது தொடர்பில் இந்த அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை இப்போதே முளையில் கிள்ளி எறிய வேண்டும்.

மகிந்த ஆட்சியில் இருந்ததைப் போன்று மௌனத்தைக் கடைப்பிடித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த ஆட்சியிலும் மௌனமாகத்தான் இருக்கப் போகிறார்களா என்ற கேள்விகளை இப்போது முஸ்லிம்கள் எழுப்பத் தொடங்கியுள்ளனர். தமிழ் - சிங்கள அரசியல்வாதிகள்தான் இந்த அரசிலும் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்கப் போகின்றார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

மகிந்தவின் ஆட்சியில் முஸ்லிம் அரசியல்வாதிகள் மஹிந்தவுடன் ஒட்டிக்கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான அத்தனை இன்வாதச் செயற்பாடுகளையும் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

இந்த ஆட்சியில் இவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பல ஆயிரக்கணக்கான தொன்கள் நிறைகொண்ட அரிசி மக்களின் பாவனைக்கு உதவாத வகையில் பழுதாய்ப்போனதாக வெளிவந்தசெய்தியைப்படித்தபோது எனக்கு மயக்கமே வந்துவிட்டது.

இலங்கை போன்ற வறிய நாடொன்றில் இத்தகைய வீண்விரயம் ஏற்பட்டுள்ளதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. விலை வாசிகள் உயர்வடைந்ததால் ஏராளமான குடும்பங்கள் தமது அன்றாட உணவைப் பெறுவதில் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த நாட்டு மக்கள் தமது பிரதான உணவாக அரிசியில் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருள்களையே பயன்படுத்துகின்றனர். தற்போது அரிசியின் விலையும் உயர்வடைந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் பல ஆயிரம் தொன் நிறையுடையஅரிசி மக்களுக்குப் பயன்படாத வகையில் பழுதாகிப் போயுள்ளது.

இதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுமென்பதைக் கூறத்தேவையில்லை.

அரசு இது தொடர்பான விசாரணைகளை உடனடியாக முன்னெடுத்து தவறிழைத்த அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொதுமக்களில் ஒரு பிரிவினர் தமது தேவைக்கு அரிசி கிடைக்காமல் ஏங்கிக் கொண்டிருக்கும்போது பெருந்தொகையான அரிசி வீணாக்கப்பட்டதை எந்த வகையிலும்ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊழலுக்கும், மோசடிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுத்து வரும் தற்போதைய அரசு இதுபோன்ற விரயங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

பொதுவாகவே அரச நிறுவனங்கள் என்றாலே அங்கு பணிபுரிகின்ற ஊழியர்கள் மெத்தனமாக நடந்து கொள்வதைக் காணமுடிகின்றது. இதனால் பொதுமக்களே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே இந்த அரிசி வீணாக்கப்பட்ட விடயத்தில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படும்போது தான் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ள முடியும்.

பிள்ளையார் பிடிக்கப்போய்....

கடந்த சில நாள்களாக முதலமைச்சர் பற்றி ஊடகவியலாளர்கள், கல்விசார் பெரியோர்கள், தமிழ்ப் பொதுமக்கள் விமர் சிக்கின்றவற்றை முதலமைச்சர் பார்ப்பார்தானே. கடந்த மாகாண சபைத் தேர்தலுக்கு தமிழ் மக்களாகிய எமக்குத் தெரியாத ஒருவராயிருந்த க.வி.விக்னேஸ்வரனை எமது ஏகத்தலைவர் சம்பந்தன் ஐயாதான் நல்லெண்ண அடிப்படையில் கொண்டு வந்து முதலமைச்சர் ஆக்கினார்.

ஆனால் அவரோ தமிழ் மக்கள் தன்னை ஆதரித்து தனக்கு வகை தொகையாக வாக்குகள் போட்டனர் என்கிறார். நாம் போட்டதோ வீட்டுக்குச் சார்பாகவே தவிர, விக்னேஸ்வரனுக்கு அல்ல என்பதை அவர் உணர வேண்டும்.

எனவே சுருக்கமாகக் கூறினால், தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டு மனம் மாற வேண்டும் அல்லது அமைதியாகத் தனது பணியைச் செய்யவேண்டும். அதுவே எமக்கும் அவருக்கும் நல்லது.

சு.கோபாலசிங்கம், கோயில் வீதி.

ஆசாரி விடைகொடுத்தும் பூசாரி விடை கிடைக்கவில்லையே!

சில்லாலை உந்துசாந்தை வீதி சில்லாலை வடக்கு கிராம சேவகர் பிரிவையும் சில்லாலை தெற்கு கிராம சேவகர் பிரிவையும் பிரிக்கும் எல்லை வீதியாகும். இது சில்லாலையிலிருந்து சாந்தை ஊடாக தும்பளப்பாய் வயல் வெளிக்குச் செல்லும் விவசாய வீதியாக உள்ளது.

இந்த வீதியின் அந்தத்தில் குடியிருக்கும் ஒருவர் கடந்த வருடம் வீதியை மறித்து வேலி அடைத்தபோது சில்லாலை விவசாய சம்மேளனம் எடுத்த கடும் முயற்சியால் சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் தலையிட்டு இந்த வீதி விவசாயப் போக்குவரத்துக்கு உகந்த முறையில் திறந்து விடப்பட்டது.

ஆயினும் இந்த வீதியில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் மின்கம்பங்கள் குறுக்கே நிற்பதால் வீதி கிடைத்தும் பயன்படுத்த முடியாதுள்ளது.

எனவே இந்த மின்கம்பங்களை நகர்த்தி இந்த வீதியை விவசாயப் போக்குவரத்துக்கு வசதி செய்து தருவார்களா?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுப்பார்களா?

சில்லாலை விவசாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவுகணைத் தாக்குதலில் ஐ.எஸ்.உப தலைவர் சாவு

பக்கதாத், ஜன.12

ஐ.எஸ் அமைப்பின் உப தலைவர் ஈராக்கின் வான் தாக்குதலில் கொல்லப் பட்டதாக ஈராக்கிய இராணு வம் தகவல் வெளியிட்டுள் ளது.

கடந்த சனிக்கிழமை வெளி யிடப்பட்ட இந்த அறிவிப் பில் பர்வான நகரில் இடம் பெற்ற தாக்குதலில் அபு பக்கர் அல் - பஹ்தாதி உயி ரிழந்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

ஈராக்கிலும்- சிரியாவிலும் மேற்கொள்ளப்படும் தொடர் ஏவுகணை தாக்குதலினால்

இதுவரை ஐ.எஸ்.இன் 10 தலைமைகள் உயிரிழந் துள்ளனர் என்றும், மீத மிருக்கும் தலைமைகள் குறிவைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஜ-ரி4)

கொரிய தீபகற்பத்தில் போர்ச்சூழல்

சியோல், ஜன.12

தென்கொரியாவின் வான் எல்லையில் அமெரிக்கா வின் அதி நவீன போர் விமா னங்கள் பறந்த சம்பவம் பதற் றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டுகளாகவே வட கொரியாவுக்கு தென்கொரி யாவுக்கும் இடையே தீரா பகை இருந்து வருகிறது.

இந்தநிலையில்கடந்த6ஆம் திகதி அணுவை விட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த ஐதர சனை வெடித்து வெற்றிகர மாக சோதனை செய்ததாக வடகொரியா அறிவித்தது.

இதனால் 5.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஜப்பான் மற்றும் தென் கொரியா குற்றஞ்சாட்டின. மேலும் வடகொரியாவின் இந்தச் செயல் உலக நாடுக ளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத் தியுள்ளது.

ஆனால், ஐதரசன் குண்டு வெடிப்பை நியாயப்படுத்திய வடகொரியா, ஐதரசன் குண்டு வெடித்து சோதித்திருப்பது தற்காப்பு நடவடிக்கைதான். பிராந்தியத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அணு குண்டு போர் அபாயத்தில் இருந்து காப்பதற்கு மேற் கொண்ட நடவடிக்கை.

இது இறையாண்மை கொண்ட ஒரு நாட்டின் சட்ட பூர்வமான உரிமை. இதனை எவரும் விமர்சிக்க முடியாது என்று கூறியிருந்தது.

இந்த நிலையில் அணு ஆயுதங்களை வீசக் கூடிய பி-52 ரக போர் விமானத்தை தென்கொரியாவின் மீது அமெரிக்கா பறக்கவிட்டது.

இதனுடன், தென்கொரியா வின் எப்-15 ரக போர் விமா னங்களும், அமெரிக்காவின் எப்-16 ரக போர் விமானங் களும் அணி வகுத்தன. பின்னர் அவை தங்களது தளத்துக்கு திரும்பியது.

அமெரிக்க பசுபிக் இராணு வத் தளபதி அட்மிரல் கூறு கையில், அமெரிக்கா நட்பு நாடுகளான தென்கொரியா, உள்ளிட்ட நாடுகளின் உள் நாட்டு தற்பாதுகாப்புக்கு அளித்துள்ள உறுதியான வாக்குறுதியின் வெளிப்பாடு தான் தென்கொரியா மீது அமெரிக்காவின் போர் விமா னம் பறந்த செயல் என்று தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவுக்கு ஆதர வாக அமெரிக்கா தனது சக்தி வாய்ந்த போர் விமானத்தை பறக்க விட்டிருப்பது, கொரிய தீபகற்ப பகுதியில் பதற் றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவுக்கு விடுக் கப்பட்ட மிரட்டலாகவே இது பார்க்கப்படுகிறது. (ஜ)

ரஷ்யாவின் குண்டு வீச்சால் சிரியாவில் 81 பேர் சாவு

பெய்ரூட், ஜன.12

சிரியாவில் ஜனாதிபதி பார் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு வரு கின்றனர். மற்றொரு பக்கம் சர்வதேச நாடு களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளும் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், தற்போது அல் கொய்தா தீவிரவாதிகளும் சிரியாவில் பல்வேறு நகரங்களை தங்களது பிடியில் வைத்துக் கொண்டு அரசுக்கு தொந்தரவு கொடுத்து வரு கின்றனர்.

சிரியாவில் அதிபர் பார் அல் ஆசாத் துக்கு ஆதர வாக, அரசுக்கு எதிராக சண்டையிட்டு வரும் அனைத்து தரப்பினரையும் குறிவைத்து ரஷ்யா வான்வழி தாக்குதல்களை நடத்தி வருகிறது. வடமேற்கு பகுதியில் உள்ள இட்லிப் மாகா ணத்தில் அல்-கொய்தா தீவிரவாதிகளின் பிடியில் உள்ள மாராத் அல் நுமான் நகரை குறிவைத்து நேற்று முன்தினம் ரஷ்யா தனது போர் விமா னங்கள் மூலம் குண்டுமழை பொழிந்தது.

அந்த நகரில் உள்ள சிறைச்சாலை, நீதி மன்றம் மற்றும் சந்தைப் பகுதி ஆகியவற்றின் மீது நடத் தப்பட்ட தாக்குதலில் 23 அல்-கொய்தா தீவிர வாதிகள் உட்பட சிறைக்கைதிகள், அப்பாவி பொது மக்கள் என கொல்லப்பட்டவர்களின் எண் ணிக்கை 81 ஐ எட்டியுள்ளதாக சிரியாவின் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள் ளது.

மேலும் இந்தத் தாக்குதலில் ஏராளமானோர் படுகாயம் அடைந்திருப்பதாலும், அவர்களில் பலரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதால்சாவு எண்ணிக்கை மேலும் உயரக் கூடும் என அஞ்சப்படுகிறது. (ஜ)

4.5 பில்லியன் பழைமையான விண்கல் கண்டெடுக்கப்பட்டது

சிட்னி, ஜன.12

தெற்கு ஆஸ்திரேலியாவில் ஏரி ஒன்றில் மில்லியன் ஆண்டுகள் பழைமை வாய்ந்த விண்கல் ஒன்றுகண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஞாயிற்றுத்தொகுதியின் உருவாக்கம் பற்றி அறிய முடியும் என பூகோளவியலாளர்கள் தெரிவித்தனர்.

1.7 கிலோகிராம் நிறையுடைய இந்தக்கல் லை பேர்த் கேர்ட்டின் பல்கலைக்கழகத் தின் பூகோளவியலாளர்களும், ஆய் வாளர்களும் கண்டெடுத்துள்ளனர்.

கண்டெடுக்கப்பட்ட விண்கல் 4.5 பில் லியன் வருடங்கள் பழைமை வாய்ந்தது என அறியப்பட்டுள்ளது. அந்த விண் கல்லில் காணப்படும் மூலக் கூறுகள் ஞாயிற்றுத்தொகுதி உருவாக்கத்தின் போது காணப்பட்ட சமகால மூலக்கூறுகள் என அறியப்பட்டது. கண்டெடுக்கப்பட்ட விண் கல்லை ஆராய்வதன் மூலம் ஞாயிற்றுத் தொகுதி உருவாக்கம் குறித்து அறிய முனைந்துள்ளனர். (ஜ-ரி4)

அண்மையில் இடம்பெற்ற பதான்கோட் விமானத் தளம் தாக்குதலில் கொல் லப்பட்ட இந்திய வீரர்களுக்கு புதுடில்லியில் அமைந்துள்ள மசூதி ஒன்றுக்கு முன்னால் மக்கள் அஞ்சலி செலுத்தினர். (ஜ)

சர்ச்சையை ஏற்படுத்திய அழகு சாதன விளம்பரம்

பாங்ஹொக், ஜன.12

தாய்லாந்தின் அழகு சாதன பொருள்களை உற் பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் விளம்பரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தோலின் நிறம் வெண்மையாக இருப்பது வெற்றி தரும் என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஸ்னோஸ் என்று பெயரிடப்பட்ட குறித்த அழகு சாதனப் பொருள் நிரந்தரமான வெண் மையைத் தரும். தோலின் நிறம் மீண்டும் கருமையாகாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சியோல் சீக்ரட் எனும் உற்பத்தி நிறு வனம், குறித்த விளம்பரத்துக்கு மன்னிப்பு தெரி வித்தது. நிறப்பாகுபாட்டை தூண்டியதாகக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டதால் இந்த திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஆசியாவில் தோலை வெண்மையாக்கும் உற் பத்தி பொருள்களுக்கு மவுசு அதிகம். ஆனால் இவ்வாறான விளம்பரங்கள் மக்களின் மத்தி யில் வெறுப்பு மனப்பான்மையை ஏற்படுத் தக்கூடியன. இவ்வாறான விளம்பரம் மோசமா னவை, இன்னமும் இவ்வாறான விளம்பரங்கள் முகச்சுழிப்பை ஏற்படுத்துகிறது என தமஸ்ட் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித் தார். (ஜ-ரி4)

ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரம் மீட்பு

காபூல், ஜன.12

ஆப்கானிஸ்தானில் வடக்கில் உள்ள குண்டூஷ் மற்றும் ஹெல் மண்ட் மாகாணத்தின் தென் பகுதியையும் கடந்த ஆண்டு தலிபான் தீவிரவாதிகள் கைப் பற்றினர். அவற்றை மீட்க ஆப் கானிஸ்தான் மற்றும் பாகிஸ் தான் இராணுவ வீரர்கள் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் உதவி வருகின்றன. இதற் கிடையே ஆப்கானிஸ்தான் இராணு வம், பொலிஸாரும் இணைந்து தலி கிஸ்தான் எல்லையில் தீவிரவாதி களுடன் கடும் போரிட்டு வருகின்றன.

இந்த நிலையில் தஜிகிஸ்தான் எல் லையில் உள்ள தர்ஹாத் மாவட்டத்தில் தலிபான் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த முக்கிய நகரம் நேற்று முன் தினம் கைப்பற்றப்பட்டது.

அதே நேரத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் 30 தீவிரவாதிகள் கொல் லப்பட்டுள்ளனர். அவர்களின் வாக னங்களும், ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை ஆப்கானிஸ்தான் இராணுவ அமைச்சகம் அதிகாரபூர்வ மாக அறிவித்துள்ளது. (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கர்

பீடியாப்ரோ™

ஆர்வ சிந்தனை வேகமாகக் கற்றுக்கொள்ள உதவுகின்றது

முறையான ஊட்டச்சத்து மட்டுமன்றி, போதிய செயற்பாடுகளும் குழந்தையின் அபிவிருத்திக்கு முக்கியமாகும்.

இரும்புச்சத்து, ஒமேகா 3 மற்றும் முக்கியமான ஊட்டச்சத்துக்களின் செழுமை நிரம்பிய அங்கர் பீடியாப்ரோ, விசேடமாக 1 முதல் 5 வயது நிரம்பிய குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது.

புரதம்
கல்சியம்
விட்டமின் D

துத்தநாகம்
செப்பு
செலினியம்
விட்டமின் A, C, E

இரும்புச்சத்து
ஒமேகா-3
பிரீபயோடிக்ஸ்

*அங்கர் பீடியாப்ரோ 1-2 இல் இரும்புச்சத்து மற்றும் பிரீபயோடிக்ஸ் அடங்கியுள்ளது
அங்கர் பீடியாப்ரோ 2-5 இல் இரும்புச்சத்து மற்றும் ஒமேகா - 3 அடங்கியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம்

வெள்ளத்தால் அவலப்படும் கிராம மக்கள்

முல்லை மாவட்டத்தில் புரட்டாதி – ஐப்பசி மாதங்களில் தொடங்கிய மழை இன்னும் விட்டபாடில்லை. பயிர்ச்செய்கை நிலங்கள் மற்றும் குடிமனைகளுக்குள் வெள்ளம், மக்கள் இடப்பெயர்வு, இதற்கெல்லாம் முக்கிய காரணம் வீதி சீரின்மை, அதற்கான பாலங்கள் அமைக்கப்படாமை, வடிகால்கள் இல்லாமை என்பனவையாகும். ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பண்டார வன்னிக் கிராமம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வசந்த புரம்,பேராறு பகுதிகள் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டன. கனமழை கொட்டித் தீர்த்தமக்களை இடம்பெயரச்செய்தது.அத்துடன் விவசாயத்தையும் அழித்துவிட்டது.

மக்கள் இடப்பெயர்வு

கடந்த 6 ஆம் திகதி அன்று பெய்த மழை வெள்ளம் காரணமாக பண்டாரவன்னிக் கிராமத்தில் வதியும் 52 குடும்பங்களைச் சேர்ந்த 150 ற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து கிறிஸ்தவ ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களின் இடர் பற்றி அறிந்ததும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் மற்றும் கமநல சேவை நிலையத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினர், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப்பலரும் உடன் செயலில் இறங்கியதால் மக்கள் உயிரிழப்பின்றிப் பாதுகாக்கப்பட்டனர். கிழக்கே குருவிச்சை ஆறு தெற்கே விரால் மடு ஆறு தொடங்கி மேற்கு வரை சென்று வடக்குப் பக்கமாக குருவிச்சை ஆற்றினை வந்தடைகிறது. வலைக்குள் அகப்பட்டது போன்று எந்தப் பக்கமாகவும் மக்கள் வெளியேறாத படி காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் அவர்களின் வீடுகள் யாவும் நீர் புகுந்து உடைமைகள் யாவும் அழிவடைந்துள்ளன. இது இன்று நேற்றல்ல, மழை காலங்களில் இதே நிலைதான் தொடர்கிறது. கடந்த வருடங்களில் அம் மக்களைப் படகுகள்மூலமும்காப்பாற்றிகரைசேர்த்தனர். இதனால்அவர்களதுஉடைமைகள்பொருள்கள் யாவும் ஆற்றோடு சென்றன. இம் மக்கள்தோட்டத்தொழிலாளர்கள்.அனைவரும் கூலித் தொழிலையே நம்பி வாழ்பவர்கள். இவர்களுக்கென விவசாயத்துக்கான காணிகள் எதுவுமில்லை. அவர்கள் இருக்குமிடத்தை மட்டும் தக்கவைத்துக் கொண்டு இப்படியான இடர்களை எதிர்கொண்டுவருகின்றனர். இவர்கள் பயணிக்கும் வீதிகளுக்கு எவ்வித புனரமைப்புமில்லை. வடிகால் வசதியில்லை. இரண்டு மூன்று ஆறுகளுக்கு மத்தியில் வாழ்கின்ற போதிலும் அவசரமாக வெளியேற பாலங்கள் சரியாக அமைக்கப்படவில்லை. இதனால் இப்படியான ஆபத்தான நேரத்திலும் நோயாளர்களைக் கொண்டு செல்ல எவ்வித வாகனங்களையும் கொண்டு வரமுடிவதில்லை. கிழக்கே குருவிச்சை ஆற்றுப்பாலத்தைக் கடந்து முல்லைத்தீவு பிரதான வீதியைச் சென்றடைய வேண்டும். மேற்கே விரால்மடு ஆற்றைக் கடந்து 3 கிலோமீற்றர்தூரம்சென்றுபுதுக்குடியிருப்பு வீதியை அடைய வேண்டும். அவர்களிடம் துவிச்சக்கர வண்டிகளை தவிர வேறு வாகனம் எதுவும் கிடையாது. இங்கே வருகின்ற அதிகாரிகள் நிலைமைகளைப் பார்த்தும் கேட்டும் விட்டு வசதிகள் செய்து தருவதாக வாக்குறுதிகளை மட்டும் கூறிச்செல்வர். ஆனால் எதுவும் கிடைப்பதில்லை. இந்த மக்கள் சுமார் 30 வருடங்களுக்கு மேல் இங்கு வசிக்கிறார்கள். ஆனால் ஒரு பொது நோக்கு மண்டபம் கூட அமைக்கப்படவில்லை.முன்பள்ளிகள் அமைக்கப்படவில்லை. கிறிஸ்தவ ஆலயத்தைத் தவிர வேறு எந்த வசதிகளுமில்லை.

குடிதண்ணீர் வசதி கூட இல்லை

குடிதண்ணீர் வசதி கூட இல்லாத நிலைமையில் உள்ளனர். இங்கு 52 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களுக்கு முக்கியமானது வீதியாகும். பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட மக்கள் போக்குவரத்துச் செய்யும் வீதி மிக முக்கியமாகும். இந்த வீதி உடன் திருத்தப்பட வேண்டும். அத்துடன் இரண்டு ஆறுகளுக்குமான பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். இப்பகுதி குடியேற்றத்துக்கு ஏற்றதாக இல்லாத நிலையிலும் குடியமரக் காணிகள் வழங்கியது அன்றைய அதிகாரிகளின் கவனக் குறைவாகும். அப்படி வழங்கியிருந்த போதிலும் அவர்களுக்கான வீதி புனரமைத்துக் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும். 30-35 வருடங்களாக சேற்றிலும் நீரிலும் தான் அவர்கள் வாழ்க்கை செல்கிறது. இது காலம் காலமாக இடம்பெற்று வருகிறது. தேர் தல் காலத்தில் மட்டும் இக் கிராம மக்களுக்கு பல வாக்குறுதிகள் கொடுப்பார்கள்.

ஆனால் எவ்வித செயற்பாடுகளும் இங்கு இடம்பெறுவதில்லை. இம்மக்கள் காலம் காலமாக வெள்ளத்தினால் பலவிதமான அவலங்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அல்லற்படும்போது வழங்கப்படுவது ஒரு கிலோ சீனி, பருப்பு, ரோச் லைற், மா போன்றவை மட்டும் தான். ஆனால் அவர்கள் கேட்பது எமக்கு நிவாரணமாகத் தர வேண்டியது எமது வீதியைப் புனரமைத்தல் மற்றும் வடிகாலமைத்தல், இருபக்க ஆறுகளின் மேலான பாலங்களை அமைத்தல் போன்றவைதான். தற்போது ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இடர் முகாமைத்துவப் பிரிவினரால் ரோச் லைற், ரேடியோ, பற்றறி என்பவை வழங்கப் பட்டன. அவசியமானது எது என்பது புரியவில்லை. பெயருக்கு நிவாரணம் எனக் கூறும் அளவுக்கு செயற்பாடுகள் இடம்பெறுவதுதான் கவலை அளிக்கின்றது.

மிதுனம்

உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் இடபராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். இடபராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.

மற்றவர்களுக்கு உதவி செய்யும் பண்பும், சமூகப் பணிகளில் ஆர்வமும் கொண்ட மிதுன ராசி நேயர்களே! இந்த 2016-ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படியிருக்கும் எனப் பார்க்கும்போது, உங்கள் ராசியாதிபதி புதனுக்கு நட்புக் கிரகமான சனி பகவான் ருண, ரோக ஸ்தானமான 6ம் வீட்டில் பலமாக சஞ்சாரம் செய்வதால் தொழில், வியாபாரம் செய்பவர்களுக்குப் போட்டிகள் குறையும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கும். பயணங்களால் அனுகூலப் பலன்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளிலும் வெற்றிகிட்டும். பொருளாதார நிலையும் ஓரளவுக்கு மிகச் சிறப்பாகவே இருக்கும், எந்தவிதமான எதிர்ப்புக்களையும் சமாளித்து ஏற்றம்பெறுவீர்கள்.

ராகு 3 ஆம் வீட்டிலும், கேது 9ஆம் வீட்டிலும் சாதகமாக சஞ்சரிப்பதால் எல்லாவகையிலும் மேன்மைகளைப் பெறுவீர்கள். பொன்னவன் என போற்றக்கூடிய குரு பகவான் இந்த ஆண்டின் தொடக்கத்தில் 3ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சிகளில் தடைகள், உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் உண்டாகும். 02-08-2016 முதல் குரு ஜென்ம ராசிக்கு 4 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருப்பதும் சாதகமான அமைப்பு என்று சொல்லமுடியாது. இதனால் சுக வாழ்வு,சொகுசுவாழ்வுபாதிப்படையும். பணவிடயங்களில்மிகவும்கவனத்துடன் செயற்படுவது, குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து நடப்பது மிகவும் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப்பின் அனுகூலம் உண்டாகும். பணம் கொடுக்கல்- வாங்கலில் பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தாதிருப்பது உத்தமம். எதிலும் சிந்தித்துச் செயற்பட்டால் நற்பலன்களை அடையமுடியும்.

உடல் ஆரோக்கியம்

உங்களின்உடல்ஆரோக்கியமானதுஅற்புதமாக இருக்கும். எடுக்கும்எந்தவொருகாரியத்தையும்மிகவும்சுறுசுறுப்பாகச் செய்துமுடிக்க முடியும். எதிர்பாராத வகையில் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் அதன்மூலம் நன்மையான பலன்களே அமையும். குடும்பத்தில் உள்ளவர்களால் சிறுசிறு மருத்துவச் செலவுகள் ஏற்பட்டாலும் எதையும் உங்களால் சமாளித்துவிட முடியும். தேவையற்றபயணங்களைத்தவிர்ப்பது நல்லது.

குடும்பம், பொருளாதார நிலை

பணவரவுகள் ஓரளவுக்குச் சிறப்பாகவே இருக்கும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். சிலருக்கு அசையா சொத்து வகையில் சிறுசிறு வீண் செலவுகள் ஏற்படலாம். கணவன்-மனைவி சற்று அனுசரித்து நடந்துகொண்டால் குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். புத்திரர்களால் சில மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம். வீண் செலவுகளைக் குறைப்பது நல்லது.

உத்தியோகம்

உத்தியோகத்தர்கள் பணியில் திருப்திகரமாகச் செயற்படலாம்.உங்களின்திறமைகளுக்கேற்றபாராட்டுதல்களைப் பெறமுடியும். உயரதிகாரிகளின் ஆதரவுகளால் கௌரவப் பதவிகள் கிடைக்கும். எதிர்பார்க்கும் ஊதிய உயர்வானது தாமதப்பட்டாலும் மனநிம்மதி குறையாது. எதிர்பாராத இடமாற்றங்கள் சிலருக்கு அலைச்சலை ஏற்படுத்தக்கூடும்.

தொழில், வியாபாரம்

தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு, எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். புதிய வாய்ப்புக்கள் தேடிவரும். கூட்டாளிகள் சாதகமாக செயற்படுவதால் பல வகையிலும் லாபங்களைப் பெறமுடியும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்திச் செய்யநினைக்கும் காரியங்களைச் சற்று சிந்தித்துச் செயற்படுத்துவது நல்லது. வேலையாள்களின் ஒத்துழைப்பானது சிறப்பாக இருக்கும். அபிவிருத்தியும் பெருகும்.

கொடுக்கல்- வாங்கல்

கமிசன் ஏஜென்ஸி, காண்டிராக்ட் போன்ற துறைகளில் இருப்பவர்களுக்கு மேன்மையான பலன்களே உண்டாகும். லாபங்கள் பெருகும். பணம் கொடுக்கல்- வாங்கலிலும் எந்தப் பிரச்சினையும் இருக்காது என்றாலும் பிறரை நம்பி பெரிய தொகைகளைக் கொடுப்பதைத் தவிர்க்கவும். தேவையற்ற வம்பு வழக்குகளால் எதிர்பாராத வீண் விரயங்கள் ஏற்படும்.

அரசியல்

அரசியல்வாதிகளுக்கு செல்வம், செல்வாக்கு, பெயர், புகழ் யாவும் உயரக்கூடும். உடனிருப்பவர்கள் மிகவும் சாதகமாகச் செயற்படுவார்கள். எதிரணியினரால் வீண் பிரச்சினைகளும் மனச் சஞ்சலங்களும் உண்டாகும் என்றாலும் பெரிய கெடுதிகள் ஏற்படாது. கட்சியின் வளர்ச்சிக்காக நிறைய செலவுகள் செய்ய நேரிடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கே.கே.இரத்தினசிங்கம்

ந.வித்தியாதரன்,
முன்னாள் ஆசிரியர் - 'உதயன்', 'சுடர்ஒளி'

தமிழ் ஊடகத்துறையில் ஒரு சகாப்தம்

ஆசிரியர் கே.கே.இரத்தினசிங்கம், இலங்கைத் தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் ஒரு சகாப்தம் படைத்தவர். ஆறு தசாப்தங்களுக்கு மேல் அத்துறையில் கோலோச்சிய ஒரு ஜாம்பவான்.

தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற்றில் அதற்கென தனியான ஓர் உரைநடை வடிவத்தை உருவாக்கிய சிற்பிகளுள் ஒருவர் அவர் என்று கூறுவது மிகச் சரியானது.

செய்திச் சொல்லாடல்களில் சுருக்கம், இறுக்கம் என்ற இரண்டையும் முழு அளவில் புகுத்தியவர் அவர். நீட்டி முழக்காமல் சுருங்கக் கூறி, விளங்க வைக்கும் தந்தி ரோபாயம் கைவரப் பெற்றவர்.

இரண்டு, மூன்று, நான்கு சொற்களுக்கு மேற்படாத வசனங்கள் மூலம் செய்திகளை அமைத்து அதன் வாயிலாக கருத்துச் செறிவுமிக்க - விடயதானம் அதிகம் கொண்ட - செய்திகளையும் பாமரர்களும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் புதிய உரை நடை வடிவத்தை சாமர்த்தியமாக நடைமுறைப்படுத்தியவர். இலகு தமிழ்ச் சொற்களை சரளமாகக் கையாண்டவர்.

ஈழத்தமிழ்ப் பத்திரிகைத் துறையின் சரித்திரத்தில் ஒரு குரு - சிஷ்ய பண்பியல்பு அவர் வழியாகத் தொடர்ந்தது.

மிகப்பெரும் ஜாம்பவான்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத்துறையில் மிகப்பெரும் ஜாம்பவான் என்று போற்றப்படும் எஸ்.டி.சிவநாயகம் அவர்களுக்கு எப்போதுமே வலதுகரமாக - மிகவும் நம்பிக்கைக்குரிய சகாவாக - விளங்கியவர் கே.கே.ஆர்.

'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராகவும், 'வீரகேசரி' பத்திரிகையின் இணை ஆசிரியராகவும், 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகவும் பின்னர் 'சூடாமணி' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் எஸ்.டி.சிவநாயகம் விளங்கிய சமயங்களில் அவரது பிரதிவிம்பம் கே.கே.ஆரே என்று கருதும் அளவுக்கு என்றும் - எப்போதும் - நம்பிக்கைக்குரியவராக விளங்கினார்.

அச்சில் வரும் செய்திகளை எழுதியவர் எஸ்.டி.எஸ்ஸா அல்லது கே.கே.ஆரா என்று அந்தந்த அலுவலகங்களில் பணியாற்றியவர்கள் கூட அடையாளம் காண முடியாத அளவுக்கு இருவரினதும் எழுத்தோட்டம், உரைநடை, சிந்தனைப் போக்கு, கருத்து வெளிப்பாடு சகலதும் ஒருங்கிசைந்திருக்கும்.

பிரதம ஆசிரியர் எஸ்.டி.எஸ்ஸின் சிந்தனை வளம் கே.கே.ஆரின் பேனா மையில் ஊற் றெடுக்கும் அதிசயம் கண்டு நாம் வியப் புண்டு.

தாம் வளர்த்த - தம்மிடம் வளர்ந்த - இளம் ஊடகவியலாளர்கள் அத்துறையில் சிகரங் களை எட்டும்போது அதனைப் பார்த்துப் பெருமிதம் கொண்டு, புளகாங்கிதம் அடையும் பெருந்தகைகளாக எஸ்.டி.எஸ்ஸும், கே.கே. ஆரும் விளங்கினர்.

முக்கூட்டுச் சிற்பிகள்

தமிழ்ப் பத்திரிகைத் தடத்தில் நானும் சில திற மைகளைப் பதித்தபோது அது கண்டு பெருமைப்பட்டவர்கள் அவர்கள் இருவரும், மற்றும் என்னை வழிப்படுத்திய 'உதயன்', 'சஞ்சீவி' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில் நாதனும்.

இந்த முக்கூட்டுச் சிற்பிகளினால் வடிவமைக்கப்பட்ட பல ஊடகவியலாளர்கள் இன்று இத்துறையில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றமை அவர்கள் மூவரின் சிறப்புக்குக் கிடைத்த அடையாளங்களாகும்.

என்னை சிறு வயதில் தூக்கி வளர்த்தவர் கே.கே.ஆர். கொழும்பில் எனது பெற்றோர்கள் தங்கியிருந்த வீட்டில் இருந்துதான் இளைஞரான கே.கே.ஆர். 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரிய பீடப் பணிக்குச் சென்று வந்தார். அதனால் எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்தே நான் அவரது செல்லப்பிள்ளை.

அவர் என்னைத் தூக்கி வைத்திருந்த சமயம் அவரது 'சேர்ட்' பொக்கற்றிலிருந்த பத்து சத நாண யக்குற்றி ஒன்றை எடுத்து நான் விழுங்கிவிட் டேன். அது பெரிய விவகாரமாயிற்று என்றால் எனக் கும் அவருக்கும் உள்ள உறவை அனைவரும் புரிந்துகொள்ள முடியும்.

1979 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஒரு நாள், அன்று தான் அவர் பிரதி ஆசிரியராகவும், எஸ்.டி.சிவநாயகம் பிரதம ஆசிரியராகவும், கானமயில்நாதன் செய்தி ஆசிரியராகவும் இருந்த 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகை அலு வலகத்தில் ஒரு நிருபராகக் காலடி எடுத்து வைத்திருந்தேன்.

நான் முதன்முதலில் எழுதிய செய்தி விளையாட்டுத் துறை தொடர்பானது. அந்தச் செய்தியின் நடையும், போக்கும், லாவகமும் கே.கே.ஆருக்குப் பிடித்துப் போயிற்று.

அந்தச் செய்தியை எடுத்துச் சென்று உதவி ஆசிரியர்களின் மேசையில் தூக்கிப் போட்டாராம் கே.கே.ஆர்.!

பாருங்கள், யாழ். இந்துக் கல்லூரித் தமிழை. 20 வயது இளைஞனின் தமிழை. அவன் வித்தி என்ரை நெஞ்சில வளர்ந்தவன். அதனாலை செய்தித் தமிழ் அவன்

விரலில் விளையாடுகிறது...! - என்று கூறிப் பெருமிதப் பட்டாராம் கே.கே.ஆர்.

புதிய நிருபரான என்னை 'தினபதி' ஆசிரியபீடமே வாஞ்சையுடன் அரவணைக்கும் வாய்ப்புக்கு இப்படிப் பிள்ளையார் சுழி போட்டவர் கே.கே.ஆர்.

ஆனால் பாராட்டு எப்போதும் கிடைப்பதில்லை. தமது பணியில் கறாரும், கண்டிப்பும் மிக்க அவரிடம் அர்ச்சனைகளை வாங்கிக் கட்டிக்கொள்வோரில் நானும் அடங்குவேன். நாம் எழுதிய செய்தியின் உரைநடைப் போக்கு சரிவராவிட்டால் செய்தி எழுதிச் சென்ற தாள்களை எங்கள் முகத்தில் வீசவும் பின்நிற்கமாட்டார். ஊடகப் பணியில் கண்டிப்பும் கறாரும் மிக்க 'பிடிச்சுராவி' அவர். ஆனால் அதற்காக யார் மீதும் தனித்துக் கோபமோ, பகைமையோ பாராட்டமாட்டார். வேலை என்றால் அவர் 'சுடுதண்ணி'. ஆனால் எங்களைப் போல அவருடன் நெருங்கிப் பணியாற் றுபவர்களுக்கு அந்த கறாருக்குப் பின்னால் - கடூரத்துக்குப் பின் னால் - புதைந்து கிடக்கும் நேர்மையான, மென்மையான அன் புள்ளம் நிறைந்த மனிதம் நன்கு புரியும்.

> **தமது பணியில் கறாரும், கண்டிப்பும் மிக்க அவரிடம் அர்ச்சனைகளை வாங்கிக் கட்டிக் கொள்வோரில் நானும் அடங்குவேன். நாம் எழுதிய செய்தியின் உரைநடைப் போக்கு சரிவராவிட்டால் செய்தி எழுதிச் சென்ற தாள்களை எங்கள் முகத்தில் வீசவும் பின்நிற்கமாட்டார். ஊடகப் பணியில் கண்டிப்பும் கறாரும் மிக்க 'பிடிச்சுராவி' அவர்.**

தமது நிறுவனத்துக் கும், நிர்வாகிக்கும் எப் போதுமே முழு விசு வாசமான அவர், பிற ருக்கு ஒரு குண்டூ சிக்காத் தனனும் விலை போகக்கூடாது என்ற பத்திரிகா தர்மத்தை எங்களுக்குப் போதிப்பதற்காகவோ, பணத்துக்காகவோ, அல்லது வேறு ஒரு சகாயத்துக் காகவோ விலை போகாதவர் அவர்.

நிர்குணனாய் பணியாற்றிய பெருந்தகை

வருட முடிவில் புதிய டயரி ஒன்றை அவருக்குக் கையளித்து, அவரைக் கையில் போட்டுக் கொள்ளலாம் என்று கருதி வரும் பிரமுகர்கள் - ஏன் அவரின் நெருங்கிய நண்பர்கள் கூட - அவரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டு சீ... இந்த மனுசன் என்ன ஆள்...? என்று மனதுக்குள் நொந்து கொண்டு போவதை நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன். அவ்வளவு தூரம் நிர்குணனாய் பணியாற்றியவர் அவர்.

பல சமயங்களில் அவரது வார்த்தைகள் சுடு சொற்களாக வந்து விழும். ஆனால் அதில் எப்போதுமே ஒரு நேர்மை - நெஞ்சுரம் - இருக்கும். நியாயம் தோன்றும்.

அரசியல் அழுத்தங்களுக்கு மசிந்து போகாத திட சங்கற்பம் எப்போதும் அவரிடம் இருந்தது.

'வீரகேசரி'யில் பணியாற்றிய காலத்தில் அப்போது அங்கு உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்த ஸ்ரனிஸ்லஸ் பாலசிங்கம் தனது சிரேஷ்ட ஆசிரிய பீட உறுப்பினரான கே.கே.ஆரின் ஆகர்ஷிப்பில் மயங்குண்டு போனார்.

பின்நாளில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞராக விளங்கிய அன்ரன் பாலசிங்கம்தான் அவர். அன்ரன் பாலசிங்கம் மறையும்வரை இருவரின் நெருக்கமும் தொடர்ந்தன. இருவரும் ஒரு கோப்பையில் அருந்தியவர்கள். அதை அருகில் இருந்து பார்த்தவன் நான்.

கொழும்பு வாழ்க்கையில் அடுத்தநாள்பாட்டுக்கு என்ன வென்றுதவித்த சமயங்களில் என்னைப் போசித்தவர்கள் இருவர். ஒருவர் - 'சிரித்திரன்' சுந்தர். மற்றவர் -கே.கே.ஆர். - என்று அடிக்கடி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறுவார்கள்.

அரசு - புலிகள் பேச்சாகட்டும் அல்லது பிற அரசியல் செய்திகளாகட்டும் அன்ரன் பாலசிங்கத்துக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து ஒருமையில் உரிமையுடன் பேசும் பண்பியல்பை கே.கே.ஆர். கைவிடவில்லை.

பெருமதிப்பு வைத்திருந்த பாலா அண்ணன்

2002 இல் அரசு - புலிகள் பேச்சு தாய்லாந்தில் நடந்த சமயம் அன்றைய பேச்சு முடிந்து ஹோட்டல் அறைக்குத் திரும்பியிருந்த மதியுரைஞர் பாலசிங்கத்தை அவரது அறையில் சந்தித்தேன். அப்போது பாலசிங்கத்துக்கு ஓர் அழைப்பு வந்தது - தொலைபேசியில்,

பாலா அண்ணன் என்னைத் திரும்பிப் பார்த்து டேய்... உன்ரை ஆசிரியர் கறுப்புக் 'கண்ணாடியர்' லைனில்...! - என்றார் மெதுவாக. பின்னர், பாலா அண்ணன் பேசிய விதம் எனக்கு ஆச் சரியமாக இருந்தது.

பள்ளிக்கூடத்து மாணவன் போல 'ஸேர்' 'ஸேர்' என்று கே.கே.ஆரை விளித்துப் பேசினார் பாலா அண்ணன். ஓம் ஸேர்... ஓம் ஸேர்... எல்லாம் உவன் வித்திக்கு சொல்லியிருக்கிறன். விவரமாக - விளக்கமாக - சொல்லியிருக்கிறேன். அவன் எல்லாம் எழுதி அனுப்புவான் - என்ற பாணியில் பாலா அண்ணன் பதிலளித்த போதுதான், அவர் கே.கே.ஆர். மீது வைத்திருந்த மதிப்பு, மரியாதை எல்லாம் எனக்கு விளங்கியது.

பாடசாலை ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய கே.கே.ஆர்., தமது இருபது வயதுகளின் நடுப்பகுதியில் 'சுதந்திரன்' பத்திரிகையில் ஆசிரியர் சிவநாயகத்தின் கீழ் சேர்ந்து தமிழ்ப் பத்திரிகைத் துறையுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டார். பின் நாள்களில் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளின் செய்தி ஆசிரியராக அவர் இருந்த சமயத்தில் அந்த நிறுவனம் சிறிமாவோ அரசினால் 'சீல்' வைத்து மூடப்பட்டது.

பிரிட்டன் தூதரகத்திலும் பணியாற்றியவர்

அந்தக் கால கட்டத்தில் வேறு வழியின்றி கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் அரசியல் அதிகாரியாகப் பணி புரிந்தார் கே.கே.ஆர். மீண்டும் 'தினபதி' செயற்படத் தொடங்கியதும் பல மடங்கு அதிகம் சம்பளம் வழங்கிய பிரிட்டன் தூதரகப் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு மீண்டும் தினபதிக்கு வந்துவிட்டார்.

பிரிட்டன் தூதரகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தாம் வகித்த பதவிக்கு பொருத்தமானவராக தமது கனிஷ்ட ஆசிரிய பீட அலுவலராக பணிபுரிந்த ஸ்ரனிஸ்லஸ் (அன்ரன்) பாலசிங்கத்தைத் தேர்ந்து, பிரிட்டன் தூதரகப் பணிக்கு சிபாரிசு செய்து இணைத்தார்.

(27 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதுமையாகச் சிந்தனை செய்தல்

ஒரு குரு தனது சீடர்களுக்கு சிந்தனைப் படைப் பாக்கம் தொடர்பாக வகுப்பு எடுத்துக் கொண் டிருந்தார். எதையும் புதுமையாகவும் மற்ற வர்கள் சிந்திக்காத வகையிலும் உருவாக்கு வதுதான் புதுமைப் படைப்பாக்கம் என்று சீடர்களுக்கு அவர் கூறினார். வகுப்பு முடிந்ததும் சீடர்களை அழைத்துக் கொண்டு குளக்கரைப் பக்கம் போனார். பின்னர் சீடர்களிடம் ஒரு சல்லடையைக் கொடுத்துவிட்டு, இந்தச் சல்லடையை தண்ணீரால் நிரப்புங்கள் என்று கூறினார்.

சீடர்கள் குருவை வினோதமா கப் பார்த்தார்கள். இதில் ஏதோ காரணம் இருக்கிறது என்று எண் ணினார்கள். பிறகு ஒவ்வொருவராக குளத்துக்குள் இறங்கினார்கள். சல்லடையை குளத்து நீருக்குள் விட்டு அப்படியே அள்ளி எடுத்தார் கள்.

சல்லடையில்தான் ஆயிரக் கணக்கான ஓட்டைகள் இருக் குமே? அதனால் தண்ணீர் அப்படியே கீழே வந்துவிட்டது. ஒருவர் மாற்றி ஒருவர் செய்து பார்த்தும் தண்ணீர் சல் லடையில் நிற்கவில்லை.

சீடர்களுக்குக் கடுப்பாகி விட்டது! தங்களது குருவைப் பார்த்து, நீங்கள் முடி யாததொரு காரியத்தைப் பற்றிச் சிந்திக்கச் சொல்கிறீர்கள். சல்லடையைத் தண்ணீரால் நிரப்புவது இயலாத காரியம்" என்றார்கள். நிச்சயமாக சொல்கிறீர்களா? என்று குரு கேட்டார்.

ஆம்! அதிலென்ன சந்தேகம் குருவே?" சீடர்கள் குரல் ஒட்டுமொத்தமாக ஓங்கி ஒலித்தது.

குரு இப்போது சல்லடையை தன் கையில் வாங்கினார். வேகமாக அதை குளத்தின் உட்புறத்தை நோக்கி வீசினார். அந்த சல்லடை நீருக்குள் முழுவதுமாக மூழ்கிப் போனது.



பின்னர் அவர் சீடர் களைப் பார்த்தார், இப்போது பார்த் தீர்களா? அந்த சல் லடை முழுவதும் தண்ணீர்...!" என்று கூறியவர், மேலும், சல்லடையை நீரால் நிரப்ப வேண்டும் என்றுதானே சொன் னேன்..., தண்ணீரை விட்டுஎடுக்கச்சொல்ல வில்லையே.." என் றார்.

புதுமையாகச் சிந் தனைசெய்வது தொடர் பாகச் சீடர்களுக்குப் புரிய வைத்தார் குரு.

பொம்மை

சின்னச் சின்னப் பொம்மை
சிந்திக்க வைக்கும் பொம்மை
வண்ண வண்ணப் பொம்மை
வணக்கத்துக்குரிய பொம்மை!

தீயன வற்றைப் பேசாதே
என்று சொல்லும் மறு பொம்மை!
தீயன வற்றைக் கேட்காதே
என்று சொல்லும் ஒரு பொம்மை!

காந்தி விரும்பிய பொம்மை
மூன்று குரங்குகள் பொம்மை!
தீயன வற்றைப் பார்க்காதே
என்று சொல்லும் ஒரு பொம்மை!

அரிய கருத்தைச் சொல்லும்
அழகிய பொம்மைகள் பாருங்கள்!
சிறிய பொம்மைகள் என்றாலும்
சீரிய பொம்மைகள் பாருங்கள்!

பொன்மொழி

- சின்னஞ்சிறு குழந்தைகள் என்னிடம் வர வழி கொடுங்கள். அவர்களைத்தடை செய்யாதீர்கள். அவர் களுக்கு உரியதே ஆண்டவனின் பேரரசாங் கம்.
- எவரெவர் என் பெயரில் குழந்தைகளை வரவேற் கின்றனரோ அவர்கள் என்னையே வரவேற் கின்றனர்.

– இயேசுநாதர்

- ஒழுக்கமற்றவனை நண்பனாகக் கொள்ளாதே.
- ஒரு தவறைச் செய்யும் மனிதன் அதைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அதுவும் ஒரு தவறாகிவிடும்.

– கன்ஃப்யூஷியஸ்

- கைக்கு அருகில் உள்ள முதல் கடமையை ஆற் றுங்கள். அடுத்த கடமை என்ன என்பது தன்னாலே புலப்படும்!

– தாமஸ் கார்லைல்

- வெறும்வளர்ச்சிஒருவனை மனிதனாக்குவதில்லை. சிந்தனைதான் மனிதனை உருவாக்குகிறது.

– ஜசக் டெய்லர்

- அறிவுக்கு முற்றுப் புள்ளி வைக்காதே. எப்போதும் அறிவுக் கதவு திறந்தே இருக்கட்டும்.

– இராஜாஜி

- பிறர் கொடுக்காமல் எந்தப் பொருளையும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது.

– மகாவீரர்

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

– விவேகானந்தர்.

- சோம்பலுடன் ஒரு மனிதன் பல ஆண்டு வாழ்வதை விட உறுதியுடன் சுறுசுறுப்பாக ஒரு நாள் வாழ்வதே மேல்.

– புத்தர்

- அன்பின் வழியாகச் செய்கின்ற ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

– காந்தி

வரலாற்றில் இன்றைய தினம்

1908 – தொலைதூர றேடியோ செய்தி முதன்முதலாக ஈ.பிள் கோபுரத்தி லிருந்து அனுப்பப்பட்டது.
1915 – ஐக்கிய அமெரிக்க பிரதிநிதிகள் சபை பெண்களுக்கான வாக்குரி மைத் தீர்மானத்தை நிராகரித்தது.
1918 – பின்லாந்து யூதர்களை முழு அளவிலான பிரசைகளாக ஏற்றுக் கொள்ளும் சட்டவரைவு நடைமுறைக்கு வந்தது.
1932 – அமெரிக்க முதல் பெண் செனட்டராக ஹற்றி கறாவே தேர்வு.
1959 – ஸ்பெயின் நேர்ஜா குகைகள் மீள் கண்டுபிடிப்பு.
1966 – கொம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பு உள்ள வரை தென் வியட்நாமில் அமெரிக்கா தொடர்ந்தும் நிலைகொள்ள வேண்டும் என அமெ ரிக்க ஜனாதிபதி லண்டன் பி.ஜோன்சன் தெரிவிப்பு.
1976 – பலஸ்தீன விடுதலை இயக்கம் பாதுகாப்பு சபை விவாதத்தில் வாக்களிக்கும் உரிமை இன்றி) கலந்துகொள்ள ஐக்கிய நாடு கள் பாதுகாப்புச் சபை ஏற்றுக்கொண்டது.
1991 – வளைகுடாப் போரில் குவைத்திலிருந்து ஈராக்கை வெளியேற்ற இராணுவபலத்தை பிரயோகிக்க அமெரிக்க காங்கிரஸ் சட்ட ஒப்புதல்.
1994 – கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல். தமிழ்க் கட்சிகள் பெரும் பாலானவை பகிஷ்கரிப்பு. வேட்பு மனுத்தாக்கல் முடிவடைந்த நிலையில் த.வி.கூட்டணி அ.இ.த. காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல். எவ் உட்பட பல தமிழ்க் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்யவில்லை.
– பூநகரிப் போர்க் கைதிகளை செஞ்சிலுவை அதிகாரிகள் பார்வையிட்டனர்.
1995 – புலிகள் – படையினரின் தளபதிகள் திருகோணமலையில் சந்திப்பு.
– பிலிப்பைன்ஸ் வந்தடைந்தார் பாப்பரசர்.
– ஈழ அறிஞர்கள் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றாமல் திருப்பி அனுப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் மர்மம் உள்ள தாக இந்து நாளிதழ் தெரிவிப்பு. உலகத் தமிழாராய்ச்சிமன்றம் இரண்டாகப் பிளவுபடும் அபாயம்.
– தமிழக காங்கிரஸ் கட்சி பிளவுண்டது. குமரி அனந்தன் தலை வராகப் பொறுப்பேற்பு வாழப்பாடி ராமமூர்த்தி அதிருப்தி.
1998 – மனித குளோனிங் முறையைத் தடுக்க – 19 ஐரோப்பிய நாடுகள் ஒப்புதல்.
2004 – RMS கியூன் மேரி–2 உலகின் ஆகப் பெரிய கப்பல் தனது கன னிப் பயணத்தைத் தொடங்கியது.
2004 – சுவீடன் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளுடன் கிளி நொச்சியில் சந்திப்பு.
2008 – குடாநாட்டுக்கான பொருள்களில் 15 வீதமானவை கொழும்பில் மாயம்.
2009 – இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும். இல்லையேல் தமிழர் அழிவர் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில் விவரிப்பு.
2010 – கெயிட்டி நிலநடுக்கத்தில் ஒருலட்சம் பேர் சாவு. தலைநகரின் பெரும் பகுதி அழிவு.

வர்ணம் தீட்டலாம் வாங்க!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் வீடுகளின்

குளியலறை மற்றும் குளியலறை சாதனங்கள்
கொமட், சலவை இயந்திரம் ஆகியவற்றில்
கல்சியம் படிவடைந்து
தொல்லை தருகின்றதா?

இவற்றுக்கு நிரந்தர உறுதியான தீர்வுகளுக்கு

A member of the IDOL family
UV Water Solution
water science technologies
Right solution for water issues

தொடர்புகளுக்கு 0775092737
277 கச்சேரி நல்லூர் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

LAKELAND INTER - AMERICAN SCHOOL

ADMISSION FOR MONTESSORI

முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

எமது பாடசாலை செயற்பாடுகளாவன:-

- Dr.Maria Montessori இன் எண்ணக் கருவில் பிள்ளைகளின் பரிணாம வளர்ச்சிக்கேற்ற முறையில் வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் (AMI) முறை மூலமான கற்றல் செயற்பாடுகள்.
- இலகு முறையிலான உபகரணங்கள் கொண்டு காட்சிப்படுத்தல் முறையில் கற்பித்தல்.
- மழலைகள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்பாற்திறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் புத்திசாதுரியமாக வெளிக்கொணர்தல்.
- பால் முன்பள்ளியில் கல்வியிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் தமது ஆற்றல்களை பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைந்து, அறிவை பெருக்குதல்.
- பிள்ளைகளுக்குப் புத்திக்கூர்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, கடமையுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் புகட்டுதல்.

எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.

உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter-American School. விரைவுங்கள் உங்கள் பதிவுகளுக்கு.

வயதெல்லை 2½ - 5½

விரைவுங்கள் உங்கள் பதிவுகளுக்கு

பதிவு கட்டணங்களுக்கு 50% கழிவு

இச்சலுகை ஜனவரி 31 வரை மட்டுமே
(மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் மாத்திரம்)

20000/= Now 10000/=

தொடர்புகளுக்கு:
No-154, Brown Road, Jaffna.
T.P No : 021 222 6242 acrolankajaf@gmail.com

British College Of Beauty Studies

Thirunelvely Junction
Thirunelvely
Jaffna
0767011645

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான கல்லூரி British College of Beauty Studies Olialakan Studio இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான 40 இற்கும் மேற்பட்ட Diploma பாடநெறிகள். English Computer Courses அழகுக்கலை, தையல், Icing Varity Cakes, Ladies Skills development, Ladies special போன்ற பாடநெறிகள் உண்டு. O/L, A/L மாணவர்களுக்காகவும் சுய தொழில் செய்ய விரும்புபவர்களுக்காகவும், வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காகவும் விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள். Video Editing, Album Desiging, Photographers & Video graphers கான Training வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

எங்கள் சிறப்பம்சங்கள்

1. பண உதவி செய்துதரப்படும்
2. அழகுக் கலையில் மட்டும் 20 பாடநெறிகள் வடிவமைத்துள்ளோம்
3. அதிக புள்ளிகள் பெறுபவர்களுக்கு Awards Certificates வழங்கப்படும். மற்றும் சுற்றுலாக்கள் அழைத்துச் செல்லப்படும்.
4. அழகுக் கலையில் ஆரம்பம் முதல் Advance Makeup பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றது.
5. எங்களுடைய சான்றிதழ்கள் அனைத்துமே International Certificates ஆகும்.
6. வகுப்புகள் முடிவில் Parlour System Training வழங்கப்படும்.
7. வகுப்புக்கள் முடிந்த பின் மாணவர்களுக்கு சுய தொழில் அமைக்க பண உதவி செய்துதரப்படும்.
8. Parlour open பண்ண விரும்புபவர்களுக்கு பண உதவி மற்றும் Parlour நடத்த தேவையான Training வழங்கப்படும்.
9. ஒருநாள் அழகுகலை பயிற்சி முதல் 3.6 மாத அழகுகலை வகுப்புக்களும் நடைபெறுகின்றது.
10. எங்கள் கல்லூரியில் படிக்கும் ஒவ்வொருவருக்கும் சுய தொழில் செய்வதற்கான உதவிகள் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 701 1645

British College of Beauty Studies
Palaly Road, Thirunelvely Junction, Jaffna.

Olialakan Award 2016
Photographers a Beauticians கான கௌரவிப்பு நிகழ்வும்
இடம்பெற உள்ளது பதிவுகளை மேற்கொள்ளவும்.

CIMA
Chartered Institute of Management Accountants

WISDOM JAFFNA
THE PLACE FOR CIMA

Create Your Own Success Story...

After O/Level or A/Level Start
CIMA Certificate Level
@ Wisdom...

Fast Track your Future to become a Chartered Global Management Accountant (CGMA)
with the new generation professional business qualification, CIMA and a BSc Degree...

Call us to guide you better
076 777 0747
www.wisdombusiness.com

உங்களது
உயர் கல்வி...
உயர்ந்த நோக்குடன்...
உங்களை நாடி...

Commencement Dates:
18th January 2016
(Weekday Batch)
REGISTRATIONS NOW ON..!

உங்களுக்கான விசேட சலுகை..!

நீங்கள் 2015 ஆகஸ்ட்
க.பொ.த உயர்தரப் பரீட்சை முடித்தவராயின்

3A சித்திகள் கொண்டிருப்பின்	அதில் இலங்கை மட்டம் 100 ற்குள்
கற்கை கட்டணத்தில்	கற்கை கட்டணத்தில்
25%	50%
கழிவு வழங்கப்படும்	கழிவு வழங்கப்படும்

நீங்கள் 2015 டிசம்பர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடித்தவராயின் கற்கைக் கட்டணத்தில் 25% கழிவு வழங்கப்படும்

இச்சலுகை 2016 ஜனவரி 18 ஆம் திகதி வரை மட்டுமே

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education
E : Jaffna@wisdombusiness.com
021 222 07 27
021 720 0777
ROBERT GORDON UNIVERSITY ABERDEEN
CIMA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டமும், அபிவிருத்திக் குழுவுக்குமான புதிய நிர்வாகத் தெரிவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இதில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும்கலந்து கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ற-ஜ)

ANANDA HOMES AND CONSTRUCTIONS திருநெல்வேலி

உங்கள் இல்லத்தை தரமாக அமைத்துத்தர

1. சாதாரண வீடு - 18 லட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 5 லட்சம் (3 அறை, கோல், சமயலறை உட்பட)
2. மாடி வீடு- 35 லட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 10 லட்சம் (4அறை, கோல், சமயலறை உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை-1½ லட்சத்திலிருந்து
4. பழைய வீடுபுனரமைப்புச் செய்தல்
5. கடை, கட்டடத் தொகுதி அமைத்தல்
6. சுற்றுமதில் அமைத்தல்

குறிப்பு: 1. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
2. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்

அழையுங்கள்: ஆனந்தன்
T.P: 0786155929, 0213205939

JAVA C++ AutoCAD
WEB PHP Hardware
AccPack Tally MYOB
PeachTree Sagee
English Shingalam
MsOffice Graphics
MCSE CCNA A+ N+

வெளிநாட்டுபல்கலைக்கழக அனுமதிக்கான
TOFLE IELTS GRE SAT

மேலதிக விபரங்களிற்கு பெயர், கற்கைநெறி என்பவற்றை772395895ற்கு sms செய்யவும்.

MCS IT CAMPUS
யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்

IDM Nations Campus Since 1981

BE READY TO
MAKE A DIFFERENCE WITH
HIGHLY TRUSTED IDM DIPLOMAS
ACCEPTED LOCALLY AND INTERNATIONALLY
FOR THE PAST 30 YEARS

HND
COMPUTING AND SYSTEM DEVELOPMENT

edexcel PEARSON

HOT LINE 0774419901

- Internationally Recognized Program
- Quality Assured and Affordable Higher Diploma
- Course Duration 16 Months
- Experienced Lecture Panel
- Flexible Entry / Learning Options Available

Register on / Before 25th January

Our International Affiliations: BNAT, bucks, edexcel, Charles Sturt University, OPEN UNIVERSITY, BIT, bcs

IDM Nations Campus இன் யாழ் குடாநாட்டிற்கான கிளை தலைமையகத்தின்கீழ் பின்வரும் முகவரியில் மாத்திரமே இயங்கி வருகின்றது.

IDM Nations Campus
IDM NATIONS CAMPUS
#216, Nawalar Road, Jaffna | Tel: 021 222 9901
E-mail: jaffna@idmedu.lk | www.idmedu.lk

புதிய பிரிவுகள் ஆரம்பம்

LONDON METROPOLITAN COLLEGE

IELTS
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

IELTS
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

APPLIED SPOKEN ENGLISH (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோருக்கான கற்கை நெறி

DIPLOMA IN ENGLISH
Duration: 60 hours (Week, Weekends)

COMPUTER COURSES
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna
Tel: 021 753 8395

HOTLINE : 0774765990 | 021 753 8395

வவுனியாவில்
கல்வியுலகின் புதிய சகாப்தம்

EDI
Educational Development Institute

கவிஞன் பப்ளிகேசன் அருகாமை, டிரான்ஸ்போமர் சந்தி, பண்டாரிகுளம், 076 8078451

புதிய பிரிவுகள் ஆரம்பம், 17.01.2016

தரம் 1,2,3,4 இற்கான பிரிவுகள் தரம் 5 புலமைப்பரிசில் பிரிவுகள்

விசேடமாக பேச்சு சிங்கள, பேச்சு ஆங்கில, மனக்கணித மற்றும் கணனிப் பயிற்சி வகுப்புக்கள் திறமைமிகு பயிற்றப்பட்ட ஆசிரியை குழாம்

இலகுவு வரு கலைல் அதிக மாணவர்களை கிராமியமட்டம் வரைக்கு அனுபவமுள்ள ஆசிரியர்
திரு.கா.துணைவன்
B.A (Gen), BEd(Primary), M.A(Tamil), MATE, PGDEM
இவரின்றியின் வகுப்புகள் எமது கல்வி நிலையத்தில் மட்டுமே

தரம் 6 - 11 வரை
தனித்துவம் மிக்க எமது ஆசிரியர்குழாம்

கணிதம்
திரு.S.ரூபன்
திரு.S.புஸ்பன்

விஞ்ஞானம்
திரு.K.ராகவன்

ஆங்கிலம்
திரு.S.துவாரகன்
திரு.S.சூரியதாசன்

வரலாறு
திரு.P.கெங்கன்
திரு.N.S.றஜீவ்

தமிழ்
திரு.N.சிவலிங்கம்

சமயம்
திரு.S.சூரியதாசன்

சிங்களம்
திருமதி.பா.சாரதா

சுகாதாரம்
திருமதி தர்சினி

தகவல் தொழில்நுட்பம்
திரு.பாலகலைஞன்

விசேட கணிதம்
(நீட்டலுடன் கூடிய வினாவிடை வகுப்புக்கள்)
திரு.எம். என். பால-கண்ணதாசன்

எந்தவொரு பிரிவிலும் 24 மாணவர்கள் மட்டுமே அனுமதி

எம்மோடு இணைந்து கொள்ளுங்களேன்
உங்கள் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் எவண்டு நிற்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசமைப்பினால் தமிழருக்கு தீர்வு வருமா?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது மகிந்தவின் நெருங்கிய சகாக்களான விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில ஆகியோர் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இனவாதத்தைக் கக்கினர். ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று ரணில் பிரதமரானால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படும், சமஷ்டி ஆட்சி ஏற்படுத்தப்படும் என்று சிங்கள மக்களுக்குப் பயம் காட்டப்பட்டது. ஆனால் இவை சிங்கள மக்களிடம் எடுபட வில்லை என்பது தேர்தல் முடிவுகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப்போன மகிந்தவைப் பிரதமராக்கும் முயற்சி பிசுபிசுத்துப் போனது.

தற்பொழுது புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சமயம் இந்த இனவாதச் சக்திகள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. அரசமைப்பில் திருத்தம் செய்வது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கைக்கு அமைய பிரதமர் ரணில் அரசமைப்பில் திருத்தம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறும் பட்சத்தில் அரசமைப்பு நிர்ணயச் சபையை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படும். அரசமைப்பு நிர்ணய சபைக்கு 21 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புச் சபையாக மாறி புதிய அரசமைப்பைத் தயாரிக்கப்போகின்றது.

ஆகவே பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பில் திருத்தம் செய்யும் பிரேரணை புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப முயற்சியே. பொதுமக்களின் கருத்துகளைத் திரட்டுவதற்காக 24 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதால் புதிய அரசமைப்பை உருவாக்குவதில் அரசு அவசரம் காட்டமாட்டாது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தெற்கின் இனவாதச் சக்திகள் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டுவிட்டது போன்று செயற்படுகின்றன. புதிய அரசமைப்பைக் கிழித்தெறியப் போவதாகப் பொது பலசேனா சூளுரைக்கிறது. வடக்கு, - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படப் போகின்றன, சமஷ்டி ஆட்சி முறை உருவாகப்போகிறது, தமிழீழம் பிறக்கப்போகிறது என்றெல்லாம் கற்பனை செய்து விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில ஆகியோர் உளறுகிறார்கள். ஆகவே புதிய அரசமைப்பை மகிந்த ஆதரவு அணி எதிர்த்து வாக்களிக்கும் என்பது உறுதியாகிவிட்டது. மகிந்த ஆதரவு அணி எதிர்த்தாலும் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் இது நாடாளுமன்றத்தில் நிறைவேறத்தான் போகிறது.

தற்போதுள்ள அரசமைப்பு இனம், தன்னாதிக்கம், பௌத்த மதம், சிறுபான்மை உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் போன்றவற்றில் பாதுகாப்பை வழங்கியிருப்பதால் புதிய அரசமைப்பு ஏன் என்று கேட்கிறார்கள், மஹிந்த ஆதரவு அணியினர். அரசு இவர்களது சலசலப்புகளுக்கு அஞ்சாமல் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும். தற்போதைய அரசமைப்பின் கீழ் நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. சிறுபான்மை இனங்களின் நிலை, அவர்களது உரிமைகள், மதம் என்பனவற்றுக்கான பாதுகாப்பு தற்போதைய அரசமைப்பில் உள்ளதைவிட மேலும் பலப்படுத்தப்படவேண்டும். நாட்டின் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வாகப் புதிய அரசமைப்பு இருக்குமானால் ரணில் மைத்திரி ஆட்சிக்காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆட்சிக்காலமாக இருக்கும். ஆகவே இனவாதிகளின் நெருக்குதல்களுக்கு அஞ்சாது அரசாங்கம் செயற்படுவது அவசியம் ஆகும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வாய்ப்புகள் இந்த ஆட்சியில் காணப்படுவதால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் நிதானமாக நடந்துகொள்ளவேண்டிய தேவை உள்ளது.

எண்ணம் பெறும் வடிவம்

(நேற்றைய தொடர்ச்சி)

ஞானம் பெற்ற புத்தரைக் கேட்போம். அவர் கூறுகிறார்: நச்சுத்தேய்ந்த அம்புபட்ட ஒருவனின் புண்ணைக் குணப்படுத்தாமல், மருத்துவரை அழைக்காமல், இது எங்கிருந்து வந்த அம்பு? வடக்கிலிருந்தா, தெற்கிலிருந்தா? யார் எய்தது? இதை, உயரமானவனா? குள்ளமான வனா? என்ன நிறம்கொண்டவன் அவன்? கறுப்பனா, வெள்ளையனா? எந்தச் சாதியைச் சேர்ந்தவன்? என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால், இதற்கெல்லாம் விடை தேடுவதற்குள் அவன் இறந்து போகக் கூடும் என்கிறார். அதாவது, பிறந்திருக்கிறோம், இவ்வுலகில் வாழும் வழியைப் பார்ப்போம் என்பதே அவரது உபதேசம். நாமும் இத்தகைய சிந்தனைகளைச் சற்று ஒதுக்கிவிட்டு, எண்ணங்கள் எப்படி வாழ்வில் பயனளிக்கும் என்பதைக் கவனிப்போம். மனத்திற்குக் காலப்பாகு பாடில்லை. இறந்த காலம், எதிர்காலம் என்ற வேறுபாடில்லை. நாம் எதை விரும் புகிறோமோ அந்த எண்ணத்தை ஆழ்மனத்தில் நிகழ்காலத்தில்



புகுத்திவிட்டால் அதை மனம் உண்மையாக ஏற்றுக் கொள்கிறது. எமிலிகூ என்ற பிரெஞ்சு மன மருத்துவரும் அதைத்தான் கூறினார்; நான் வளர்ந்து வருகிறேன்; முன்னேறி வருகிறேன்; என் உடல் ஆரோக்கியமாக இருக்கிறது என்று நிகழ்காலத்திலேயே மனத்துடன் பேசவேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

எம்முடைய உடல் ஒரு இயந்திரம் போன்றது. எம்முடைய உடற்சக்தியிலோ, மூளைச்சக்தியிலோ வறட்சி ஏற்பட்டு விட்டதானால் அது எவ்வளவு சிறிதாக இருந்த போதிலும் சரி, நாம் செய்யும் எல்லா வேலைகளிலும் தன்னுடைய பிரதிபலிப்பைச்செய்துதான்தீரும். பலர் இளமையில் ஓய்வின்றி உழைத்து வாலிபத்தின் உச்சத்திலும் முதுமையிலும் யாதொரு செயலும் செய்ய இயலாதவர்களாகி விடுகின்றனர். மின்சார விளக்கை எரியச் செய்த அவர்களுடைய சக்தியானது ஒரு மெழுகுதிரியைக் கூட எரியச் செய்ய இயலாததாகி விடுகின்றது. உலகின் கண்களையே கூச வைத்துவிடும் என்று வாய் கூசாது பெருமையடித்த அவர்களுடைய பிரகாசமானது அவர்களை மங்கலான வெளிச்சத்தில் தட்டுத்தடுமாற விட்டு விட்டு அகன்று விடுகின்றது. வாலிப மிடுக்கில் பலர் ஓயா உழைப்பு மேற்கொள்வதால் தங்களுடைய சக்தியை விரயமாக்கி விடுகின்றனர் . பலர் சோம்பேறித் தனத்தாலும், இரவு விழிப்பாலும், கெட்ட பழக்க வழக்கங்களை மேற்கொள்வதாலும், துன்மார்க்கத்தில் ஈடுபடுவதாலும், அரை குறை வேலை செய்வதாலும் தங்களுடைய உயிரனைய சக்தியை வீணாக்கி, நாசப்படுத்தி, புதைகுழியை வெகு விரைவில் அடைந்துவிடுகின்றனர்.

நடைமுறை வாழ்வில், ஆழ்மனதிற்குள் எண்ணங்களைப் புகவிடும் ஒரேமுறை எமது நினைவு மூலம் மட்டும் தான். சதா

> “எம்முடைய உடல் ஒரு இயந்திரம் போன்றது. எம்முடைய உடற்சக்தியிலோ, மூளைச்சக்தியிலோ வறட்சி ஏற்பட்டு விட்டதானால் அது எவ்வளவு சிறிதாக இருந்த போதிலும் சரி, நாம் செய்யும் எல்லா வேலைகளிலும் தன்னுடைய பிரதிபலிப்பைச் செய்துதான் தீரும்.”

ஒன்றைப்பற்றி நினைப்பதே வேண்டுகோளாய், பிரார்த்தனையாய் ஆழ்மனத்தில் புகுந்து பயனைத்தருகிறது. ஒரு சோதனையில் கூடைப்பந்து விளையாடுபவர்களை இரு பிரிவாகப் பிரித்தார்கள். ஒருபிரிவுக்கு, தினம் மனத்தால் ஒரு ஐந்து நிமிடம் பந்து விளையாடுமாறும், பந்தைக்கூடையில் போடுமாறும் கூறினார்கள். மற்றப் பிரிவுக்கு எந்தப் பயிற்சியும் கொடுக்க வில்லை. இவ்விரு பிரிவுகளையும் பலமுறை விளையாடச் செய்த தில் மனத்தால் பயிற்சி பெற்ற பிரிவே வெற்றி பெற்றது. மனத்தால் திரும்பத் திரும்ப எண்ணுவது மிக்க பலம் தருகிறது. காரோட்டக் கற்றுக்கொள்ளும் போதும், விமானம் ஓட்டப்பயிற்சி செய்யும் போதும் செயலை எவ்வளவு எளிதாக்குகிறது. என்பது தெரிய வரும். வட்டப்புள்ளியைக் குறி பார்த்து எறிவோரும் காற்பந்து விளையாடுவோரும் தங்கள் வெற்றிகளுக்கு மனப்பயிற்சியே காரணம் என்கின்றனர்.

குடிப்பது கூழானாலும், பெருக்குவது தெருவானாலும், நாம் எமது எண்ணங்களால், மனோ நிலையால், நாம் அரசனாக உலவ வேண்டும். எம் எண்ணம் மாறும் போது சூழ்நிலை உயர்கிறது. நாம் உயர்கிறோம். ஆகவே, ராசா வேடம் போடுங்கள். உங்களுக்குப் பிடித்த இலட்சிய மனிதனை தலைவனை மனத்தில் கொள்ளுங்கள். வாழ்க்கையில் ஒரு நல்ல பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து நடியுங்கள். வாழ்க்கையும், சூழ்நிலையும் மாறுவதை உணர்வீர்கள்.

இறைவன் எமக்கு அருமையான இயந்திரம் ஒன்றைத்தந்திருக்க, இதைப்பேணிப் பாதுகாக்க நமக்குத்தெரியாவிட்டால், அதன் உள்அமைப்புக்களை நாம் அறிந்து செயலாற்றத் தவறிவிட்டால், அது எவ்வளவு கேவலமான விடயமாகும். இயற்கையில் சட்டங்கள் ஒவ்வொன்றையும் நாம் மீறிவிட்டு நீண்ட காலம் உயிர் வாழ நினைக்கின்றோம். ஒரு கடிகாரத்தின், மூடியைத்திறந்து புழுதியிலும், வெய்யிலிலும், காற்றிலும், மழையிலும் போட்டுவிட்டு அது ஒழுங்காக வேலை செய்யும் என்று நாம் எதிர்பார்க்க முடியுமா? எமது தோல்விகளுக்கும் சங்கடங்களுக்கும் காரணம், எமது ஆழ்மனதில் புகவிட்ட எண்ணங்களே என்று மன நூல்கள் கூறுகின்றன. என்னால் முடியாது என்று சிலர் ஆழ் மனத்திடம் சொல்லி நம்ப வைத்தால் அவர்கள் எடுத்த காரியம் எப்படி வெற்றியடைய முடியும்? எனக்கு எப்போதுமே பூஞ்சை உடம்பு என்றும் நான் எதிலும் அதிர்ஷ்டக்கட்டை என்றும் நாம் கஷ்டங்களை அனுபவிக்கப் பிறந்தவன் என்றும், பலவிதமாக நாம் எம்மைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறோம். அது உண்மை என்று நாமே நம்பிக்கொண்டிருக்கும் போது அப்படியே நிகழ்கிறது. ஆகவேதான் மனநூலார் கூறுகின்றனர்: நாம் நம்மைப்பற்றி ஆராய வேண்டும். அவற்றை ஒரு தாளில் எழுதித் தெளிவு படுத்த வேண்டும். எவ்வளவு முட்டாள்த் தனமாக, பைத்தியக் காரத்தனமாக, நாமே எம்மைப்பற்றிச் சிறுமைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது தெளிவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: பொறுமையுடன் செயற்படுவது அவசியம். திட்டமிட்ட பணிகளில் திடீர் மாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

இடபம்: தன்னம்பிக்கையுடன் செயற்படு வீர்கள். தொழில் வளர்ச்சியால், அபரிமித இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை உண்டாகும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் உருவாகும்.

மிதுனம்: நல்லோரின் ஆலோசனை கிடைக் கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

கடகம்: சாதுரியமாகப் பேசி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சி கொள்வீர்கள். பணியாளர்கள் எதிர் பார்த்த சலுகை கிடைக்கும்.

சிங்கம்: திட்டமிட்ட பணிகளை நிறைவேற்று வீர்கள். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் திருப்தி யளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

கன்னி: குடும்பத்தினர் தேவையறிந்து நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் மூலம் ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு ஆடம்பர எண்ணம் மேலோங் கும்.

துலாம்: சொல்லிலும், செயலிலும் நேர்மை உண்டாகும். எதிரியும், அடிபணியும் நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமா னம் பன்மடங்கு உயரும். மாணவர்கள் திட்ட மிட்டுப் படிப்பர்.

விருச்சிகம்: சமயோசித பேச்சால் சாதிப்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

தனுசு: அறிமுகம் இல்லாதவரிடம் பேச வேண் டாம். தொழிலில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். திடீர் செலவால் சேமிப்புக் கரையும். உடல் நலனுக்காக சிகிச்சை தேவைப் படலாம்

மகரம்: பெரியவர்களின் வார்த்தையை மதித்து நடப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் இலாபம் கூடும். பிள் ளைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டு வீர்கள். பெண்களால் நன்மை உண்டாகும்.

கும்பம்: பின் விளைவை உணர்ந்து பேசுவது நல்லது. தொழிலில் சுமாரான வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள்.

மீனம்: நண்பர்களைச் சந்தித்து பேசி மகிழ் வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம்உயரும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் அக் கறையுடன் படிப்பர்.

சிங்கம்–3 படத் தலைப்பு மாறியது

ஹரி இயக்கத்தில் சூர்யா நடித்த படம், "சிங்கம்". அனுஷ்கா, பிரகாஷ் ராஜ், விவேக் உட்பட பலர் நடித்திருந்தனர். 2010 இல் வெளியான இந்தப் படம் மெகா ஹிட்டானதை அடுத்து இதன் இரண்டாம் பாகம் எடுக்கப்பட்டது. இதையும் சூர்யா நடிப்பில் ஹரி இயக்கினார். 2013இல் வெளியான இந்தப் படமும் மெகா ஹிட்டானது. இதையடுத்து இந்தப் படத்தின் அடுத்த பாகத்தையும் எடுக்க முடிவு செய்தனர். இதன் படப்பிடிப்பு டிசெம்பர் மாதம் தொடங்குவதாக இருந்தது. சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டது. இதையடுத்து இதன் படப்பிடிப்பு விசாகப்பட்டினத்தில் தொடங் கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு "எஸ் 3" என்று தலைப்பு வைத் துள்ளனர்.

வாடினாலியில் தொலைபேசி வழி நேயர் விருப்பத்தில் ஒரு உரை யாடல்.....

"ஹலோ வணக்கம்!"

"வணக்கம்! சொல்லுங்க..."

"வணக்கம் தான் சொல்லிட்டேனே எத்தனை தடவை சொல்றது?"

"அதில்லைங்க"

"எது இல்லை?"

"சரி நீங்க எங்க இருந்து பேசறீங்க?"

"போன்ல இருந்து தான் பேசறேன்"

"சரி என்ன பாட்டு வேணும்?"

"சினிமா பாட்டு தான்"

"சரி எந்த படத்துல இருந்து?"

"சினிமா படத்துல இருந்து தான்"

"அய்யோ!" என்று தலையில் அடித்துக்கொண்ட அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளர், அன்றோடு அந்த வேலையை ராஜினாமா செய்துவிட் டார்.

நினைத்தோழி

தலையில் விறகு சுமப்பவரின் கனத்தை விட பதவி சுமப்பவரின் தலைக்கனம் அதிகமானது. மூட்டை சுமப்பவரின் முதுகை விட கூன் விழுந்தது பதவிக்கு கும்பிடுவர் முதுகு.

~ மழையின் காதலன் ~

பிறரின் மீதான உன்னுடைய தனிப்பட்ட கருத்துக்களையும் விமர் சனங்களையும் வெளிப்படுத்த மற்றவர்களின் அறியாமையை உபயோகித்துக் கொள்வது ஆகச் சிறந்த கேவலம்.

சுடோக்கு எண் விளையாட்டு

1	3					4	7	
2	6			5				
9					6			
	7	6			5			
			9		8			
	9		6			2	3	
			5					4
				8			2	3
	1	9					5	8

நேற்றைய சுடோக்கின் விடை

2	6	5	8	9	3	7	1	4
4	1	3	7	5	6	9	2	8
8	9	7	1	2	4	5	3	6
1	4	8	6	7	2	3	5	9
3	7	9	4	1	5	6	8	2
6	5	2	9	3	8	4	7	1
7	3	1	2	6	9	8	4	5
5	8	6	3	4	1	2	9	7
9	2	4	5	8	7	1	6	3

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட்டவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் புழக்கத் திற்கு கொண்டு வந்தது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org

மரக்கறி விலை நிலைவரம்

நேற்றைய

	மாத்தளை மொத்த விற்பனை	மாத்தளை சில்லறை	கண்டி மொத்த விற்பனை	கண்டி சில்லறை	தம்புள்ளை மொத்த விற்பனை	தம்புள்ளை சில்லறை	கொழும்பு மொத்த விற்பனை	கொழும்பு சில்லறை
முள்ளங்கி	80	120	60	120	60	80	40	80
கத்தரி	120	140	140–180	120	100–120	120	100	70
கரட்	200	120	160–300	180	200–280	180	150	200
மரவள்ளி	40	50	40	40	40	40	30	30
பயிற்றை	150	140	200	200	160–200	200	120	200
பாகல்	150	200	120–200	140	130–140	120	140	300
கருணைக்கிழங்கு	60	80	80	50	70–80	80	60	80
பெ.வெங்காயம்	90	80	100	80	80–90	100	75	80
சி.வெங்காயம்	120	120	120	120	90–120	120	100	90
பூசணி	50	50	40	50	40	50	40	40
தக்காளி	80	100	70	80	50–60	50	50	50
வாழைக்காய்	70	60	60	60	50–60	60	50	40
கீரை	30	40	40	20	30	30	35	60
பொன்னாங்காணி	40	40	30	40	20–30	30	10	12
பச்சை மிளகாய்	300	400	300	260	180–260	300	230	350
புடோல்	80	90	80	100	70–80	80	50	200
கோவா	120	140	130	180	100–120	120	80	80
வெண்டி	160	120	200	100	120–140	120	70	120
போஞ்சி	250	200	240	280	200–220	220	–	200
லீக்ஸ்	150	140	200	240	110–120	120	80	120
தேங்காய்	50	48	50	50–60	40–50	50	30–40	30
உருளைக்கிழங்கு	80	80	70	70	70–90	90	55	120
தேசிக்காய்	100	140	120	100	80–120	120	50	40
வல்லாரை	20	20	10	20	20	20	20	12
கறிமிளகாய்	300	300	300	320	220–240	300	–	350
இராசவள்ளி	150	140	160	140	120–180	110	110	100

செய்முறை:

புழுங்கலரிசியை நன்கு கழுவி ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் வடித்து அத்துடன் பச்சைமிளகாய், தேங்காய்த் துருவல், பெருங்காயம், தயிர், உப்பு சேர்த்து மென்மையாக அரைக்கவும். அதில் கடலை மா, பொட்டுக்கடலை மா, வெண்ணெய் சேர்த்து, ஊற வைத்து வடித்த வேர்க்கடலை, கடலைப்பருப்பு சேர்த்து கெட்டியாகப் பிசைந்து அந்த மாவை சிறு சிறு உருண்டைகள் செய்து தட்டைகளாகத் தட்டிக் கொள்ளுங்கள். மிதமான தீயில் எண்ணெயைக் காய வைத்து தட்டைகளாக பொரித்தெடுங்கள்.

தேவையானவை:

புழுங்கலரிசி – 2 கப்
பொட்டுக்கடலை மா அரைக்கப்
உப்பு தேவைக்கு
பச்சைமிளகாய் – 8 விருப்பப் பட்டால் பெருங்காயத்தூள்
புளித்த தயிர் – கால் கப்
வெண்ணெய் – 2 மேசைக்கரண்டி
தேங்காய்த் துருவல் – அரைக்கப்
ஊறிய வேர்க்கடலை கடலைப்பருப்பு – தலா 1 மேசைக்கரண்டி
கடலை மா – 2 மேசைக்கரண்டி

வெள்ளிப் பொருள்களை சுத்தம் செய்வது எப்படி?

வெள்ளிப் பொருள்களை பொலிஷ் செய்தால் தரம் குறைந்து விடுமா? வெள்ளிப் பொருள்கள் ஏன் கறுத்துப் போகின்றன? அவற்றை சுத்தம் செய்வது எப்படி?

பொருள்களை பொலிஷ் செய்வதற்கும் தரம் குறைந்து போவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. கறுத்து, அழுக்காகத் தோன்றும் நகைகளை அவ்வப்போது சுத்தம் செய்வதால் எந்தப் பாதிப்பும் வராது. ஆனால், பல மாதங்களாக சுத்தம் செய்யாமல், அதிக அழுக்கு தேங்கி இருந்தால், அவற்றைக் கடினமான முறைகளை கொண்டு சுத்தம் செய்ய வேண்டியிருக்கும்.

அதனால் சில மில்லிகிராம் அளவுக்குத் தேய்மானம் ஏற்படும். அளவு குறையும். காற்றில் உள்ள ஒக்சைட்டு காரணமாகவே வெள்ளிப் பொருள்கள் கறுத்துப் போகின்றன.

உடல் வெப்பம் காரணமாகவும் வெள்ளி நகைகள் கறுக்கும். அதற்காக வெள்ளிப் பொருள்களைப் பயன்படுத்தாமலே பூட்டி வைத்தாலும் கறுத்துத் தான் போகும்.

நாளை
மார்கழி -28
புதன்கிழமை 13.01.2016
திதி: சதுர்த்தி பி.ஈ.02.43
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப.09.09
ராகுகாலம்: 12.33-02.03 வரை
சுபநேரம்: 05.03- 06.33 வரை
சதுர்த்தி விரதம்

இவற்றை வீட்டிலேயே எளிமையான முறையில் பொலிஷ் செய்யலாம். ஷம்புவுடன் கொஞ்சம் தண்ணீர் கலந்து, அந்தக் கலவையில் வெள்ளிப் பொருள்களை நனைத்து பிரஷால் சுத்தம் செய்தாலே பளிச் ஆகிவிடும்.

	மாரிப்பாணம்	மட்டக்களப்பு	திருகோணமலை	கொழும்பு	பருத்தித்துறை	சாவகச்சேரி	மாதகல்
இறால்	600	600	800	650	600	800	600
நண்டு	250	400	400	400	400	400	–
கணவாய்	600	600	600	400	600	600	–
பாரை	450	500	600	500	500	500	430
சுறா	300	500	600	800	650	–	500
சீலா	250	400	500	500	400	400	400
விளை	500	450	300	600	500	500	400
முரல்	250	300	400	400	400	400	–
கும்பிளா	300	300	400	500	400	400	350
கிழாக்கன்	400	800	–	–	400	–	–
ஓரா	300	350	300	–	350	400	350
திரளி	200	250	200	200	300	150	30
நகரை	150	250	–	–	300	150	350
சூடை	130	150	100	200	200	150	–
ஒட்டி	200	200	250	200	300	300	300
திருக்கை	150	350	250	400	300	200	150
மதனம்	250	200	220	300	280	250	300
கொய்	100	100	60	60	120	50	–
பாலை	100	250	300	300	400	300	300
வாழை	150	150	–	400	300	300	300

இது புதுசு

கவரிங் ஆபரண வகைகளில் பழமை வாய்ந்த டிசைன்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் இந்த வகை ஆபரணங்கள் புதிய வரவாகும். நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த வகை ஆபரணம் 2000 முதல் 8000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

கவரிங் ஆபரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின்

நடத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் செயலகத்தில் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக, யாழ்.நகரிலுள்ள தனியார் விடுதியில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தனித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். அதன் பின்னரே முதலமைச்சர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கெடுத்துள்ளனர்.

கடந்த கூட்டத்தின் அறிக்கை முதலமைச்சரினால் நேற்றைய கூட்டத்தில் முதலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் திருத்தங்கள் சில உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. மேலும், அமைச்சரவையின் செயற்திறனின்மை அதனால் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதி திரும்பிச் சென்றமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டன.

மேலும் முன்னைய பிரதம செயலாளர் வேறு திட்டங்களுக்கு ஒதுக்கிய நிதியை, உறுப்பினர்களுக்கு அதிகரித்து வழங்க ஏற்பாடு செய்திருந்தார். இப்போது அவ்வாறு செய்ய முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு அதிகரித்த நிதி வழங்கப்படவேண்டும். உறுப்பினர்களுக்குரிய கௌரவம் வழங்கப்படவேண்டும் என்பதை உறுப்பினர்கள் இந்தக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாகாண சபை உறுப்பினர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்கலாம் என்றும், அதில் எந்தத் தவறும் இல்லை எனவும் நேற்றைய கலந்துரையாடலில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர், ஒவ்வொரு உறுப்பினர்களையும் அவர்களுடைய பிரதேசம் சார்ந்து நியமிக்கவுள்ளேன். இது தொடர்பில் மத்திய அரசின் அதிகாரிகள் - மாகாண அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்துவேன். இதனூடாக உங்களுடைய பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளை நீங்களே முன்னெடுக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில், முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பில் வெளியாகிய செய்திகள் தொடர்பிலும் பேசப்பட்டது. முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பிலான சிந்தனையே எம்மிடம் இல்லை. நாங்கள் உங்களுக்கு மீண்டும் ஒருமுறை ஆதரவு தெரிவிக்கவே இங்கு ஒன்றாகக் கூடியுள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் என்ற பெயரைப் பயன்படுத்திக் கொண்டு வேறு தளங்களில் இயங்குவது சரியாகத் தென்படவில்லை. நீங்கள் எங்களின் முதலமைச்சராக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராகப் பணியாற்ற வேண்டும். உங்களை யாரோ சிலர் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். இதிலிருந்து விடுபட்டு நீங்கள் மீண்டும் எங்களின் முதலமைச்சராக எங்களோடு இணைந்து பணியாற்றவேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எங்களின் முதலமைச்சராக இருந்து கொண்டு, எங்கள் ஒருவருக்கும் தெரியாமல், முதலமைச்சர் என்ற பெயரைப் பயன்படுத்தி வேறு அமைப்புகளின் கூட்டங்களுக்குச் சென்றமை மனவேதனையாக இருக்கின்றது என்றும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் இதன் போது தங்களின் ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, உறுப்பினர்களின் குற்றச்சாட்டுக்கள் - கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு நேரம் போதாமையினால், முதலமைச்சர் எதிர்வரும் 17 ஆம் திகதி மீளவும் கூட்டத்தைக் கூட்டி பதில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் அன்றைய தினம் அமைச்சர்களையும் அழைத்து வருவதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

படைகளுக்கு

ஜெனீபனுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை தொடர்பில் தனது கருத்தை தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று ஏற்பட்டுள்ள மாற்றம் எதிர்க்கட்சி ஒன்று நாட்டில் செயற்படக் கூடாது என்ற ஒரே நோக்கத்தை அடிப்படையில் வைத்தே அமைந்துள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே ஆளும் கட்சிக்காக மாறியுள்ள நிலையில் எதிர்க்கட்சி ஒன்று கட்டாயமாகத் தேவைப்படுகின்றது. ஆனால் அவ்வாறான ஒரு நிலைமை இல்லாது அரசின் அனைத்துக் குற்றங்களுக்கும் துணைபோகும் வகையில் எதிர்க்கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

அதேபோல் நாட்டை வழி நடத்த வேண்டுமாயின் ஒரு தலைமையின் கீழேயே அது சாத்தியமாகும். இரண்டு தலைவர்கள் ஒன்றிணைந்து நாட்டை வழிநடத்த முடியாது.

விடுதலைப் புலிகளை விடுதலை செய்வதும் எமது இராணுவத்தை தண்டிக்கவேண்டும் என்பதுமே இன்றைய அரசின் நிலைப்பாடாக உள்ளது. அரசின் தேவையும் அதுவாகவே உள்ளது. ஆகவே சர்வதேச நாடுகளையும் புலம்பெயர் அமைப்புகளையும் திருப்திப்படுத்த வேண்டுமாயின் அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை அரசிற்கு உள்ளது.

ஆகவே இந்த விடயத்தில் ஆச்சரியமடையத் தேவையில்லை. அதேபோல் இப்போது ஜனாதிபதி புலிகளுக்கு பொதுமன்னிப்பு கொடுத்து வருவதும் இந்த நல்லாட்சியின் ஒரு எடுத்துக் காட்டு-என்றார் மகிந்த. (த-5)

மாணவி

தீவு மாணவி வழக்கில் பரிசோதனை அறிக்கைகள் எதுவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் அந்த வழக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம். றியால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அதன்போது சந்தேக நபர்கள் 10 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் குமார் ரட்ணம் நேற்று முன்னிலையாகியிருந்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியும் முன்னிலையாகியிருந்தார்.

அதன்போது குற்றப் புலனாய்வுப்பிரிவினரால் வழக்குத் தொடர்பான மேலதிக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குடன் தொடர்புடையவர்கள் என்று குற்றஞ்சாட்டி சந்தேக நபர்களாக பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் ஆகியோர் முதலில் கைது செய்யப்பட்டிருந்தனர். பின்னர் சந்தேக நபர்களாக மகாலிங்கம் சசீந்திரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துாந்தன், பரநிருபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகுலன், மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர். இறுதியாக பியவர்த்தன ராஜ்குமார் கைது செய்யப்பட்டிருந்தார். அவர்களில் 3 சந்தேக நபர்கள் விசாரணைக்காக மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

வழக்குடன் தொடர்புடையதான ஆய்வு அறிக்கைகள், பரிசோதனை அறிக்கைகள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனைச் சமர்ப்பிக்குமாறு நேற்றைய தினமும் நீதிமன்று அவற்றை ஆய்வு செய்யும் நிறுவனத்துக்கு அறிவித்துள்ளது. வழக்குத் தொடுநர் சார்பில் சட்டத்தரணிகளான கே.சுகாஷ், வி.மணிவண்ணன், ஏ.றஞ்சித்குமார் ஆகியோரும் எதிரிகளில் 10 ஆவது எதிரி சார்பாகச் சட்டத்தரணி ஜொய்ம கிழ் மகாதேவாவும் நேற்று முன்னிலையாகியிருந்தனர். (த-4)

தமிழீழக்

வைக்கப்படுகிறது என ஆராயப்பட்டு அவ்வாறானதொரு கோரிக்கை எழா திருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என அரசுக்கு தமது குழு சிபாரிசு செய்யும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு தொடர்பாக மக்களின் கருத்துகளை அறிவதற்காக 24 பேரடங்கிய குழுவொன்றை அரசு அண்மையில் நியமித்தது. இதில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளனர். இது வரையில் 20 பேர் மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குழு கொழும்பிலுள்ள விசும்பாயவில் நேற்றுப் பிற்பகல் கூடி தமக்குரிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து நிகழ்ச்சிநிரலை தயாரித்தது. அதன், பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கேள்வி நேரத்தின் போது, அரசமைப்பு மாற்றம் தொடர்பில் மக்களிடம் கருத்தறிவதே குழுவின் பிரதான நோக்கம். சுயாதீனமான முறையில் கருத்துகளை முன்வைப்பதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. அந்தவகையில் யாழ்ப்பாணம் செல்லும் போது, தமக்கு தனித்துச்செல்ல வேண்டும் என்றும், தனிஈழம் தான் வேண்டும் என்றும் அங்கு வாழும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டால், எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க:-

வடக்கு மக்களும் சுயாதீனமான முறையில் கருத்துக்களை முன்வைக்கலாம். அச்சுறுத்தலோ அழுத்தமோ பிரயோகிக்கப்படாது. எவரேனும் மேற்படி கருத்தை முன்வைத்தால் (தனிஈழம்), ஏன் அவ்வாறானதொரு கருத்து எழுகிறது என ஆராயவேண்டும். ஏன் இந்தக் கோரிக்கை என கேட்கப்பட்டு, என்ன செய்தால் இந்தக் கோரிக்கை எழாதிருக்கும் என்பது பற்றி கருத்தறியப்படும்.

[illegible] எழாதிருக்க [illegible] வேண்டும் என அரசுக்கு சிபாரிசு செய்யப்படும். எனினும், கற்பனை அடிப்படையிலேயே இந்தக் கேள்வி எழுகின்றது. கருத்து கோரும் அதிகாரம் மாத்திரமே எமக்கு இருக்கிறது எனக் கூறினார்.

இதேவேளை, குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் விவரித்த அவர்:-

புதிய அரசமைப்பு வரைவு தொடர்பில் மக்களின் கருத்துகளை அறிந்து சிபாரிசுகள் சகிதம் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதே எமது கடப்பாடாகும். இந்தப் பணிகளை மூன்று மாதங்களுக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கிறோம். அதன் பின்னர் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அந்தவகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் மக்கள் கருத்தறியும் பணி ஆரம்பமாகும். முதல்கட்டமாக கொழும்பில் நடைபெறும். அதன் பின்னர் நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொள்ளப்படும்.

குழுவில் 20 பேர் இருக்கின்றனர். நான்கு பேர் சகிதம் ஐந்து குழுக்களாகப் பிரிந்து சென்று மக்களின் கருத்துகளை அறிவோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்த பட்சம் இரண்டு நாட்கள் தங்கியிருப்போம். மின்னஞ்சல், தொலைபேசி, தொலைநகல் , கடிதம் ஊடாகவும் எமக்குக் கருத்து தெரிவிக்க முடியும். கொழும்பு அலுவலகத்துக்கு வந்து சொல்லவும் முடியும். சுதந்திரமாகக் கருத்து தெரிவிக்கலாம். எந்தவித அழுத்தமும் பிரயோகிக்கப்படாது.

20 தலைப்புகளின் கீழ் கருத்துகள் கோரப்பட்டுள்ளன. அவை தொடர்பான தகவல்கள் அடுத்து வரும் நாள்களில் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்படும். ஏனைய விடயங்கள் என்ற பகுதி இருக்கிறது. அத்துடன், வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் மின்னஞ்சல் ஊடாக கருத்துத் தெரிவிக்க முடியும்.

சாதாரண மக்களினது கருத்தும் எமக்கு மிக முக்கியம். அரசமைப்பு பற்றி மக்கள் அறிந்திருக்க வேண்டும். அரசமைப்பு மாற்றத்துக்கு முன்னர் மக்களிடம் கருத்து கோரப்படுவது இதுவே முதற்தடவையாகும்.- என்றார். (வ-சி-5)

பெப்ரவரி

வெளியிட்டுள்ளது கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு .

இலங்கைக்கான தனது பணியை முடித்து நியூயோர்க் திரும்பவுள்ள ஐ.நா வதிவிடப்பிரதிநிதி சுபைனே நண்டிக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போதே ஐ.நா வதிவிடப்பிரதிநிதி சுபைனே நண்டி, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைப் பயணம் தொடர்பில் தம்மிடம் உறுதி செய்ததாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், உள்நாட்டில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்துவார் எனவும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (த-வ)

தமிழர்களுக்கான

வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

விக்டோரியா மாநில நாடாளுமன்றின் சபாநாயகர் டெல்மோலங்குலர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல விடயங்கள் பேசப்பட்டன. (த)

வடக்கு - கிழக்கு

இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்தமையின் விளைவாக 2016 ஆம் ஆண்டின்போது இலங்கை அரசியல் ரீதியாக ஸ்திரமடைந்து காணப்படும் என்றும் சர்வதேச பொருளாதாரம் சீர்குலையும் சந்தர்ப் பத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் சிறப்பான மட்டத்தைக் காண்பிக்கும் என்றும் சர்வதேச பிரதிநிதிகள் நம்பிக்கை வெளியிட்ட வண்ணமுள்ளனர். முப்பது வருடகாலப் போரின் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளன. இதன் காரணமாக அந்தப் பகுதி இளைஞர்கள் யுவதிகள் தொழிலின்றி வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர்.

போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்குரிய காணிகளை விடுவித்து மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே இதனை அடிப்படையாகக் கொண்டு ஜப்பானின் உதவியுடன் விசேட பொருளா தார அபிவிருத்தி மாநாட்டை வடக்கு-கிழக்கில் நடத்தவுள்ளோம். இதனூடாக வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்காக விசேட நிதியமொன்று உருவாக்கப்படும் - என்றார். (த-5)

மாணவன்

காலி லபுதுவ பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவனாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலைத் தொடர்ந்து படுகாயமடைந்த ஆசிரியர், கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையின் ஒழுக்காற்று ஆசிரியரான குறித்த ஆசிரியர், தாக்கிய மாணவனிடம் முடிவெட்டும்படி தெரிவித்துவிட்டு, வேறு பணிகளைச் செய்து கொண்டிருந்தவேளையே மாணவன் அவரைத் தாக்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பிலான விசாரணைகளை அக்மீமன பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (த-5)

கஞ்சா

மாதக்கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பாண்டிருப்பு கல்முனையைச் சேர்ந்த குறித்த இளைஞர் கடந்த வருடம் யாழ். பொலிஸாரால் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 53 மில்லிகிராம் கஞ்சாவை கைப்பற்றியதாகத் தெரிவித்த பொலிஸார், கஞ்சாவை சான்றுப்பொருளாக நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

நீதிமன்றக் கட்டளையின்படி தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் அரச இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். நேற்று இவருக்கு எதிரான குற்றப் பத்திரம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு அவர் குற்றவாளி எனத் தெரிவித்ததை அடுத்து நீதிவான் சி.சதீஸ்கரனினால் தீர்வு வழங்கப்பட்டது. (த-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கே.கே.இரத்தினசிங்கம்.....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதுவே பின்நாளில் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உயர்வுக்குப் பெரிதும் வழிகோலிற்று என்பது வெளிப்படை.

தமிழ் மிதவாதத் தலைவர்களின் ஏமாற்றுப் போக்கை நேரத்துடனேயே தமிழ் மக்களுக்கு முரசறைந்து, அபாயச் சங்கு எழுப்பிய பத்திரிகையாளர் கே.கே.ஆர்.

அதேவேளை இன உணர்ச்சியால் எழுச்சி பெற்ற இளைஞர்களின் தியாகத்தைப் போற்ற அவர் பின்நின்றவருமல்லர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான உணர்வெழுச்சி தென்னிலங்கையில் தாண்டவமாடிய சமயத்தில் - சந்திரிகா அரசின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான இனவாத ஆவேசம் தென்னிலங்கையில் பிரவாகம் எழுந்திருந்த சமயத்தில் - 'சுடர்ஒளி' வாரப் பத்திரிகையில் தலைவர் பிரபாகரனின் நான்கு வர்ணப் படத்தை அட்டையில் முழு அளவில் 'ப்ளோ - அப்' செய்து துணிச்சலுடன் முதன்முதலில் பிரசுரித்த ஆசிரியர் அவர்தான். பின் நாள்களில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதும் பிற பத்திரிகைகளும் அதனைச் செய்தன என்பது ஆறிப்போன விடயம்.

லக்ஷ்மன் கதிர்காமருக்கு சாட்டையடி

பத்திரிகை ஆசிரியர்கள் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முகத்துக்கு நேரே தம் மக்களுக்காக கடூர வார்த்தைகளில்உறுதியாகக் கருத்துக் கூறும் துணிவு அவருக்கு மட்டுமே இருந்தது.

ஒருதடவை ஜனாதிபதி சந்திரிகாவையும் வைத்துக் கொண்டு கே.கே.ஆரை கிண்டலடிக்க முயன்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஏனைய பத்திரிகையாளர்கள் முன்னிலையில்கே.கே.ஆரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டமை எனக்கு இன்னும் நினைவில் நிற்கிறது.

மிஸ்டர் இரட்ணசிங்கம் (உங்கள்) புலிகள், இராணுவப் புலனாய்வாளர்களை இந்தச் சமாதான காலத்திலும் கொலை செய்கிறார்களே... அது சரியா? - என்றார் கதிர்காமர்.

இல்லை. புலிகள் தாங்கள் அந்தக் கொலைகளைச் செய்யவில்லை என்று அறிவித்து விட்டார்களே...? என்றார் கே.கே.ஆர். இல்லை... இல்லை... புலிகள் தான் அதைச் செய்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதை எப்படி மூடி மறைக்க முடியும்..? என்றார் கிண்டலாக கதிர்காமர்.

அவ்வளவுதான். சடாரெனப் பதில் தந்தார் கே.கே.ஆர். நான் உட்பட அங்கிருந்த அனைத்துப் பத்திரிகையாளர்களும் விக்கித்து விறைத்துப் போனோம்.

நீங்கள் நவாலித் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 170 அப்பாவித் தமிழர்களை விமானக் குண்டு வீசிக் கொன்று விட்டு அப்படி ஒன்றுமே நடக்கவில்லை என முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும்போது, அரச புலனாய்வாளர்களைத் தாங்கள் சுட்டுக்கொல்லவில்லை என்று புலிகள் கூறுவதையும் நாங்கள் நம்ப வேண்டித்தான் இருக்கிறது என்றாரே பார்க்கலாம்.

அன்றைய யுத்தச் சூழலில் - அரச அச்சுறுத்தல் நெருக்குவாரத்துக்கு மத்தியில் - அப்படித் துணிச்சலுடன் பதில் கூறும் திராணி அவருக்கு மட்டுமே இருந்தது.

அவரின் கீழ் பத்திரிகைத்துறை குறித்து சிறிதளவேனும் கற்பதற்கு எங்களுக்குக் கிடைத்த பேறு பெரும் பாக்கியமே.

அவரின் ஆத்மா அவர் வணங்கும் செல்வச் சந்நிதிக் கந்தன் மற்றும் கதிர்காமக் கந்தனின் திருவடிகளில் சாந்தியடைவதாக.

90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

கடந்த 16.10.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் குமாரசாமி நிறோஜன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (13.01.2016) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தளர்ப்பட்ட அன்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி கரவெட்டி மேற்கு,கரவெட்டி (67503)(11.16) குடும்பத்தினர்.

ஈரவிழிகளுடன் பத்தாம் ஆண்டு நினைவில்

மண்ணுலகில் 23 . 02 . 1951

விண்ணுலகில் 02 . 01 . 2006

(திதி - வளர்பிறை திருதியை - 12.01.2016)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும், 145/3, பிரப்பங்குளம் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை

நெஞ்சோடு கூடு கட்டி நேற்று வரை நீங்கள் இருந்தீர்கள்
சொந்தமெல்லாம் மறந்து நீங்கள் வானம்பாடி எங்கு சென்றீர்கள்?
காலனும் தன் வலைக்கை கணப்பொழுதில் முடித்துவிட
ஈரைந்து ஆண்டுகள் அவனியிலே வரைந்துவிட்டதம்மா !
கண்டது கனவென்று கண் நிறைந்து பார்க்கின்றோம்
கண்முன்னே நின்னுருவம் கண்ணீரில் கரைகின்றது
காரிருள் சூழ்ந்த பாரினில் எமையெல்லாம் தவிக்கவிட்டு
வானுலகம் சென்றுவிட்ட அம்மாவே !
நீங்கள் இல்லாத வீடு நிலவில்லா வானமாயது
நீங்கள் இல்லாது சொந்தங்கள் சிறறிப் போயின
உமை நேசித்த பந்தங்கள் உதிர்ந்து போனது
எமக்கு பலமாக நிழல் தந்த எம் அப்பாவையும் - உம் உலகம் அழைத்து விட்டீர்
அரவணைக்க நீவீர் இருவருமின்றி உம் விழுதுகள்
நாம் தவியாய் தவிக்கின்றோம்
கலங்கிய விழிகளுடன் இதயமது வெறுமை நிற்ப
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும் உங்கள்
ஆத்ம சாந்திக்காய்

உங்கள் பிரிவால் துயருறும்

இல.110 சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் அமுத்ராணி சிதம்பரநாதன்

திதி : திருதியை (12.01.2016)

நீங்கா நினைவலைகள்
நெஞ்சமதில் நீழலாட
போங்காலம் வந்ததென்று
பொன்னுலகம் போனதனால்
ஒங்காரப் பெருவாழ்வில்
ஒளியான அம்மா
சாங்காலம் வரும் வரையும்
நாம் வணங்கும் தெய்வமானார்.

என்றும் உங்கள் நினைவுடன்

குடும்பத்தினர்.

"அமுத பவனம்"
அச்செழு மத்தி,
அச்செழு.

தோற்றம் 06.04.1949

மறைவு 24 .12.2014

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 15 . 06 . 1947

மறைவு 13 . 12 . 2015

அமரர் இந்திராணி திருநீலகண்டன்

கடந்த 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. மற்றும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.01.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.14, விதானையார் வீதி,
2ஆம் ஒழுங்கை, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (67576)(11.16.18) குடும்பத்தினர்.

ஏக்கம் தந்து நிற்கும் ஏழாவது ஆண்டு

திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி

(திதி - மார்கழி வளர்பிறை திருதியை)

அன்பும் பண்பும் இனிய பேச்சும் கொண்ட
ஆதரவு காட்டி அரவணைத்த உங்களைப் பிரிந்து
ஏக்கம் தந்து நிற்கும் ஏழாவது ஆண்டும் ஆயிற்றோ ?
கற்புலத்து மனோன்மணியின் கழலிணையில் சேர்ந்து
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(67551) (14.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணஅறிவித்தல்கள்

அன்னை
மடி யில்:
12.10.1932

ஆண்டவன்
மடியில்:
11.01.2016

திருமதி மகேஸ்வரி கனகரத்தினம்

உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி கனகரத்தினம் 11.01.2016 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவரான கனரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான கந்தையா, சுப்பிரமணியம், நடராசா கணேசு மற்றும் திருநாவுக்கரசு, பரமேஸ்வரி (பிரான்ஸ்),சிவபாதம் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினமலர் (மலர்), மகேந்திரன் (கனடா), மகாதேவன்(லண்டன்), மல்லிகாதேவி (லண்டன்) ஆகியோரின்அன்புத் தாயாரும் இலகுநாதன், நளின லோசனா(கனடா), கலைவாணி (லண்டன்), முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலானி- மதன், நிருஷா- ஜெகன்(லண்டன்),பிறைனா, திவ்யன்- விதாங்கி (கனடா), கீர்த்தனா, பிரணவன், வினுசன், மிதிலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சங்கீத், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2016) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.'

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்பு
உடுவில் வீதி, இரத்தினமலர் இலகு நாதன் (மலர்)
மானிப்பாய். 021 225 5089

டொன்பொஸ்கோ பசில் சுரேந்திரன்

(ஆள்பதிவு திணைக்களம் கச்சேரி-வவுனியா)
"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே"
யோவான் 11:25



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 15/A, 4ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட டொன்பொஸ்கோ பசில் சுரேந்திரன் (சுரேஸ்) 10.01.2016 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் அ.டொன்பொஸ்கோ, ஏஞ்சல் மேரி (புனிதம்) தம்பதியரின் சிரேஸ்ர புத்திரனும், இவாஞ்சலின் தயாழினியின் (ஆசிரியை - யாழ்.சென். பெனடிக்ற் வித்தியாலயம்- நல்லூர்) அன்புக் கணவரும், அன்றியா வர்ஷனாவின் பாசமிகு தந்தையும், பமிலா உலோஜினி (சித்த மருத்துவர், சுவிற்சர்லாந்து), ஹில்ரன் நரேந்திரன் (மருத்துவர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனரத்தினம் (ஓய்வுபெற்ற சாலை முகாமையாளர் - இ.போ.ச.- காரைநகர்)- நித்தியானந்தராணி தம்பதியரின் அன்பு மருமகனும், அருள்நேசன் (சுவிற்சர்லாந்து), கரீனா (கணக்காளர்), திரு.திருமதி தனரஞ்சன் (இ.போ.ச.வடக்கு பிராந்தியக் காரியாலயம்), காலஞ்சென்ற தனரோஷன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15/A, 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (13.01.2016) புதன்கிழமை காலை 7 மணிக்கு அவரின் சில்லாலை இல்லத்துக்கு இறுதி அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுப் பின்னர் சில்லாலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(67583)
(11,17,18)
இல.15/A, தகவல்:
4ஆம் குறுக்குத்தெரு, குடும்பத்தினர்.
யாழ்ப்பாணம்.

தொ.பே:- 021 222 3289

கண்ணீர் அஞ்சலி

எமது வலயக்கல்வி அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் சா. சுரேஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் சின்னத்தம்பி சாமிநாதன்

அவர்கள் 10.01.2016

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
வலயக்கல்வி அலுவலகம் -கிளிநொச்சி.

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
தயாளினி சுரேந்திரன்
அவர்களின் அன்புக் கணவர்



டொன் பொஸ்கோ பசில் சுரேந்திரன்

அவர்கள்
அகாலமரணமடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பா.அ.ச உறுப்பினர்கள்
ப.மா.ச உறுப்பினர்கள், பெற்றோர்கள்.
மா/நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.த.க வித்தியாலயம்

மரண அறிவித்தல்

திருமதி
மகேஸ்வரி சங்கரப்பிள்ளை

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் இல.60, 4ஆம் ஒழுங்கை குருமன்காடு, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சங்கரப்பிள்ளை (லிப்டன்) நேற்று (11.01.2016) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் செல்லாட்சியின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சிதம்பரம் ஆகியோரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற லிப்டன் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் நிர்மலாதேவி (வவுனியா), ரவீந்திரன் (ஜேர்மனி), சொர்ணதேவி (கம்பளை), மோகேந்திரன் (கனடா) காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாலிங்கம் (லிங்கம் ஸ்ரோர்ஸ் நெடுங்கேணி), இரத்தினேஸ்வரி (ஜேர்மனி), அருணகிரிநாதர் (A.S குமாரசாமி & Co - கம்பளை), தயாளினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மார்க்கண்டு பொன்னம்பலத்தின் அன்புச் சகோதரியும் கஜேந்திரன், சுரேந்திரன், சுபாஷினி, நிசாந்தன், காயத்திரி, நிவேதன், நிவானி, நிதுஷா, திருக்குமரன், லோகேந்திரன், லக்ஷிகா, பவிஷா, நிந்துஜா ஆகியோரின் அருமை பேர்த்தியும் தனலட்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பரமேஸ்வரி, ஆறுமுகம், இந்திராணி, கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.01.2016) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (66676)

T.P: 024 490 3711 தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

நவாலியூர் சிவஸ்ரீ இளையதம்பி சபாரத்தினசிவம்

(அருள்ஞானபணுவல், பஜனைமணி, முன்னாள் பிரதம குரு-நவாலிவடக்கு பெத்தனாச்சி அம்மன் (நாச்சிமார்) ஆலயம் இசைஞான திலகம்)

பிறப்பு: 13.08.1949 இறப்பு: 11.01.2016

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், புலவர் வீதி, நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவாலியூர் சிவஸ்ரீ இளையதம்பி சபாரத்தினசிவம் நேற்று (11.01.2016) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி பொற்கொடி தம்பதியரின் அன்பு மகனும், கணேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுந்தரம் ஆகியோரின் இளைய மருமகனும், செல்லக்கிளி, செல்லப்பாக்கியம், சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வரப்பிரசிங்கம், பற்குணராஜா, புவனேஸ்வரி, திருஞானம் மற்றும் சிவநேசன், மனோகரன், பரமநாதன், மருதலிங்கம், பாலசிங்கம், தியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நவாலி ஆரியப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
0771930230 ச. கணேஸ்வரி (மனைவி)

திருமதி ஜெறோமினா சுகிர்தம் (பாவப்பிள்ளை) பர்ணான்டோ

குருநகர், யாழ்ப்பாணம், இல.35 ஓடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெறோமினா சுகிர்தம் (பாவப்பிள்ளை) பர்ணான்டோ 09.01.2016 சனிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை (தீயோப் பிள்ளை) பெர்ணபேற் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மனவல் விக்ரோறியா தம்பதியரின் மருமகளும், பர்ணான்டோவின் அன்பு மனைவியும், ஜெறால்ட் (நோர்வே), மொறின் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற லூர்த் கிறகரி (பாக்கிய முத்து மூப்பர்), யூலியஸ்மகேசன், டக்கிளஸ் லயனல், பேர்சி கொண்சி (ஜேர்மனி), பாலேந்திரா பிறிற்றோ (நோர்வே), வலன்ரைன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(67574)(11,16,18) தகவல்:-சகோதரர்கள்

யூலியஸ் மகேசன் 077 431 9979, டக்ளஸ் லயனல் 076 602 8910

சோமசுந்தரம் தேவராஜன்

(இலங்கை மின்சாரசபை பணியாளர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் தேவராஜன் 09.01.2016 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இரத்தினம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், யோகரூபன் (சம்பத் வங்கி-வவுனியா), சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பால சுப்பிரமணியம், சுபத்திரா, விஜயரட்ணம், ஜெகராசா, புஸ்பராசா ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும், விக்னேஸ்வரன், பத்மினி, ரஜனி, திவாகரன், ஜெயலட்சுமி, தனபாலசிங்கம் (இளைப்பாறிய பிரதம நூலகர்), வசந்தாதேவி, நகுலேஸ்வரி, குலகேதீஸ்வரி (செல்வி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமார், தங்கராசா, சூட்டி (காமினி), சர்மினி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (67574)
(11,16,18)

இல.40,
கச்சேரி கிழக்கு, ஒழுங்கை. தகவல்: குடும்பத்தினர்.

போர் இல்லை

கொள்வனவு செய்யவுள்ள தாகத் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானிடம், எட்டு ஜே.எவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் உடன்பாடு கையெழுத்திடப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் அனைத்தும் பொய். இது தொடர்பாக நாம் பாகிஸ்தானுடன் எந்த உடன்பாடும் செய்து கொள்ளவில்லை.

எந்த நாட்டிடம் இருந்தாவது நாம் போர் விமானங்களை வாங்க வேண்டியுள்ளது. ஆனால் நாம் இன்னமும், பாகிஸ்தானிடம் இருந்தா, இந்தியாவிடம் இருந்தா அல்லது வேறு நாட்டிடம் இருந்தா அவற்றை வாங்குவது என்று முடிவு செய்யவில்லை.

போர் இல்லாத நிலையில் எல்லா இராணுவ கட்டமைப்புகளையும் கலைத்துவிடவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

போர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பாதுகாப்பைப் பேணுவதே, அரசின் உயர் முன்னுரிமையான விடயமாகும். எனவே, எமக்குப் போர் விமானங்கள் மட்டுமன்றி, ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களும் தேவைப்படுகிறது. போர் முடிந்துவிட்டாலும், விமானப் படையை தரமுயர்த்துவதற்காக, போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை அரசுக்கு இருக்கிறது- என்றார். (த-5)

ஒருங்கிணைப்புக்

்புள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை இடம் பெறும் என மாவட்ட அரச அதிபரால் சகல தரப்பினருக்கும் அழைப்பு அனுப்பப் பட்டிருந்தது.

இந்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தால் மேற்படி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை ஜனவரி 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு நேற்றுத் தொலைநகல் மூலம் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு கோரிக்கை விடப்பட்டமையால் இணைத் தலைவர்களை இணைக்கும் பணியில் அரச அதிபர் மீண்டும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-10)

யாழ்., வன்னி

கள், 25 பிரிகேடியர்கள், 32 கேணல்கள், 8 லெப்.கேணல்கள், ஒரு மேஜர் என்று 81 இராணுவ அதிகாரிகளுக்கு இடமாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவச் செயலாளராக மேஜர் ஜெனரல் ஜனக வல்கம நியமிக்கப்பட்டுள்ளார். வன்னிப் படைகளின் தலைமையகத் தளபதியாக மேஜர் ஜெனரல் உபுல் விதானகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கஜபாபடைப்பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவும், இயந்திர காலாட் படைப் பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவும், ஆட்டிலறிப் படைப் பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுமித்மான வடுவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத் தலைமையகத்தில் பொது அதிகாரிகளின் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவும், ஆயுதத் தளபாடப் பிரிவின் அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ் தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமுக்குப் பொறுப்பாகவும், மேஜர் ஜெனரல் லலித் தவுலகல இராணுவப் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பாகவும், மேஜர் ஜெனரல் மகிந்த குல சூரிய இராணுவ அணிவகுப்புப் பிரிவுக்குப் பொறுப்பாகவும், நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் மனோ பெரேரா மற்றும் மேஜர் ஜெனரல் மைத்ரி டயஸ் ஆகியோர் இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போர்க் குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ளவரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா 53 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இறுதிக் கட்டப் போரில் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதுடன், பின்னர் ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதியாகவும் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

மரண அறிவித்தல்

நாகமுத்து சாமுவேல்



சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த நாகமுத்து சாமுவேல் தனது 84ஆவது வயதில் நேற்று (11.01.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-ஞான சௌந்தரி தம்பதியரின் மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி (ராணி), தங்கராசா (சசி **J.P**, கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையம்), மல்லிகாதேவி), காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் (ஸ்ரீ), ரவீந்திரன் மற்றும் அஞ்சலிதேவி (றஞ்சி), ஜீவா (கலா), ஜெயா (பாப்பா), சிறீலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லத்துரை, பிறேமாவதி, மகாலிங்கம் (ஓய்வு பெற்ற ஊழியர், காணிப் பதிவகம், யாழ். மாவட்டம், உப தலைவர், யாழ்கோ, வலிதெற்கு கலாசாரப் பேரவை நிர்வாக உறுப்பினர்), பகீரதன் (ஒக்சன் வீடியோ சென்ரர்), மோகநாதன் (தலைவர், வலிகாமம் விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்), செல்வராசா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனும், அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற பூரணம் மற்றும் நல்லம்மா, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பாக்கியம், சின்னம்மா ஆகியோரின் சகோதரனும், காந்தரூபி (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய்), ஜெனார்த்தனன் (ரூபன்), ஜெயராம் (சவுதி), ரமா, ஜான்சி (**U.K**), ஜெனகன், காலஞ்சென்ற ஜெகன், விதுரன் (**T.O**) தர்சன் (சவுதி) கோகுலன் (டோகா), விதுரன் (யாழ் இந்துக் கல்லூரி) விதுசன் (இணுவில் மத்திய கல்லூரி), சிந்துஜா, நவயுகன் (யுகா, வர்த்தகர் திரு நெல்வேலி சந்தை), லாவண்ஜா, கீர்த்திகா (இணுவில் மத்திய கல்லூரி), ஒக்சிகா, ஒக்சன், விதுசன், பவகீதன், சங்கீர்த்தனா, பவநிதி, பூவேந்தன், புவியரசி, தமிழரசன், கனுஸ்திகா, பாணுஜன் ஆகியோரின் பேரனும், தருண்செயன், தருண்சிகா, எவோனிஸ்ரா, ருவிஸ்ரா, கிசானி, தக்சிதன், லோகீத், ஆரோண் நித்தீஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2016) பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மின்சாரநிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
0770710920,0776379948

தகவல்:
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் டொன் பொஸ்கோ பசில் சுரேந்திரன் (சுரேஸ்)

(உத்தியோகத்தர் - ஆட்பதிவுத் திணைக்களம்- வவுனியா)

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஆணையாளர் நாயகம் மற்றும் உத்தியோகத்தர்கள், ஆட்பதிவுசெய்யும் திணைக்களம் கொழும்பு மற்றும் வடமாகாணக் காரியாலயம் - வவுனியா

கண்ணீர் அஞ்சலி



மலர்வு
16 . 03 . 1963

உதிர்வு
09 . 01 . 2016

சோமசுந்தரம் தேவராஜன்
(மின்சாரசபை ஊழியர் யாழ் புறநகர் STS II)

எமது சக ஊழியர் சோ.தேவராஜனின் மறைவையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மின் அத்தியட்சகர், ஊழியர்கள் - இலங்கை மின்சார சபை மின் பாவனையாளர் சேவை நிலையம் (யாழ் புறநகர் - கொக்குவில்)

மரண அறிவித்தல்

இரகுநாதன் தணிகாசலம்

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரகுநாதன் தணிகாசலம் 10.01.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரகுநாதன்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை-இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலா தேவியின் அன்புக் கணவரும், தவயோகன் (**R.S.Shop** பண்டாரிக்குளம்), காலஞ்சென்ற சசிரூபன், அஜந்ததாசன் (பிரான்ஸ்), அமலன் (பிரான்ஸ்), சிவரூபினி (மென்பொருள் பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சிவஞானசுந்தரம்பிள்ளை, சிவானந்தராஜா, நாகேஸ்வரி மற்றும் சிவ பாதசேகரம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2016) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் வவுனியா பண்டாரிக்குளத்தில் நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டிரான்போமர் சந்தி,
பண்டாரிக்குளம், வவுனியா.

(சி/28662)(10,17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 10 . 1952

மறைவு
12 . 01 . 2014

அமரர்

திருமதி யோகராணி சிவசுப்பிரமணியம்

அன்பின் இலக்கணமாய்
பண்பின் சிகரமாய் வாழ்ந்தீர்கள்
இன்று ஏன் எம்மை விட்டுச் சென்றீர்கள்
என்றும் உம் நினைவுகள் எம்முடன் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

1010/34 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

மே.தீவுகள் முதலிடத்தில்; இலங்கைக்கு பின்னடைவு

ரி-20 தரவரிசையில் இலங்கையைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளது மேற்கிந்தியத் தீவுகள். ரி-20 ஆட்டங்களின் தரவரிசையில் இலங்கையே மிகவும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. 2012ஆம் ஆண்டிலிருந்து இலங்கையே முதலிடத்தில் இருந்து வருகிறது. இந்தியா அவ்வப்பொழுது முதலிடத்தைப் பிடித்து மொத்தமாக 4 மாதங்கள் மட்டுமே முதலிடத்தில் இருந்துள்ளது. ஆஸ்திரேலியாவும் இந்தியாவைப் போன்று பெரிதளவில் ஆதிக்கம் செலுத்தவில்லை.

இந்த நிலையில் இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு ரி-20 ஆட்டங்களிலும் தோல்வியடைந்ததால் முதலிடத்தைப்பறிகொடுத்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை புதிதாக வெளியிட்ட தரவரிசையில் மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளும் 118 புள்ளிகள் பெற்றுள்ளன.

தீவுகள் 118.36 புள்ளிகள் பெற்று சரியாக 118 புள்ளிகள் பெற்றுள்ள இலங்கை, ஆஸ்திரேலியாவை பின்னுக்குத் தள்ளியுள்ளது. ரி-20 தொடரில் முதலிடத்தில் உள்ள தீவுகள் டெஸ்ட் தரவரிசையில் 8ஆவது இடத்திலும், ஒருநாள் தரவரிசையில் 9ஆவது இடத்திலும் உள்ளது. (ம)

சம்பியனை எதிர்த்து சம்பியன் ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக்கொண்டஒருநாள்தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது.

5 ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும் மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும் விளையாடுவதற்காக டோனி தலைமையிலான இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது. முதலில் ஒரு நாள் தொடர் நடக்கிறது. இதன்படி இந்தியா-ஆஸ்திரேலியா மோதும் முதலாவது ஒரு நாள் ஆட்டம் உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த்தில் இன்று இந்திய, இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகிறது.

ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி அந்த அணிக்கு எதிராக நேரடி ஒரு நாள் தொடரில் இதற்கு முன்பு விளையாடியது கிடையாது. அங்கு இவ்விரு அணிகளும் நேரடி ஒரு நாள் தொடரில் சந்திப்பது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். அதே சமயம் இரண்டுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர்களில் இந்திய அணி பங்கேற்று இருக்கிறது.

அந்த வகையில் இந்திய அணி அங்கு இரண்டு உலகக்கிண்ணத் தொடர் உள்பட மொத்தம் 11 ஒரு நாள் தொடர்களில் விளையாடி இருக்கிறது. இதில் 1985ஆம் ஆண்டில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 7 அணிகள் மட்டுமே கலந்து கொண்ட உலக சம்பியன்சிப் ஒரு நாள் தொடரில் இந்திய அணி வாகை சூடியிருந்தது. இதன் இறுதி ஆட்டத்தில் இந்தியா 8 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அமர்க்களப்படுத்தியது. இதன் பின்னர் 2008ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா, இலங்கையுடன் சேர்ந்து களமிறங்கிய இந்திய அணி முத்தரப்பு ஒரு நாள் தொடரில் முதல்முறையாக மகுடம் சூடி வரலாறு படைத்தது. எஞ்சிய 9 தொடர்களில் இந்திய அணியின் செயல்பாடு பெரிய அளவில் இல்லை.

இந்திய அணி ஆஸ்திரேலியாவில் இதுவரை 88 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடி அதில் 36 ஆட்டங்களில் வெற்றியையும், 46 ஆட்டங்களில் தோல்வியையும் சந்தித்துள்ளது. 2 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தது. 4 ஆட்டங்களில் முடிவில்லை. இவற்றில் ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் 43 ஒரு நாள் ஆட்டங்களில் எதிர்கொண்டு இருக்கும் இந்திய அணி அதில் 10 ஆட்டங்களில் மட்டுமே வெற்றி கண்டிருக்கிறது. 31 ஆட்டங்களில் தோல்வியை தழுவியது. 2 ஆட்டங்களில் முடிவு இல்லை.

ஆஸ்திரேலியாவை அவர்களது இடத்தில் வீழ்த்துவது என்பது எளிதான காரியம் அல்ல. கடந்த மார்ச் மாதம் அங்கு நடந்த உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக 7 ஆட்டங்களில் வெற்றி பெற்றிருந்த இந்திய அணியின் வெற்றி நடைக்கு அரையிறுதியில் முட்டுக்கட்டை போட்டது ஆஸ்திரேலியா தான்.

முதலாவது ஆட்டம் நடக்கும் பேர்த் ஆடுகளம் வேகப்பந்து வீச்சாளர்களின் சொர்க்கமாகும். இங்கு ஆசிய வீரர்களில் முகமது யூசுப் (பாகிஸ்தான்)தவிரயாரும்சதம்அடித்ததில்லை. இவ்வாறான சிறப்பான பெறுபேற்றை வைத்திருக்கும் ஆஸ்திரேலியாவா? அல்லது வரலாற்றை மாற்றும், இந்தியாவா? ஆட்டம் இன்று ஆரம்பம். (ம)



கிவித்தோவா விலகல்?

சர்வதேச அந்தஸ்த்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடரில் கிவித்தோவா பங்குபற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

சர்வதேச அந்தஸ்த்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத்தொடர், எதிர்வரும் 18ஆம் திகதி மெல் போர்ணில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கு வீரவீராங்கனைகளைத் தயார்ப்படுத்தும் விதமாக சிறுசிறு தொடர்கள் சிட்னி, பிரிஸ்பெயின் போன்ற நகர்களில் நடை பெற்று வருகின்றன. சிட்னிதொடர் இன்று ஆரம்பமாகிறது.

இந்தத் தொடரில் பங்கேற்பதாக அறிவித்திருந்த கிவித்தோவா காயம் காரணமாக அந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார். ஆஸ்திரேலியத் தொடருக்கு முன்பாக சிட்னிதொடரில்விளையாபாதமை கிவித்தோவாக்கு பின்னடைவை ஏற்படுத்தும். மட்டுமல்லாது காயம் முழுமையாக குணமடையாதநிலையில்அவர்ஆஸ்திரேலியத் தொடரில் இருந்தும் விலகும் நிலை ஏற்படலாம் என்றார். (ம)



பாகிஸ்தான் கிரிக்கெட்டின் தலைவலி தீர்ந்தது

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ஆமிருக்கு சிறப்பான கட்டுப்பாடுகள் எவையும் விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு என்று விசேட கட்டுப்பாடுகள் எவையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவர் ஏனைய வீரர்களைப் போல் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்பொழுது ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் சிக்கினார் ஆமிர். இதனால் அவருக்கு ஐந்து வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடைக் காலம் முடிந்த பின்னர் தற்பொழுது அவர் பாகிஸ்தான் அணிக்குத் திரும்பியுள்ளார். தொடரின் பொழுது ஆமீரின் செயற்பாடுகள் மீது விசேட கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது ஆமிர் பவுண்டரிகள் கொடுத்தாலோ இலக்குகளை வீழ்த்தாவிட்டாலோ அவரின் செயற்பாடுகள் மீது சந்தேகம் தெரிவிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஆமிரின் செயற்பாடுகள் மீது முழுத்திருப்தி தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவர் அழுத்தங்கள் இல்லாமல் ஏனைய வீரர்களைப் போல் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19 ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் யூட், சாந்தன், கயன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'பி' அணியைஎதிர்த்துஅம்மன் அணி மோதவுள்ளது. (மு-23)

786 அணிக்கு இலகுவெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 12
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 19ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் யூட், சாந்தன், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியாயங்ஸ்ரார்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து 786 அணி மோதிக் கொண்டது. இதில் 786 விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (மு-23)

சம்பியனானது உருத்திரபுரம் அணி
உழவர் ஒன்றிய அணியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 12
கரைச்சி கால்பந்தாட்ட லீக் நடத்திய விலகல் முறையிலான தொடரில் உருத்திரபுரம் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.
கரைச்சி கால்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து உழவர் ஒன்றிய அணி உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதிக்கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததினால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. இதில் உருத்திரபுரம் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (மு-23)

பொங்கல் திருநாளை முன்னிட்டு வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் நடத்தப்பட்ட மரத நோட்டப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் சித்திரமேழிச்சந்தியில் இருந்து ஆரம்பமானது. முதலிடத்தை கீரிமலையை சேர்ந்த ஜெசிந்தன் கைப்பற்றினார். இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே அபில்ராஜ், விதுசன் இருவரும் கைப்பற்றினர். (மு)

மாகாணமட்டப் போட்டிகள் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பம்

கரணவாய், ஜன. 12
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி முதல் 5 கட்டங்களாக நடைபெறவுள்ளன. இதில் முதலாம், நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டப் போட்டிகள் யாழ். மாவட்டத்திலும், இரண்டாம் கட்டப் போட்டிகள் மன்னார் மாவட்டத்திலும் மூன்றாம் கட்டப் போட்டிகள் வவுனியா மாவட்டத்திலும் இடம்பெறவுள்ளன.
19 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான அரை மரதன் ஓட்டம் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
மே மாதம் 10ஆம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் இரண்டாம் கட்டப் போட்டியில் 15வயது, 19வயது இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டிகள் மன்னார் உள்ளரங்கிலும், எல்லே தொடர் முருங்கன் மத்திய மகா வித்தியாலயத்திலும், மேசைப்பந்தாட்டத் தொடர் மன்னார் உள்ளக விளையாட்டரங்கிலும் இடம்பெறவுள்ளன.
வவுனியாவில் இடம்பெறும் மூன்றாம் கட்டப் போட்டியில் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் மே 19ஆம், 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரியிலும், இருபாலாருக்குமான எறிபந்தாட்டம் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் அதே மைதானத்திலும் 25ஆம், 26ஆம், 27ஆம் திகதிகளில் ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடர் வவுனியா நகரசபை மைதானத்திலும் பெண்களுக்கான தொடர் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.
யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் ஏனைய போட்டிகளில் 15வயது, 17வயது, 19வயது இருபாலாருக்குமான கரேத்தே யாழ். இந்துக் கல்லூரியில் மே 31ஆம் மற்றும் ஜூன் முதலாம் திகதிகளிலும், முதலாம் 2ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டம் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் 15வயது, 19வயது இருபாலாருக்குமான பளுதூக்கல் மற்றும் சதுரங்கப் போட்டிகளும் 6ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடர் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் 19 வயதுப்பிரிவு இருபாலருக்குமான ஹொக்கித் தொடர் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.
11ஆம், 12ஆம் திகதிகளில் 15வயது, 19 வயது பெண்களுக்கான சதுரங்கமும் 13ஆம், 14ஆம் திகதிகளில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ரென்னிஸ் தொடர் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் ஜூன் 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் 15வயது, 19 வயது இருபாலாருக்குமான கரம் தொடர் யாழ். மத்திய கல்லூரியிலும் 15ஆம் திகதி 19 வயது இருபாலாருக்குமான உடற்பயிற்சியும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளன.
17ஆம், 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் 15 வயது, 17 வயது, 19 வயது ஆண்களுக்கான கால்பந்தாட்டமும் 19 வயதுப் பெண்களுக்கான கால்பந்தாட்டமும், 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளிலும் 15வயது, 17வயது, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் இடம் பெறவுள்ளன.
இறுதிக்கட்டமான தடகளத் தொடர் ஜூலை 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் இடம்பெறவுள்ளன. (மு-108)

பருத்தித்துறை லீக்கின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 12
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி அணியை எதிர்த்து கண்ணகி அணி மோதிக் கொண்டது. இதில் ஆதிசக்தி அணி 5:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில்நெற்கொழு கழுகுகள் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதிக் கொண்டது. இதில் நெற்கொழு கழுகுகள் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து வல்வை அணி மோதிக்கொண்டது. இதில்வல்வை அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (மு-23)

கால்பந்தாட்டத் தொடர்

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (மு-23)



இலங்கை தேசிய இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட 450 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (மு-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் ஆற்றில் கவிழ்ந்ததில் கால்பந்தாட்ட வீரர்கள் சாவு

மெக்சிக்கோவில் கால்பந்து வீரர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஆற்றில் கவிழ்ந்ததில் வீரர்கள் உட்பட 20 பேர் சாவடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிக்கோவின் வெராக்ருஸ் மாநிலத்தில் உள்ள அடோயக் நகராட்சியில் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்று தனது கட்டுப்பாட்டை இழந்து அடோயக் ஆற்றில் கவிழ்ந் துள்ளது. இந்தப் பயங்கர விபத்தில் அதில் பயணம் செய்த குழந்தைகள் உட்பட 20 பேர் சாவடைந்துள்ளனர். 10 பேர் படுகாயமடைந்துள்ளனர். குழந்தைகள் உட்பட உள்ளூர் போட்டிக்குச் செல்லும் கால்பந்து வீரர்கள் மற்றும் ரசிகர்களை அந்த பேருந்து ஏற்றிச் சென்றதும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையின் படி ஓட்டுனரின் அதிவேகத்தால் கட்டுப்பாட்டை இழந்தே பேருந்து விபத்துக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம)

இன்றைய காலிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 19வயதுப்பிரிவுஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்களில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும்முதலாவது ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. இரண்டாவது ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23-422)

சென்.பற்றிக்ஸ், புங்குடுதீவு ம.வி. அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், சென்.பற்றிக்ஸ், புங்குடுதீவு மகா வித்தியாலய அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளன

யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டுச்சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நேற்று திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன. முதலாவதாக இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி மோதியது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை ஆட்டம் நீடித்துச் சென்றது. இதில் புங்குடுதீவு மகா வித்தியாலய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

கட்டார் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிக் சம்பியனாகினார்

கட்டார் ரென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் நடாலை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார் ஜோகோவிக்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த இறுதி ஆட்டத்தில் ரபேல் நடாலை எதிர்த்து ஜோகோவிக் விளையாடினார். இவர்கள் இருவருக்கும் இடையிலான ஆட்டம் எப்போதும் கடுமையாக இருக்கும் என்பதால் ரென்னிஸ் அரங்கில் இது உன்னிப்பாக கவனிக்கப்பட்டது. உலக ரென்னிஸ் வீரர்கள் வரிசையில் முதல் இடத்தில் இருக்கும் ஜோகோவிக், இந்த ஆட்டத்தில் 6:1, 6:2 என்ற நேர் செற் கணக்கில் நடாலை எளிதாக வென்று கிண்ணத்தைக் கொண்டு சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் நடால் மீதான தனது ஆதிக்கத்தை ஜோகோவிக் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த இரண்டு வீரர்களும் மோதிய கடைசி 10 ஆட்டங்களில் ஜோகோவிக் 9 வெற்றிகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 5 ஆட்டங்களில் நேர்செற்களில் வென்றுள்ளார்.

வில்லியர்ஸை வீழ்த்த கோக்லிக்கு வாய்ப்பு

அதிவேகமாக 7ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை நிலைநாட்ட கோக்லிக்கு இன்னும் 8 இன்னிங்ஸ்களில் 169 ஓட்டங்களே தேவைப்படுகிறது.

சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் 7ஆயிரம் ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற சாதனை தற்பொழுது வில்லியர்ஸிடம் உள்ளது. அவர் 166 இன்னிங்ஸ்களில் 7ஆயிரம் ஓட்டங்களைக் குவித்திருந்தார். இவரது சாதனையை நெருங்கி வருகிறார் இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி. 158 இன்னிங்ஸ்களை எதிர்கொண்டுள்ள கோக்லி 6ஆயிரத்து 831 ஓட்டங்களைக் குவித்துள்ளார். வில்லியர்ஸின் சாதனையை முறியடிக்க கோக்லிக்கு இன்னும் 8 இன்னிங்களில் 169 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. இன்று இந்தியா -ஆஸ்திரேலியாத் தொடர் ஆரம்பமாகிறது. 5 ஒருநாள் ஆட்டங்கள் தொடரில் உள்ளன. கோக்லி சிறப்பாக செயற்படும் பட்சத்தில் இந்தத் தொடரிலேயே இந்த மைல் கல்லை எட்டமுடியும். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 16.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
மேது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேர்முடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
16.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
279, ஆஸ்பத்திரி மின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2724 திகதி 11.01.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
போனஸ் இல.
புதன்கிழமை ஜக்பொட்
07 10 56 63 J 32 ரூ. 20,999,125/-
2016.01.13 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 447
சீட்டிழுப்பு திகதி 2016.01.11
வெற்றி இலக்கங்கள்
25 26 31 39 I
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 44,908,360/=
ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1227
சீட்டிழுப்பு திகதி 2016.01.11
வெற்றி இலக்கங்கள்
12 22 25 65 Y
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,000,000/=

வீடு வாடகைக்குத் தேவை
வட்டுக்கோட்டை, சங்கானை ,பண்டத்தரிப்பில், வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது. குறைந்தது 3அறைகளுடன் வாகனம் விடக்கூடிய இடவசதி உள்ளதாக இருக்க வேண்டும். பிரதான பாதையில் வீடு விரும்பத்தக்கது.
தொடர்பு: 071 045 6456

ஆலய முகாமையாளர், உதவியாளர் தேவை
அராலியில் அமைந்துள்ள பிரபல ஆலயமொன்றுக்கு முகாமையாளர் மற்றும் உதவியாளருக்கான வெற்றிடம் உண்டு. இறை நம்பிக்கையும், சைவஆசாரங்களைக் கடைப்பிடிக்கும் ஒழுக்கசீலர்களாகவும் ஆலய பூசை முறைமைகள் மற்றும் ஆலய நடைமுறைகளைத் தெரிந்தவர்களாக இருப்பது நன்று. வயதெல்லை 40 - 65 அராலியை பிறப்பிடமாகக் கொண்டு வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விளம்பர இல: 5085
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

அறை வாடகைக்குத்தேவை
வடமாகாண கல்வியமைச்சில் பணிபுரியும் அலுவலர் ஒருவருக்கு கச்சேரி,நல்லூர், சங்கிலியன் வீதிக்கு அருகில் அறையொன்று வாடகைக்கு தேவை.
தொடர்பு: 077 905 2178

தேவை
கட்டட நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றிற்கு கட்டட நிர்மாணப் பணியில் சிறந்த அனுபவம் வாய்ந்த கூலி ஆள்களுக்கான உப ஒப்பந்தக்காரர்கள் தேவை.
தொடர்புக்கு: 077 8038567

வீடு வாடகைக்குத் தேவை
கோண்டாவில்/உரும்பிராய்/இணுவில்/கோப்பாய்/திருநெல்வேலி மற்றும் இதன் அண்மையிலுள்ள பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: 077 4655359, 075 0418541

(A - Negative) சிறுநீரகம் தேவை
A- குருதி வகையைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவருக்கு (A - Negative) குருதி வகையுடையவர்களின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு : 077 623 5454

விற்பனைக்குண்டு
பெறுமதியான மரத்தினாலான கட்டில்கள், மேசைகள், மெத்தையுடன் விற்பனைக்குள்ளன. பார்வையிட்டு விலை மதிப்பீடு செய்து பெற்றுக் கொள்ளலாம்.
5/6, கருவப்புலம் வீதி, மருத்துவபீட முன்ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

ஆங்கில ஆசிரியர் தேவை
உரும்பிராயில் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவமும், பிள்ளைகளுடன் நட்புறவாக பழகி அவர்களை ஊக்கப்படுத்துவதில் தேர்ச்சியுமுடைய ஆங்கில ஆசிரியர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தங்களது விவரங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 5084
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.